கண்ணன்

தீபாவளி மலர் 1957.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 NOV 1957
MADRAS

ரூ.1/-

இணையற்ற
எழிலுக்கு..
Remy
BORATED
REMY PRODUCTS
Remy
INDIA
Remy
SNOW
ரெமி
ஸ்னோ - பவுடர்
Aykan

குழந்தைகளே!

மகிழ்ச்சியும் இன்பமும் பொங்கும் இந்தத் தீபாவளிப் பண்டிகை நாளில், மணமும் சுவையும் நிறைந்த கண்ணன் மலரை உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். புனிதமான நீராடி, புது ஆடைகள் உடுத்து, பொலிவோடு விளங்கும் உங்கள் உள்ளத்திலெல்லாம் களிப்பும் இனிப்பும் பொங்கிப் பெருக, குழந்தைத் தெய்வமான கண்ணன் அருள் புரிய வேண்டும் என வாழ்த்துகிறேன்.

ஞானத் தேசும் தவ சிலமும் ஒளிரும் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் பிரதம சீடரும் ஸ்ரீ காமகோடி பீடத்தின் பட்டத்து இளைய சுவாமிகளுமாகிய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் உபந்நியாஸ மொழிகள் கண்ணன் மலரைப் புனிதமாக்குகின்றன. அந்த அருள் மொழிகள் உங்கள் உள்ளத்தையும் புனிதப்படுத்தி, உங்களுக்கு மலர்ச்சியும் மகிழ்ச்சியும் பூரணமாக உண்டாக்கும் என்பது நிச்சயம்.

இந்த மலரில் வழக்கம்போல், அறிஞர்களும் ஆசிரியர்களும் நவ நவமான கதைகளும் கவிதைகளும் எழுதி வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கதைகள் எல்லாம் நல்ல கருத்துக்களைக் காட்டி நம்மைக் களிப்பில் ஆழ்த்துகின்றன. வளரும் புது எழுத்தாளர்கள் தித்திக்கும் கதைகளும் அழகு சொட்டும் பாடல்களும் எழுதி மலரின் மணத்தைப் பெருக்கியிருக்கிறார்கள். கண்ணன் சித்திரப் போட்டியில் பரிசு பெற்ற இளம் ஓவியர்கள் எல்லாம் தம் கைவண்ணத்தைக் காட்டி மலரின் எழிலை மங்காமல் செய்திருக்கிறார்கள். எந்தப் பக்கம் புரட்டினாலும் எழிற் படமும் புகைப்படமுமாகத் தென்படும்படிச் செய்த ஓவியக் கலைஞர்களும் புகைப்பட நிபுணர்களும் மலரின் சுவையைக் கூட்டியிருக்கிறார்கள். எல்லாம் உங்கள் கருத்துக்குப் பெரு விருந்தாக விளங்கும் என்று நம்புகிறேன்.

ஆயர்பாடியில் வெண்ணெய் திருடி உண்ணும் கண்ணன், வீட்டுத் தலைவியின் கண்ணில் பட்டுவிடுகின்றான். அதைக் கண்ணனுக்கு முன் கண்ட நண்பனின் நடுக்கத்தை நாம் நேரில் உணர்வதுபோலவே இருக்கிறது. திருட்டைக் கையும் மெய்யுமாகக் கண்ட கோபி என்ன செய்வாளோ, கண்ணன் என்ன செய்வானோ என்ற வியப்பில் ஆழ்த்துகிறது அந்த முகப்பு வண்ணப் படம். அவன் பெருமாயக் கண்ணன் என்பது தெரிந்தும் நாம் வீண் கவலை கொள்கிறோம். கலைமகள் பத்திரிகைகளின் பிரதான ஓவியர் ஸாமி இந்த அற்புதமான ஓவியத்தை வழங்கி, நம் உள்ளத்தைக் கொள்ளைகொள்கிறார்.

மலரை முதலிலிருந்து பிரிப்பவர்கள், ஒவ்வொரு பக்கத்தையும் பாராமல், படிக்காமல் அடுத்த பக்கத்தைப் புரட்ட மாட்டார்கள் என்று நம்புகிறேன். வண்ணப் பொலிவு மிக்க சித்திரங்களை வருஷமெல்லாம் பார்த்து மகிழலாம்.

இந்த மலரினை இத்தனை சிறப்பாகப் படைக்க உதவிய அறிஞர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், புகைப்பட நிபுணர்கள் அனைவருக்கும் கண்ணன் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறான். அந்த நன்றியை, கண்ணனின் அபிமான நேயர்களான உங்களுக்கும் நினைவோடு கூறி, உளமாற வாழ்த்துகிறான்.

வாழ்க உங்கள் அன்பு! வாழ்க கண்ணன் சிறப்பு!

—ஆசிரியர்.



பொருளடக்கம்

மலர் : 8 இதழ் : 20

	பக்கம்
குழந்தைகளே! ..	1
குருபக்தி-ஸ்ரீமத் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்	4
ஒரு கைப்பிடி - கி. வா. ஜகந்நாதன் ..	7
பிள்ளையாரே! - கி. சந்திரசேகரன் ..	10
விடுகதைப் பாடல் - 'ஜோதி மாமா' ..	14
ஒரு கூடைப் பழம் - 'ஆர்வி' ..	16
பொய் சொல்லி ராஜா - பெ. தூரன் ..	17
வெடித்தது...? - கி. சரஸ்வதி அம்மாள் ..	21
ஆவாரங்காடு - தி. ஜ. ர. ..	25
சரியான பாடம் - 'ராஜி' ..	29
வளரும் எழுத்தாளர்கள் - புகைப்படங்கள் ..	33
மனித ஜாதி - மு. வரதராசன் ..	37
தங்க மீன் - கி. ரா; 'சுசி' ..	40
தீபாவளிக் கூத்து - 'லெமன்'	
அந்தியூர்ச் சந்தை - எ. ந. கணபதி	
அம்மாவும் குழந்யையும் - ஆர். சரஸ்வதி	
கடற்புலி - 'ஆர்வி' ; 'சாமி' ..	47
கண்ணன் சித்திரப் போட்டி-மூவர்ணப் படங்கள்	
பொழுது போக்கு - ஊறுகாய் ஜாடிகள் ..	49
போட்டோ க்விஸ் - என். ராமகிருஷ்ண ..	50
கோமாளிப் பரிசுகள் - 'ரகமி' ..	52
சித்திரக் கட்டம் - க. திருநாவுக்கரசு ..	53





வழி எப்படி? - 'ரகமி'	..	54
வெட்டி ஒட்டுங்கள் - ரகமி	..	55
ஒரு நாள் வேலை - சித்திர எழுத்துக் கதை	..	56
சேர்த்துப் பார் - 'ரகமி'	..	58
வேடிக்கைக் கணக்கு - 'ரகமி'	..	59
நரகாசுரன் சிரிப்பு	..	60
பொழுது போக்கு விடைகள்	..	62
நாயும் கிளியும் - ஸி. எஸ். விஜயா	..	63
ஏமாளித் திருநாள் - நீலம்	..	65
மேடைப் பேச்சு - 'சசிதேவன்'	..	70
இளம் எழுத்தாளன் - எஸ். விசுவநாதன்	..	72
இரவில் நடந்தது - கே. சுந்தரேசன்	..	77
சிங்கப்பூர் திருடர்கள் - ராஜன்	..	81
புகைப்பட வரிசை - வி. கே. சர்மா	..	86
வங்காளப் புலி - ப. ரா.	..	91
பெண்கள் வண்டியில் - ராஜலக்ஷ்மி	..	97
தீபாவளி வணக்கம் - 'உமா'	..	100
சவரனும் சைக்கிளும் - வி. ஆர். பாலன்	..	101
கவி கேதாரி - 'ஸேனு'	..	107
பலே நடிகர்! - பி. கே சாமி	..	110
டிரம் அடிக்கும் கோமாளி	..	
புது வியாபாரம் - 'நடனு'	..	113
புரட்சி ஓங்குக! - 'சுருமீன்'	..	118
பரீட்சை - சங்கரசுப்பு	..	123

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு, மணி,
உமாபதி, ஜோதி, குரு.

அட்டைப்படம்: ஸாமி

புகைப்படங்கள்: என். ராமகிருஷ்ணு,
வி.கே. சர்மா, மகாதேவன்.

குரு பக்தி ஜகத்குரு

நாம் எதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ருலும் பெரியவர்கள் மூலந்தான் தெரிந்துகொள்கிருேம். குழந்தை தன் தாயார் தகப்பஞர் யார் என்பதை, தாயாரிடத்திலிருந்தோ, தகப்பஞரிடத்திலிருந்தோ, அல்லது பெரியவர்கள் மூலமாகவோதான் தெரிந்துகொள்ள முடியும். மாதா, பிதா, குரு ஆகிய இந்த மூன்று பேர்களும் நமக்குப் பிரத்தியக்ஷ தெய்வங்கள். மாதாபிதாக்கள் நம் சரீரத்தைக் காப்பாற்றுகிருர்கள். ரோகம் வந்தால் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்கிருர்கள். அவர்கள் நம் தேகத்தைப் பொறுத்தமட்டும் ரக்ஷிப்பார்கள். ஆஞல் இந்தத் தேகம் திரும்பியும் திரும்பியும் ஜன்மம் எடுக்கக் காரணமாகிறது.

சம்சாரமென்கிறது ஒரு பெரிய வியாதி. அதிலிருந்து தப்பிக்க, குருதான் உபகாரம் பண்ண முடியும். எக்காலத்திலும் வியாதியில்லாத நிலையைக் கொடுக்க, குரு ஒருவரால்தான் முடியும். அவர்தான் கரையேற்ற முடியும். இவ்வளவு

2/1810.

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி

சுவாமிகள்

உயர்ந்தவரான குருவுக்கு உபமானம் ஏதாவது சொல்ல முடியுமா என்று பார்த்தால் - ஒருவன் பணக்காரனுக இருந்தால், குபேரன்போல் பணக்காரன் என்கிருேம்; அந்த மாதிரி குரு யாரைப்போல் இருக்கிருர் என்ருல், அவருக்கு நிதர்சனம் யாரும் இல்லை. ஆனுல் குருவின் சக்தி பரம்பரையாய் எல்லாச் சிஷ்யர்களுக்கும் வரக்கூடியது. குருவினிடம் பக்தி பண்ணினுல் வேண்டியதெல்லாம் கிடைக்கும். இதற்கு அநேக புராணக் கதைகள் உண்டு. ஓர் ஊரில் ஒரு குரு இருந்தார். அவரிடம் அநேகச் சிஷ்யர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒரு சிஷ்யன் மிகவும் மந்தபுத்தி யுள்ளவன். மற்றச் சிஷ்யர்கள் எல்லா வித்தையையும் கிரஹித் துக்கொண்டு மிகவும் மேதாவிகளாய் இருந்தார்கள். படிப்பை முடித்துக்கொண்டு குருவினிடம் அநுமதி பெற்றுக் கொண்டு போய்விட்டார்கள். இந்தச் சிஷ்யன் மட்டும் சுச்ரூஷை பண்ணிக்கொண்டு குருவினிடமே இருந்தான். அவனுக்கு அநுக்ரஹகாலம் வரவில்லை. இந்தச் சமயத்தில் குருவுக்கு ஒரு பெரிய வியாதி வந்துவிட்டது. பகவான் ஸ்வப் னத்தில் தோன்றி, ''நீ காசி வாசம் பண்ணினுல் உன் வியாதி ஸ்வஸ்தமாகும்'' என்ருர். இந்த மந்தபுத்தியான சிஷ்யனுடன் ஐந்தாறு சிஷ்யர்கள் இருந்தார்கள். ''நீங்கள் என்னைக் காசிக்கு அழைத்துக்கொண்டு போகிறீர்களா?'' என்று குரு கேட்டார். அவர்கள், ''எங்களால் முடியாது'' என்ருர்கள். அப்படித்தான் உலகஸ்வபாவம். ஒருவனுக்குப் பலமும் ஆரோக்கியமும் சம்பாத்தியமும் இருக்கும் வரைக்கும் பெண்டாட்டி, பிள்ளைகள், பந்துக்கள் கூட இருப்பார்கள். சம்பாத்தியம் இல்லாவிட்டால் ஒருவரும் லக்ஷ்யம் பண்ண மாட்டார்கள். ஆனுல் மந்தபுத்தி, ''நான் வருகிறேன்'' என்ருன். அவனை அழைத்துக்கொண்டு குரு காசிக்குப் போனுர். அவர் வியாதியோ மிகவும் கஷ்டமான வியாதி. சிஷ்யன் அவரைச் சிரமப்பட்டுக் கங்கைக்கு அழைத்துப்போய், ஸ்நானம் பண்ணிவைத்து அவருக்காகப் பிக்ஷை வாங்கி அவருக்குப் போடுவான். இவ்வளவு செய்தும் குரு அவனைக் கோபித்துக்கொள்வார். சாப்பாடு நன்ருய் இல்லை என்பார்.

அப்படியும் தவறாமல் சிஷ்யன் குருவுக்குச் சுச்ரூஷை எல்லாம் பண்ணிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் சிஷ்யன் கங்கைக்குச் சந்தியாவந்தனத்துக்காகப் போனான். அப்பொழுது மகாவிஷ்ணு கருடாரூடராய் வந்து, சிஷ்யனைப் பார்த்து, "நீ இவ்வளவு தீவிரமாக, குருசுச்ரூஷை பண்ணுகிறாயே! ஒரு வரம் கேள்; நான் தருகிறேன்" என்றார். சிஷ்யன் மகாவிஷ்ணுவைப் பார்த்து, "உங்களால் எனக்கு ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. எனக்கு உங்களிடத்திலிருந்து ஒரு வரமும் வேண்டாம்" என்று சொன்னான். உடனே மகாவிஷ்ணு சிவனிடத்தில் போய் இதைச் சொன்னார். இரண்டு பேரும் சிஷ்யனிடம் வந்தார்கள். பரமசிவன் சிஷ்யனுக்கு வரம் தருகிறேன் என்றார். மகாவிஷ்ணுக்குச் சொன்னபடியே சிஷ்யன் சிவனுக்கும் பதில் சொன்னான். பரமேசுவரன் நிர்ப்பந்தம் பண்ணினார். ஒரு தடவை, இரண்டு தடவை, பல தடவை சொல்லிப் பார்த்தார். அதன் பேரில், "என் குருவைக் கேட்கிறேன். அவர் வரம் வாங்கிக்கொள் என்றால் அவருக்கு வியாதி ஸ்வஸ்தமாக வேண்டும் என்றுதான் கேட்பேன்" என்று சிஷ்யன் சொன்னான்.

பிறகு சிஷ்யன் குருவினிடம் போய் நடந்ததைச் சொன்னான். "உனக்கு இஷ்டமிருந்தால் கேள்" என்று குரு சொன்னார். உடனே மகாவிஷ்ணு, பரமசிவன், மற்ற எல்லாத் தேவர்களும் வந்து குருவுக்கு வியாதி ஸ்வஸ்தமாக அநுக்ரஹம் பண்ணினார்கள். சிஷ்யனுக்கும் குரு பக்தியால் எல்லா வித்யையும் கிடைத்தது. இதிலிருந்து, குருபக்தி பண்ணினால் வித்யை, சம்பத்து எல்லாம் கிடைக்கும் என்று தெரிகிறது.

பித்ருபக்திக்கு ஒரு கதையுண்டு. நசிகேதஸ் என்று ஒரு பையன். அவன் தகப்பனார் ஒரு யாகம் பண்ணினார். அந்த யாகத்தில் தனக்குப் பிரியமான வஸ்துவைத் தானம் பண்ண வேண்டும். நசிகேதஸ் அப்பாவைப் பார்த்து, "என்னை யாருக்குத் தானம் பண்ணப்போகிறீர்கள்?" என்று கேட்டான். ஒரு தரம் கேட்டான், இரண்டு தரம் கேட்டான். அப்பாவுக்குக் கோபம் வந்தது. "உன்னை யமனுக்குத் தானம் பண்ணப் போகிறேன்" என்றார். ஆனால் உடனே மிகவும் துக்கப்பட்டார். அப்பொழுது நசிகேதஸ் அப்பாவைச் சமாதானம் பண்ணினான். "உங்கள் தாத்தா, தாத்தாவுக்குத் தாத்தா, எங்கே போனார்களோ, நீங்களும் எங்கே போகப் போகிறீர்களோ, அங்கேதான் நானும் போகிறேன். அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று யமலோகம் போனான். நசிகேதஸ் யமலோகம் போனபொழுது யமன் அங்கே இல்லை. பிறகு வந்ததும், நசிகேதஸ்ஸைப் பார்த்து, "எப்பொழுது வந்தாய்?" என்று கேட்டான். "நான் வந்து மூன்று நாள் ஆயிற்று" என்றான் நசிகேதஸ். மூன்றுநாள் காத்துக்கொண்டிருந்ததற்காக யமன் நசிகேதஸ்ஸுக்கு மூன்று வரம் கொடுத்தான். முதல் வரத்தால், "என் அப்பாவுக்குக் கோபம் தணியவேண்டும்" என்று கேட்டான். பாக்கி இரண்டு வரம் ஆத்மதத்வத்தைப்பற்றிக் கேட்டான். யமன் முதலில் சொல்ல விரும்பவில்லை. அப்பொழுது நசிகேதஸ், "சத்யம் என்பது எங்களுக்குத் தானா? உங்களுக்கு இல்லையா?" என்று கேட்டான். பிறகு யமன் நசிகேதஸ்ஸுக்கு உபதேசம் பண்ணினான். நசிகேதஸ் வரத்தைப் பெற்றுக்கொண்டு மறுபடியும் தந்தையிடம் வந்தான். அவன் பிரம்ம ஞானியாய்த் திரும்பிவந்ததைப் பார்த்து, "உன் பிராப்தி எனக்குக் கிடைக்கவில்லையே! என் அஞ்ஞானம் தொலையவில்லையே!" என்று அவன் தகப்பனார் வருத்தப்பட்டார். இந்தக் கதை, பித்ருபக்தியின் விசேஷத்தைக் காட்டுகிறது.

மாத்ருபக்தி எல்லாரும் காட்ட வேண்டும். பிறந்தது முதல் கடைசி வரைக்கும் மாதாதான் நம்மைக் காப்பாற்றுகிறாள். நமக்கெல்லாம் மாதா, பிதா, குரு இவர்கள் பிரத்யக்ஷ தெய்வங்கள். அவர்களுக்குக் கைங்கர்யம் பண்ணிக்கொண்டு எல்லோரும் க்ஷேமமாய் இருக்க வேண்டும்.

ஒரு கைப்பிடி

கி.வா.ஜகந்நாதன்

எங்கே பார்த்தாலும் மக்கள் பசி பசி என்று அலறினார்கள். வானம் மாரி பெய்யவில்லை. மக்களுடைய கண்கள் மாரியைச் சொரிந்தன. ஆனால் நாளடைவில் அதற்குக்கூடக் கண்ணில் நீர் இல்லாமல் போயிற்று. நாட்டின் அரசன் இறந்து போனதிலிருந்து பஞ்சமும் பட்டினியும் தலை விரித்து ஆடின. அந்த அரசனுடைய புதல்வன் பட்டம் கட்டிக்கொண்டான். அவனுடைய பொல்லாத காலம், அவன் வந்தது முதல் மழையே இல்லை.

நாட்டில் உள்ள மனிதர்கள், ''எந்த வேளையில் இந்தப் புண்ணியவான் முடியைச் சூடினானோ! மழையே இல்லாமற் போயிற்று'' என்று இழிவாகப் பேசினார்கள். அந்தச் செய்தி புதிய அரசனுடைய காதில் விழுந்தது. அதனால் அவன் சிறிதும் கோபம் கொள்ளவில்லை. அவர்கள் தம்முடைய தொல்லை தாங்காமல் அப்படிச் சொல்கிறார்கள் என்றே எண்ணினான்.

ஆனால் இப்படியே இருந்தால் எல்லோரும் படும் துன்பத்துக்கு ஓர் எல்லை இல்லையா? என்ன செய்யலாம் என்பதை இரவும் பகலும் சிந்தித்த வண்ணமாக இருந்தான் அரசன். மழை பெய்தாலொழியப் பஞ்சம் தீராது. மழை பெய்ய என்ன செய்வது?

அப்போது யாரோ ஞானி ஒருவர் ஊருக்குப் பக்கத்தில் உள்ள சோலையில் வந்து தங்கியிருக்கிறார் என்று கேள்வியுற்றான் அரசன். அவரிடம் சென்று பஞ்சம் தீர வழி ஏதாவது இருந்தால் அறிந்து வரலாம் என்று எண்ணிய அரசன் கையுறைகளோடு போய் அவரை வணங்கினான். பிறகு தன் குறையை எடுத்துச் சொன்னான். அவர் தம்மிடம் இருந்த ஒரு பெரிய சாம்ராணிக்கட்டியை அரசனிடம் கொடுத்து, ''ஏதாவது ஒரு கோயிலில் கடவுள் சந்நிதியில் நெருப்பைப் போட்டு, நல்லவர்கள் என்று தோன்றுகிறவர்களிடம் இந்தக் கட்டியிலிருந்து சிறிது எடுத்துக் கொடு. அவர்கள் அந்த

நெருப்பில் சாம்பிராணியைத் தூவட்டும். யார் தூவும்போது வெள்ளைப் புகை வருமோ அவரால் நாட்டுக்கு நல்லது உண்டாகும். வேறு விதமான புகை வந்தால் வேறு வேறு பலன் ஏற்படும்'' என்று சொல்லி அனுப்பினார்.

அரசன் அரண்மனைக்கு வந்தான். அரண்மனை எல்லைக்குள் இருந்த கோயிலில் ஒரு பெரிய வாய் அகன்ற பாத்திரத்தில் நெருப்பை இடச் செய்தான். முதல் முதலில் தானே சாம்பிராணியைச் சிறிது எடுத்து அதில் போட்டான். அதிலிருந்து மஞ்சளான புகை எழுந்தது. அந்தப் புகையிலிருந்து இரண்டு தங்கக் கட்டிகள் விழுந்தன. அவற்றை எடுத்து வைத்துக்கொண்டான். பிறகு தன் மந்திரிகளில் நல்லவர் என்று எண்ணிய ஒருவரை அழைத்துச் சாம்பிராணியைப் போடச் செய்தான். அவர் போட்டவுடன் நீலப்புகை எழுந்தது. அந்தப் புகையிலிருந்து இரண்டு நண்டுவாய்க்காலிகள் விழுந்தன. மந்திரியும் அரசனும் அஞ்சி நகர்ந்தார்கள். அருகில் இருந்த ஏவலர்கள் அவற்றைக் கொன்றுவிட்டார்கள். அதற்கப்புறம் கண்ட பேரிடம் சாம்பிராணியைக் கொடுத்துப் போடச் சொல்லப் பயந்தான் அரசன்.

அவனுடைய குலகுரு வந்தார். அவர் நல்லவர்; பக்தி உடையவர். அவர் போட்டவுடன் சிவப்புப் புகை எழுந்தது. நாலைந்து சிவப்பு மலர்கள் உதிர்ந்தன. தாம் புகையை எழுப்பினால் பாம்போ பல்லியோ விழுந்தால் என்ன செய்வது என்ற பயம் பலருக்கு வந்துவிட்டது. அப்படி விழுந்தால் அவர்கள் பொல்லாதவர்கள், பாவிகள் என்று ஊரார் சொல்லத் தொடங்குவார்கள் அல்லவா? சாம்பிராணி தூவிய மந்திரியைப் பொல்லாதவர் என்று கருதி அரசன் வேலையைவிட்டுத் தள்ளிவிட்டான்.

இப்போது யாரும் சாம்பிராணி தூவ முன்வரவில்லை. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டால் என்ன செய்வது என்று அஞ்சி நடுங்கினார்கள். முனிவர் தனக்கு அருள் செய்தும் பயன் இல்லாமல் போகின்றதே என்று அரசன் வருந்தினான்.

அந்த ஊருக்கு ஒரு பிச்சைக் காரச் சிறுமி வந்தாள். அவள் பிச்சை வாங்கிச் சாப்பிட்டாலும் தான் சாப்பிடுவதற்கு முன் நாய்க்கோ பூனைக்கோ ஏழைக் குழந்தைக்கோ ஒரு பிடி சோறு போட்டுத்தான் சாப்பிடுவாள். அவள் அந்த ஊருக்கு வந்தபோது எங்கும் சோறே கிடைக்கவில்லை. ஊரில் பஞ்சமும் பட்டினியுமாக இருக்கும் போது அவளுக்கு யார் சோறு போடப் போகிறார்கள்?

சோறு உண்ணாத சோர்வோடு அந்தப் பெண் அரண்மனை வாசலை அடைந்தாள். அங்கே ஜனங்கள் கூடிக் கூடிச் சாம்பிராணித் தூபத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவள் நின்று கவனித்தாள். சிலரை விசாரித்தாள். ''பிச்சைக்காரிக்கு இந்த வன்மையெல்லாம் எதற்கு?'' என்று எல்லோரும் சொல்லி விட்டார்கள். ஒரு பையன் மாத்திரம் சமாசாரத்தைச் சொன்னான். அந்தப் பெண், ''நான் சாம்பிராணி போடலாமோ?'' என்று கேட்டாள். எல்லோரும் அதைக் கேட்டுச் சிரித்தார்கள். அப்போது அவ் வழியே வந்த அரசனைக் கண்டதும் யாவரும் விலகி நின்றார்கள். அவர்களுடைய சிரிப்பொலியைக் கேட்டுக்கொண்டே வந்த அவன் விசாரித்த போது செய்தி தெரிய வந்தது. 'எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ! இவள்தான் போட்டுப் பார்க்கட்டுமே!' என்று எண்ணினான். உடனே அந்தப் பிச்சைக்காரப் பெண்ணை அழைத்து வரச் செய்து, ''நீ சாம்பிராணி தூவினால் பாம்போ தேளோ விழுந்தால் என்ன செய்வது?'' என்று கேட்டான். ''ஆண்டவன் அருளால் அப்படி ஒன்றும் நடவாது என்றே நினைக்கிறேன்'' என்றாள் அவள்.

அரசனுடைய ஏவலாளர்கள் அவளைக் கோயிலுக்கு அழைத்துச் சென்றார்கள். கடவுளின் சந்நிதியில் உள்ள தூபச் சட்டியைக் காட்டிவிட்டுத் தாங்கள் நெடுந் தூரம் விலகி நின்றார்கள். அந்தச் சிறு பெண் அங்கே வந்தாள். கடவுள் முன் விழுந்து வணங்கினாள். சிறுது நேரம் சுவாமியைத் தியானம் செய்தாள். பிறகு சாம் பிராணியை எடுத்துக் கனலில் தூவினாள். உடனே ஒரே வெள்ளையான புகை, நீராவி போல எழுந்தது. அதன் மணம் எங்கும் படர்ந்தது. உடனே வானம் கறுத்தது. சிறிது நாழிகையில் மழை பொழியத் தொடங்கிற்று.

அரசன் வியப்பில் ஆழ்ந்தான். குடி மக்கள் அந்தச் சிறுமியை வணங்கினார்கள். அவளோ, ''நான் பிச்சைக்காரி. என்னை ஏன் வணங்குகிறீர்கள்?'' என்று கேட்டபடியே சுவரோரமாக ஒதுங்கினாள்.

மழை நெடுநேரம் பெய்தது. இத்தனை காலம் தேடியும் கிடைக்காத நல்லவள் கிடைத்து விட்டாள். அவள் ஏழை, பரதேசி என்று சொல்வது? அவளுக்கு அரசன் உடனே வேறு உடை அளித்தான்; உணவு அளித்தான். ''நீ இனி நம் அரண்மனையிலேயே இருந்துவிடு'' என்று கேட்டுக் கொண்டான்.

அவளிடம், ''உன்னிடம் ஏதோ மகிமை இருக்கிறது. அது என்ன?'' என்று கேட்டான். ''உண்ணும் போது ஒரு கைப்பிடி குழந்தைக்காவது ஏதாவது பிராணிக்காவது கொடுத்த பிறகுதான் சாப்பிடுவேன்'' என்றாள். ''அந்தத் தர்மந்தான் இப்படி விளைகிறது'' என்று ஆனந்தம் அடைந்தான் அரசன்.

அந்தச் சிறுமி அரண்மனையிலே வளர்ந்து அந்த ராஜாவின் தம்பியைக் கல்யாணம் செய்துகொண்டாள்.

பிள்ளையாரே!

கி. சந்திரசேகரன்

நச்சு என்னுடன்கூட, பிள்ளையார் பிடிக்க உட்கார்ந்து கொண்டான்.

அவனுக்கு வயசு இன்னும் நான்கு நிரம்பவில்லை. ஆனால் அவனுக்குத் தன்னைப்பற்றி அசாத்திய நம்பிக்கை. நான் எதைச் செய்தாலும் தானும் அதைச் செய்வான். செய்வதுமட்டுமல்லாமல், தன் பெருமையை வீட்டுக்கு வந்தவர்களிடமெல்லாம் சொல்லிக்கொள்வான்.

பிள்ளையார்ச் சதுர்த்திக்கு மூன்று நாட்கள் முன்பாகவே என் மனைவி வழக்கம்போல் பிள்ளையார் பிடிக்கக் களிமண் வெட்டிவர எங்கள் வேலைக்காரனிடம் உத்தரவிட்டாள். நச்சு அதைக் கேட்டுக்கொண்டிருந்தான். ''அம்மா, யாரு பிள்ளையார் பிடிக்கப் போறா? அப்பாவா?'' என்றான்.

''அப்பாதான் பிடிக்கப்போறா; நீயும் பார்த்திண்டிரு'' என்றாள் என் மனைவி.

உடனே நச்சு, ''நானும் பிள்ளையார் பண்ணப்போகிறேன். நீ பார்த்திண்டிரு'' என்று ஆரம்பித்து விட்டான்.

என் மனைவி சிரித்துவிட்டு, ''சரி, நீயும் பண்ணு. ஆனால் மண்ணை வாரி மேலெல்லாம் பூசிண்டியோ, பூசைதான் அப்புறம். தெரியுமா?'' என்றாள்.

''நீதான் பூசிப்பாய். நான் ஒண்ணும் மண்ணைப் பூசிக்கவே மாட்டேன்'' என்றான் நச்சு.

இப்படிப் பேச்சு நடந்திருப்பதை நான் ஊகிக்கவில்லை. நான் பிள்ளையார்ச் சதுர்த்தியன்று காலையில் ஸ்நான அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு என் மனைவி தயாராகப் போட்டிருந்த மணையில் அமர்ந்து, எதிரே பீடத்தில் மண்ணைப் பிசைந்து வைத்திருந்ததை எடுத்து என் கலைத்திறனைக் காட்ட முற்பட்டேன்.

பக்கத்தில் நச்சு தானும் என் மாதிரியே ஒரு மணையில் அமர்ந்து தனக்கும் களிமண் வேண்டும் என்று தொந்தரவு செய்ய ஆரம்பித்துவிட்டான். என் மனைவி தொந்தரவை நினைத்துப் பயந்து அவனுக்கும் களிமண் பிசைந்து வைத்தாள்.

நான் பிள்ளையார் பிடித்துக் குரங்காக்கியது கிடையாது. அழகாகப் பெரிய தொந்தியை உருவாக்கி, அதன்பின் தலையையும் துதிக்கையையும் சேர்த்தேன். மண் உருண்டைக்குப் பிற்பாடு கைகளில் மோதகங்களை உருண்டையாய்ச் செய்து வைத்தேன். ஒரு காலை மடித்தும் மற்றொன்றைக் குத்திட்டும் அமைத்து, பிள்ளையாரை மிக அழகாய் அமர்ந்திருக்கும் கோலத்தில் செய்துவிட்டேன்.

எனக்கே என் பிள்ளையாரிடம் அபார மரியாதை உண்டாகி விட்டது. முன்னைவிடப் பிள்ளையார் தொந்தியுடன் கம்பீரமாய்ப் பார்த்துக்கொண் டிருப்பதை ரசித்தேன். ''நன்றாக இல்லையா?'' என்று என் மனைவியைக் கேட்டேன். அவள், ''பிள்ளையாரை உட்கார வைத்து விட்டீர்களா?'' என்றாள்.

''உட்காருவதுதான் பொருத்தம். நன்றாய்க் கொழுக்கட்டையைத் தின்றவருக்கு எழுந்து நிற்க முடியுமா?'' என்றேன்.

நச்சுவின் கை வேலையை. நாங்கள் கவனிக்கவில்லை. பெரிதாய் உருண்டையை அவன் வைத்துவிட்டு இரண்டு மூன்று சிறு உருண்டைகளை அதன்மேல் ஏற்றிவிட்டு, கைகளைக் கொட்டிக்கொண்டு, ''அப்பா பார்த்தாயா? உன் பிள்ளையாரைவிட என்னுதுதான் ஜோராயிருக்கு. அம்மா! அப்பா பிள்ளையார் நன்றாவே இல்லை. என்னுதுதான் நன்றாயிருக்கு'' என்றான். பிள்ளையாரைத் தூக்கமாட்டாமல் தூக்கிக்கொண்டு பூஜை அறையினுள் நுழைந்து என் கலைச் சிருஷ்டியின் பக்கத்திலேயே தன் மண் உருண்டையையும் வைத்தான்.

எனக்குக் கோபம் வந்தது.

''டேய் நச்சு! எடுடா, உன் மண்ணாங்கட்டியை'' என்றேன். உடனே பதிலுக்கு அவனும், ''உன் மண்ணாங்கட்டியை எடுப்பா; என் பிள்ளையார் பக்கத்தில் ஏன் வைக்கறே?'' என்று கூக்குரலிட்டான்.

அதனுடன் நிற்காமல் அவன் ஓடிச் சென்று, என் பிள்ளையார் இருந்த பீடத்தை அப்படியே தன் பிஞ்சுக் கைகளால் தூக்க முயன்றதும், உண்மையிலேயே எனக்குப் பயம் உண்டாகிவிட்டது. அவனைச் சட்டெனத் தடுத்து, ''சரி, சரி, உன் பிள்ளையாரைவிட என்னுது மட்டந்தான். சும்மா இரு'' என்றேன்.

நச்சுவின் சந்தோஷத்துக்கு அளவேயில்லை. புரோகிதர் வந்ததும், ''வாத்தியார், என் பிள்ளையாருக்குக் குடை வையுங்கோ! பாருங்கோ, என் பிள்ளையாரை! நானும் பூஜை பண்ணப்போகி

யுக்தி பலித்தது!

றேன்'' என்று கொம்மாளம் போட்டுக் குதித்தான்.

''இது ஏதுடா வம்பாயிருக்கு! பூஜை வேறு உன் பிள்ளையாருக்கு?'' என்றேன்.

''ஆமாம், உன் பிள்ளையாருக்கு மட்டும் பூஜையோ? என் பிள்ளையாருக்குந்தான்'' என்று சண்டித்தனம் செய்தான்.

சமயலறையில் நைவேத்தியப் பண்டங்களைத் தயாரித்துக்கொண்டிருந்த என் மனைவி, ''ஏன் அவனுடன் வம்புக்குப் போகிறேள்? குழந்தை அப்படித்தான் சொல்லும்; தன்னாலே மறந்துபோயிடும்'' என்றாள், என்னைச் சமாதானம் செய்வது போல்.

நச்சுவையா ஏமாற்ற முடியும்? ''நானும்தான் பூஜை பண்ணுவேன்! அம்மா, நான் இங்கிருந்து போகவே மாட்டேன்'' என்று அவனுடைய சிவப்புப் பட்டைக் கோணலும் மாணலுமாய்க் கட்டிக்கொண்டு குனிந்து குனிந்து பார்த்துக்கொண்டே, ''ஜோராய் இல்லே, அம்மா? அப்பாவுதுதான் நன்னாயில்லே!'' என்றான்.

இதனிடையில் புரோகிதர் பூஜையைத் தொடங்கலாமென மணியைக் கிணுகிணுவென்றுஅடித்தார். நான் கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு பூஜையை ஆரம்பித்தேன். ஒவ்வொன்றையும் நச்சுவும் விடாமல் செய்தான்.

பூஜை நடுவில் நைவேத்தியங்களைப் பிள்ளையாருக்கு உபசரிக்கும் கட்டம் வந்தது. அடுக்குகளில் கொழுக்கட்டைகளையும், வடை, பாயசம் முதலியவைகளையும் கண்டதும் நச்சு, ''ஏம்மா, பழம் வச்சிருக்கியே அதென்னம்மா?'' என்று நாகப்பழத்தையும் பிரப்பம் பழத்தையும் சுட்டிக் காட்டினான்.

''வெறுமனே இருடா!'' என்று நான் அவனை அதட்டினேன். அவன் சும்மாயிருப்பானா? ''அம்மா, எனக்கு அதிரசம் வேணும்'' என்று ஆரம்பித்தான்.

நான் உடனே ''பூஜை மாத்திரம் செய்யணும். சாமிக்கு நைவேத்தியம் பண்றதுக்குள்ளே என்ன அவசரம்?'' என்று கூறி அவனை லேசாய்த் தட்டினேன் முதுகில்.

அது தப்பாகிவிட்டது. திடீரென்று எழுந்து, அதிரசம் ஒன்றை வெடுக்கென்று எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, ''இப்போ என்ன பண்ணுவே?'' என்று ஓடி, தூரத்தில் நின்று கடிக்கத் தொடங்கினான். அவனைத் தின்னாமல் சற்றுத் தாமதிக்க வைக்கப்பட்ட பாடு தெய்வம் அறியும்!

என் மனைவிக்குப் பூஜை, நைவேத்தியம், இவைகளில் எல்லாம் மிகவும் சிரத்தை. நச்சுவின் போக்கிரித்தனத்தை அவளால் தாங்க முடியவில்லை. ''இந்தா, நீ மாத்திரம் தின்னு; என்ன செய்கிறேன் பாரு. பிள்ளையார் ராத்திரி வந்து கண்ணைக் குத்துவார். நிச்சயம்'' என்றாள்.

நச்சுவுக்கு யோசனை ஏற்பட்டது. ''ராத்திரியா? எப்படிக் குத்துவார்? நான் அம்மா பக்கத்திலே தானே படுத்துக் கொள்கிறேன்'' என்றான்.

எனக்கு அவன் பேச்சு சிரிப்பைத்தான் கிளப்பியது. அவன் மனசைக் கண்டு வியந்தேன். ஒரு கணம் கோபம், ஒரு கணம் அழுகை, மறு கணம் பிடிவாதம், இந்த மாதிரிப் பயமே தெரியாத பேச்சு: அவனைக் கட்டி அணைப்பதைத் தவிர வேறு என்ன செய்வது? எத்தனை பூஜைகள் செய்தாலும் நச்சுவின் மனத்திலுள்ள காரணமற்ற நிலையில்லாத துக்கம் சந்தோஷங்களைப் போல் என் மனத்திலும் ஏன் இல்லை? எனக்கு அதில் அதிருப்திதான்.

பூஜையை முடித்தோம். பிள்ளையாரைப் புஷ்பங்கள், அருகம்புல் முதலியவை நன்றாய் மூடிக்கொண்டுவிட்டன. நச்சுவுக்கு இரண்டு பிள்ளையாரையும் மூடிய புஷ்பங்களைச் சிறிது ஒதுக்கவேண்டும் போல் ஆசை.

''அம்மா, பிள்ளையாருக்கு மூச்சுப் போயிடாது?'' என்று சந்தேகத்தோடு கேட்டான்.

என்ன அவனுக்கு பதில் சொல்வதெனத் தெரியாமல் ''சரிதான், எல்லாம் மூச்சு விடுவார். வா

நச்சுவும் பிள்ளையார் பிடித்தான்....

போவோம்'' என்று கரகரவென்று கைகளைக் கட்டி இழுத்துக் கொண்டே பூஜை அறையைவிட்டு வெளியே வந்தேன்.

மறுநாள் புனர் பூஜையை வாத்தியாரிடம் நான் விட்டுவிட்டேன். நச்சுவும் புரோகிதரிடம், ''வாத்தியார், என் பிள்ளையாரையும் நீங்களே பாத்துக்குங்கோ'' என்று சொல்லிவிட்டான்.

சாயந்தரம் நான் ஆபிசிலிருந்து வீடு திரும்பியதும், ''பிள்ளையாரை வேண்டுமானால் குளத்தில் போட்டு விடச் சொல்லட்டுமா?'' என்றாள் என் மனைவி. எனக்கு உடனே என் பிள்ளையாரை மறுபடியும் பார்க்க அவா உண்டாகியது. பிள்ளையார் நன்றாய் ஈரம் காய்ந்து கெட்டிப் பட்டிருந்தார். நீண்ட கையும் காலும் துதிக்கையுமாய், பிரம்மாண்டமாய்க் காட்சியளித்தார். எனக்கு இவ்வளவு பாடுபட்டுச் செய்த கலைச் சிருஷ்டியை உடனே அழிப்பதா என்றே ஒரு மனத் தாங்கல் உண்டாகியது. என் மனைவியிடம், ''குளத்திலே போடத்தான் வேண்டுமா? இருக்கட்டுமே, அங்கேயே!'' என்றேன்.

ஆனால் நச்சு அம்மாவிடமிருந்து அறிந்த செய்தியினால் மிக மிக உற்சாகத்துடன் தனது பிள்ளையாரைத் தூக்கிக் கொண்டு, ''வா அப்பா, நீயும். குளத்திலே 'தொபுகடீர்'ன்னு பிள்ளையாரைப் போடலாம்'' என்றான். துளியும் அவனிடம் மனத் தாங்கலையே காணோம். அவனைப் பார்த்து எனக்கு வியப்பாயிருந்தது. நேற்று வரை ''என் பிள்ளையார், என் பிள்ளையார்'' என்று சொன்னவன், எவ்வளவு சீக்கிரத்தில் குளத்தில் அதை எறிய மனத்தைச் சரிப்படுத்திக்கொண்டு விட்டான்! இதில் மட்டும் அவன் ஏன் என்னைப்போல், 'பிள்ளையாரை இங்கேயே பரண்மேலேயே வைத்து விடலாம்!' என்று கூற இஷ்டப்பட வில்லை? இதுதான் என் பிரச்னை.

அவ்வளவும் அழியும் பொருள்கள்தான் என்ற உண்மை எனக்கு நன்றாய்த் தெரியும். நச்சுவுக்குத் தெரியாது. ஆனால் அவனுக்கு எதிலும் தீவிரமான பாசமோ, பயமோ, கவலையோ காண வில்லையே! ''பிள்ளையாரே! நீதான் நச்சுவைப்போல் என்னையும் செய்ய வேண்டும்'' என்று வேண்டினேன்.

வேடிக்கைப் பாடல்கள்

மருந்துண்பான் ஆனாலும்
நோய்ஒன் றில்லை
மயிர்இல்லா விட்டாலும்
பின்னல் உண்டு
பொருந்தியுள்ள திரிஉண்டாம்;
எண்ணெய் இல்லை
புஸ் என்பான்; பட்டென்பான்;
வாயே இல்லை. (1)

கொர்கொர் தப்பம்மா
கூத்தாடும் தப்பம்மா
வெள்ளைப்பழம் காய்த்துவிட்டால்
வேலை செய்யாள் தப்பம்மா! (2)

தோட்டத்திலே தலையை ஆட்டி
நின்ற பெண்அவள்
சோறிடுவேன் வா என
வீட்டுக் கழைத்தேன்
வாட்டம் அறத் துடைத்துவிட்டுச்
சோற்றை ஊட்டினேன்
வாசலிலே விட்டுவிட்டேன்
பறந்து போகிறாள்! (3)

ஜோதிமாமா



கிள்ளினாலும் ரத்தம் இல்லை
இழுத்தாலும் ரத்தம் இல்லை
கள்ளிஅவள் தனைப்பல்லால்
கடித்தால்தான் ரத்தம் வரும்.(4)

கோயிலுக்குப் போவதிலே
கெட்டிக் காரி
கூடவே குடுமிவைத்த
ஒருவன் போவான்
சாயமிடா மேனியெல்லாம்
தங்க வண்ணம்
தச்சன்செய்யாச் சீப்புண்டு
சாற்று வீரே! (5)

வண்ணான் வெளுக்காத வெள்ளை
மழை பெய்யாத தண்ணீர்
குலாலன் பண்ணாத ஓடு
கூட்டி முடியாத குடுமி! (6)



விடைகள்: 62-ஆவது பக்கம்

ஒரு கூடை மாம்பழம்

'ஆர்வி'

சுகுமாரனுக்குத் தனக்காக அதிகம் தெரியாதே தவிர, சொன்னால் சொன்னதைச் செய்து விடுவான்! இது அவன் அப்பாவுக்குத் தெரியும். அவனை மேல் வகுப்புப் பெட்டியில் ஏற்றிவிட்டு விட்டு, ''பழக்கூடை பத்திரம்; வழியில் பிரிக்காதே!'' என்று சொல்லிச் சென்றார் அவர்.

சுகுமார் தொழில் படிப்புக்காகச் சென்னை போகவேண்டும். அவன் அப்பாவுடைய நண்பர் தொழிற் கல்லூரி நிர்வாகியாக இருந்தார். ரெயிலை விட்டு இறங்கியதும் உறவினர் வீட்டுக்குப் போகவேண்டும்; உடனே குளித்துவிட்டு, அந்த நிர்வாகியைப் பார்க்கப் போகவேண்டும். அப்பாவின் நண்பர் ஆனதால் வெறும் கையோடு போகலாமா? அதனால்தான் தோட்டத்தில் பழுத்த பாதிரி வகை மாம்பழங்களை அவன் அப்பா ஒரு கூடை கொடுத்தனுப்பியிருந்தார்.

போட் மெயில் சிதம்பரம் ஸ்டேஷனில் நின்றது. அங்கே ஓர் அம்மாள் நாலு வயதுக் குழந்தையோடு அந்தப் பெட்டியில் ஏறினாள். குழந்தை குறுகுறுவென்று அழகாக இருந்தது.

வண்டி இரண்டு ஸ்டேஷன் போவதற்குள் குழந்தை அவனுக்குச் சிநேகமாகிவிட்டது.

''உம் பேரென்ன?'' என்று கேட்டான் சுகு.

''உம் பேரு?'' என்று திருப்பிக் கேட்டான் குழந்தை.

''எம் பேரு சுகுமார்.''

''எம் பேரு ரகுமார், போ!''

அவன் அம்மா சிரித்தாள். ''ரகுமார் இல்லேடா, போக்கிரி, ரகுராம்!'' என்று திருத்தினாள்.

''அந்தக் கூடையிலே என்ன வச்சிருக்கே?'' என்றான் ரகு.

சுகுமார் சட்டென்று, ''ஒண்ணுமில்லே!'' என்றான்.

''மாம்பழ வாசனை வறதே!''

சுகுமார், ''ஆமாம்'' என்றான்.

''எங்கே பாப்போம்'' என்று குழந்தை கூடையைப் பற்றினான்.

''அதைத் தொடக்கூடாது'' என்று சுகுமார் சொன்னதை ரகு காதிலே போட்டுக் கொள்ளவில்லை. அவன் பாய, இவன் தடுக்க, குழந்தையின் பிடிவாதம் அழுகையாக மாறியது.

அம்மா குழந்தையை அதட்டினாள்; கொஞ்சினாள். கண்டித்தாள்; பயமுறுத்தினாள். ரகுவின் அழுகை தான் வலுத்தது.

''ஒரு பழம் இருந்தால் தயவு செய்து கொடு. அதற்கு உண்டான விலையைக் கொடுத்துவிடுகிறேன்!'' என்றாள் அம்மா, சுகுமாரிடம்.

''ஐயையோ! அது விலைக்கு இல்லை; சும்மாவும் கொடுப்பதற்கில்லை'' என்றான் சுகுமார்.

குழந்தை கேவிக் கேவி அழுதான். அம்மா கோபத்தோடு அவன் முதுகில் ஒன்று வைத்து, அவனை மடியில் போட்டுத் தூங்கப் பண்ணினாள். நடுத் தூக்கத்தில்கூட ரகுவுக்கு விசித்தது. கண்ணைத் திறக்காமலே வாய், ''மாம்பழம்'' என்று முணுமுணுத்தது. சுகுமாருக்கு மனம் இரங்கினால்தானே?

வண்டி சென்னையை அடைந்தது. அம்மா, குழந்தை ரகுவை எடுத்துக் கொண்டு இறங்கினாள். சுகு கவனிக்காதவன் போலவே இருந்துவிட்டான். துளிக்கூடத் தன் செய்கைக்காக அவன் வருத்தப்படவில்லை.

உறவினர் வீட்டிலிருந்து சுகுமார் கூடையோடு புறப்பட்டான். அந்த நிர்வாகியின் வீட்டு முகப்பில் போய் இறங்கினான்.

''இது எல்லாம் எதற்குத் தம்பீ!'' என்றார் நிர்வாகி.

''இல்லை; குழந்தைகளுக்கு இருக்கட்டும் என்று அப்பா கொடுத்தனுப்பினார்'' என்றான் ரகு.

அப்போது நிர்வாகியின் குழந்தை உள்ளேயிருந்து ஓடி வந்தது. சுகுமார் விக்கித்துப் போய் நின்றான். அந்தக் குழந்தை அவனோடு ரெயிலில் வந்த ரகுராமன்தான். ''ஏன் இங்கே வந்தே? நீதான் அப்போ மாம்பழம் கொடுக்க மாட்டேன்னியே! போ!'' என்றான் ரகு. சுகுவுக்குத் தலை சுற்றியது.



பொய் சொல்லி ராஜா

பெ. தூரன்

முன்னொரு காலத்தில் நாகபுரி என்று ஒரு பட்டணம் இருந்தது. அந்தப் பட்டணத்தை ஆண்ட அரசனுக்கு நீண்ட காலமாகப் பிள்ளையில்லாமலிருந்து கடைசியில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையின் தாயாராகிய அரசி அதைச் செல்வமாக வளர்த்துவந்தாள். அதே சமயத்தில் பொய்யே பேசக் கூடாது என்று குழந்தைக்குப் போதித்தும் வந்தாள். 'உயிர் போவதாக இருந்தாலும் பொய்ப் பேசக் கூடாது' என்று அவள் சொல்லுவாள். தாயின் அன்பை நன்றாக அறிந்திருந்த அந்தக் குழந்தை அவள் சொன்னபடியே நடக்கப் பழகிக்கொண்டிருந்தது. அதற்கு லோகநாதன் என்று பெயர் சூட்டினார்கள்.

லோகநாதனுக்கு ஐந்து வயதாக இருக்கும்போது திடீரென்று ஒரு நாள் இரவு ஒரு பக்காத்திருடன் அரண்மனைக்குள்ளே எப்படியோ தந்திரமாகப் புகுந்து யாருமறியாமல் அவனைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான்.

நாகபுரிக்கு மேற்குப் பக்கத்திலே ஒரு பெரிய மலை இருந்தது. அதில் அநேக குகைகள் உண்டு. அந்தக் குகைகளைச் சுற்றிலும் எங்கே பார்த்தாலும் பெரிய பெரிய மரங்களும் புதர்களும் இருந்தன. அவற்றின் வழியாக யாருமே வரப் பயப்படுவார்கள்.

அப்படிப்பட்ட இடத்தில்தான் அந்தப் பக்காத்திருடன் யாருக்கும் தெரியாமல் வசித்து வந்தான். அவன் திடீரென்று ஏதாவது ஒரு ஊருக்குள் நுழைந்து கொள்ளையடித்துக் கொண்டு போய்விடுவான். அவன் எங்கிருந்து வருகிறான், எப்பொழுது வருகிறான் என்று யாருக்குமே தெரியாது.

நாகபுரி அரசன் அவனைப் பிடிக்க எத்தனையோ முயற்சிகள் செய்தும் பலிக்கவில்லை. நாகபுரிக்குப் பக்கத்தில் சந்திரபுரி என்ற பட்டணம் உண்டு. அந்தப் பட்டணத்து அரசனும் திருடனைப் பிடிக்க முயன்றான். ஆனால் அவனாலும் முடியவில்லை.

பக்காத்திருடனுக்கு ஐந்து வயதுள்ள ஒரே ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் செல்லமுத்து. செல்லமுத்து பிறந்த சில மாதங்களில் அவன் தாய் இறந்து போனதால் பக்காத்திருடனே அவனை வளர்த்து வந்தான். 'என்றைக்கும் யாரிடத்திலும் பொய்தான் பேசவேண்டும். உண்மை சொல்லக்கூடாது' என்று அந்தத் திருடன் தன் மகனுக்குப் போதித்து வந்தான்.

தன் மகன் பொய்யே பேசுகிறானா என்று அறிந்துகொள்வதற்காகப் பக்காத்திருடன் பலவிதமான சோதனைகள் எல்லாம் செய்தான். சோதனையில் ஒரு தடவை தப்பினாலும் மகனை நன்றாகத் தண்டிப்பான்.

ஒரு நாள் மத்தியான்னம் செல்லமுத்துவும் பக்காத்திருடனும் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். இருவரும் சாப்பிட்டு முடிந்தவுடன் பக்காத்திருடன் தன் மகனைப் பார்த்து, ''சாப்பிட்டாயிற்றா?'' என்றுகேட்டான். ''ஆயிற்று'' என்று செல்லமுத்து பதில் சொன்னான்.

உடனே பக்காத்திருடன் அவன் கன்னத்திலே ஓங்கி ஓர் அறை கொடுத்தான். "ஏண்டா, சாப்பிட்டாயிற்று என்று எதற்காக உண்மையைச் சொன்னாய்?" என்று அவன் கர்ஜனை புரிந்தான்.

"இரண்டு பேருமாகத்தானே இப்பொழுது சாப்பிட்டோம்?" என்றான் செல்லமுத்து.

"அப்படி யிருந்தாலும் நீ உண்மையைச் சொல்லி யிருக்கக் கூடாது. யாரையும் நம்பவும் கூடாது!" என்றான் திருடன்.

இந்தச் செல்லமுத்துவுடன் அரசகுமாரனான லோகநாதன் மலைக் குகையிலே வாழும்படி நேர்ந்தது.

அவனைச் செல்லமுத்தாவது பக்காத்திருடனாவது சதா காவல் புரிந்துவந்தார்கள்.

இவ்வாறு பல வருஷங்கள் சென்றன. லோகநாதனுக்கும் செல்லமுத்துவுக்கும் இருபது வயதாயிற்று. அப்பொழுது அவர்கள் இருவரும் சேர்ந்து திருட்டுக்குப் போகவேண்டும் என்று பக்காத்திருடன் சொன்னான். லோகநாதன் தன் உயிர் போவதாக இருந்தாலும் திருட்டுக்குப் போக முடியாது என்று கண்டிப்பாகப் பேசினான். அவனை அடித்தார்கள். அப்பொழுதும் அவன் இணங்கவில்லை. அதனால் செல்லமுத்து மட்டும் கொள்ளைக்குப் போனான்.

ஒரு சமயம் அவன் குகைக்குத் திரும்பி வரும்போது நாகபுரிக் காவலாளிகள் பார்த்துக்கொண்டார்கள். அவன் போன வழியை நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டார்கள்.

இந்தச் சமயத்திலே நாகபுரியில் அரசன் யாரும் இல்லை. அரசனும் அரசியும் வயதாகி இறந்து விட்டார்கள். லோகநாதனைக் கண்டு பிடிக்க முடியாத கவலையும் சேர்ந்து அவர்கள் இறந்ததால், மந்திரிகள் லோகநாதனை எப்படியாவது தேடிக் கண்டு பிடித்து அரசனாக்க முயன்றார்கள்.

அவர்கள் பக்காத்திருடனுடைய இருப்பிடத்தைப் பற்றிச் சேதி அறிந்ததும் அந்த இடத்தை நோக்கிப் பல வீரர்களுடன் வந்தார்கள்.

அவர்கள் வரும் சமயத்தில் லோகநாதனும் செல்லமுத்துவும் மலைக் குகைக்குச் சற்றுத் தூரத்திலே காட்டுக்குள் மல்யுத்தப் பயிற்சி செய்துகொண் டிருந்தார்கள். லோகநாதனுக்கு ஈடாகச் செல்லமுத்து மல்யுத்தம் செய்ய முடியாது. அதனால் லோகநாதன் அவனைச் சுலபமாகக் கீழே வீழ்த்தி நிலத்தோடு அழுத்தினான். அவன் மேலே ஏறி உட்கார்ந்தான்.

அந்தச் சமயத்தில் மந்திரிகளும் படைவீரர்களும் அங்கே வந்து சேர்ந்தனர். மந்திரி லோகநாதனைப் பார்த்துத் தான் வந்த விஷயத்தைச் சொல்லியதோடு அவனை யாரென்று அறிந்துகொள்ள விரும்பினார்.

"நான்தான் ராஜகுமாரன். என் பெயர்தான் லோகநாதன்" என்று அவன் சொன்னான்.

அவன் சொல்லி வாய் மூடுவதற்குள் செல்லமுத்து முதன் மந்திரியைப் பார்த்து, "இவன் பொய் சொல்லுகிறான். இவன் ராஜகுமாரனல்ல. நான்தான் ராஜகுமாரன். என் பெயர்தான் லோகநாதன்" என்று பொய் சொன்னான்.

மந்திரிக்கு யார் சொன்னது உண்மையென்று தெரியவில்லை. அதனால் கொஞ்சம்யோசனை செய்தார்.

அதைக் கண்டு செல்லமுத்து, "உங்களுக்கு இன்னும் சந்தேகமா? நீங்கள் வரும்போது இவன் என் மேலே ஏறிக்கொண்டு என்னை நிலத்தில் அழுத்தியதை நீங்கள் பார்க்கவில்லையா? சிறைக் கைதியாகக் கிடக்கும் ராஜகுமாரனாகிய நான் அந்தப் பக்காத்திருடனின் மகன்மேல் ஏறி உட்கார அவன் சம்மதிப்பானா? நீங்களே யோசித்துப் பாருங்கள். அதற்கு மேலும் உங்களுக்குச் சந்தேகமிருக்குமானால் வாருங்கள். நான் உங்களுக்கு அந்தப் பக்காத்திருடனைக் காட்டிக் கொடுக்கிறேன். அவன்தான் என்னை இதுவரை இங்கே கைதியாக வைத்திருக்கிறவன்" என்று சந்தேகத்துக்கிடமில்லாமல் மளமளவென்று பேசினான்.

மந்திரிகளும் படைவீரர்களும் செல்லமுத்துவைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

செல்லமுத்து பக்காத்திருடனை தன் தந்தையைக் காட்டினான். ''இவன்தான் பக்காத்திருடன். இவனைப் பிடித்து விலங்கு போடுங்கள்'' என்று அதிகாரத்தோடு சொன்னான். உடனே வீரர்கள் திருடனைக் கைது செய்தார்கள்.

செல்லமுத்துதான் லோகநாதனென்று அனைவரும் நம்பி அவனை நாகபுரிக்கு அரசனாகச் செய்தார்கள். பக்காத்திருடனையும் உண்மையான லோகநாதனையும் பாதாளச் சிறையில் அடைத்தார்கள்.

அரசனாகிவிட்டால் மிகுந்த சந்தோஷம் உண்டாகுமென்று செல்லமுத்து நினைத்தான். ஆனால் அரசனானதிலிருந்து அவனுக்குக் கவலை ஆரம்பித்துவிட்டது. தன் தகப்பன் யாரையும் நம்பக்கூடாது என்று சொல்லிக் கொடுத்திருக்கிறான் அல்லவா? ஆகவே அவனால் யாரையும் நம்ப முடியவில்லை. மேலும் ஒவ்வொருவரும் தன்னைப்போல் பொய்யே பேசுவதாக அவனுக்குப் பட்டது.

மந்திரிகளும் பிரதானிகளும் அரசனிடத்தில் மிகுந்த விசுவாசம் உடையவர்களென்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால் செல்லமுத்துவால் அதை நம்ப முடியவில்லை. பொக்கிஷசாலையில் இருக்கும் பணத்தையெல்லாம் முதல் மந்திரியோ அல்லது மற்ற மந்திரிகளோ அபகரித்துக்கொள்வார்களென்று அவனுக்குப் பயம் உண்டாயிற்று. அதனால் பொக்கிஷசாலையின் சாவிகளையெல்லாம் அவனே வைத்துக்கொண்டு இரவிலே தூங்காமல் காவல் காத்து வந்தான்.

பகலிலே எந்தக் காரியத்தைப் பற்றி யார் சொன்னாலும் அவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. ''பொய்யா பேசுகிறாய்?'' என்று எல்லோரிடமும் சீறி விழுந்தான். அவன் இவ்வாறு நடந்துகொள்வதைக் கண்டு எல்லோரும் திகைப்படைந்தார்கள்.

செல்லமுத்துவுக்குப்

பகலிலும் சந்தோஷமேற்படவில்லை. இரவிலே தூங்குவதற்கே முடியாமல் காவல் வேலை செய்ய வேண்டியதாயிற்று.

இப்படியிருக்கும்போது சந்திரபுரி அரசன் தன் மகளை நாகபுரி அரசனுக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதற்காக அதைப் பற்றிப் பேசுவதற்கு தன் மந்திரியையும் வேறு முக்கியமான சிலரையும் நாகபுரிக்கு அனுப்பினான்.

அவர்கள் விஷயத்தைச் சொன்னார்கள். செல்லமுத்துவுக்கு உடனே சந்திரபுரி அரசன்மேல் சந்தேகம் வந்துவிட்டது. இவர்களெல்லாம் கல்யாணப் பேச்சுப் பேசுவதுபோல வந்து நமது ரகசியங்களையும் படைப் பலத்தையும் தெரிந்துகொண்டு போக வந்திருக்கிறார்கள். நமது பட்டணத்தின் மேல் படைபெடுக்கத்தான் இந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று நினைத்தான்.

உடனே தனது சேனைகளைத் திரட்டிக்கொண்டு சந்திரபுரி அரசன்மேல் சண்டைக்குப் புறப்பட்டான். தன் சேனாதிபதி மீதும் சந்தேகித்து அவனைச் சிறையில் போடும்படி உத்தரவிட்டுத் தானே படைத்தலைவனாகப் போருக்குப் புறப்பட்டான்.

நாகபுரி வீரர்கள் மனமில்லாமல் போர் செய்தார்கள். அத்துடன் செல்முத்துவுக்குப்போரை நடத்தத் தெரியவில்லை. அதனால் அவன் தோல்வியடைந்து போர்க்களத்தில் உயிரையும் இழந்தான்.

உயிர் விடும் தருணத்தில்தான் அவனுக்குத் தான் செய்த தவறெல்லாம் நினைவுக்கு வந்தது. தகப்பன் போதித்தவாறு நடந்து ஒரு சுகமும் அடையவில்லையே என்று விசனப்பட்டான். அதனால் உயிர் விடுவதற்கு முன்பு பக்கத்திலிருந்த வீரர்களைக் கூப்பிட்டுப் பாதாளச் சிறையில் இருப்பவனே உண்மையான ராஜகுமாரனென்று சொல்லிவிட்டான்.

லோகநாதனைச் சிறையிலிருந்து அழைத்து வந்து நாகபுரியின் அரசனாக்கினார்கள். சந்திரிபுரி அரசனும் உண்மையை அறிந்து மகிழ்ச்சியடைந்து தன் மகளை அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தான். லோகநாதன் சிறப்புடன் நெடுங்காலம் ஆண்டு வந்தான்.

சிரிக்கும் சின்னப் பாப்பா!

வெடித்தது...?



கி. சரஸ்வதி அம்மாள்

'குட்டிக்கும் நாய்க்கும் குடி போகச் சந்தோஷம்' என்னும் சொல்லை உண்மைப் படுத்தினான் சேகர். ஊருக்குப் போகப் போகிறோம் என்பதில் ஒரே கொம்மாளமாக இருந்தான் அவன். ''துள்ளின மாடு பொதி சுமக்கும்னு ஒரேமுட்டாத் துள்ளாதே. அப்புறம் என்னமாவது ஆகப் போகிறது'' என்று பாட்டி அவன் உற்சாகத்தைக் குறைத்தாள். பாட்டியும் அவனுமாகத்தான் கிராமத்துக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஊரிலே பாட்டியின் தம்பி பேத்திக்குத் தலை தீபாவளி.

வீட்டு வேலைக்காரன் கதிர்வேலுவிடம் அப்பா, ''துணைக்கு நீயும் போடா'' என்றார்.

''அவன் எதுக்குடா? அவன் என்ன பெரிய துணை! அந்தக் காலத்திலே திருட்டுப் பயம் உண்டு. வண்டியை நிறுத்தி, கத்தியைக் காண்பிச்சு, பயமுறுத்தி, கையிலுள்ளதைப் பிடுங்கிண்டு போவானாம். இப்போ என்ன பயம்?'' என்றாள் பாட்டி.

''எல்லாம் இப்போ பழசுதானே புதுசாத் திரும்புது! முன்னே கத்தி; இப்போ துப்பாக்கி!'' என்றான் கதிர்வேலு.

''நீ பெரிய சூரப்புலி யாக்கும்!'' என்றாள் பாட்டி விளையாட்டாக.

சின்ன டிரங்குப் பெட்டியில் சட்டைத் துணிமணிகள், பாட்டியினுடைய புடைவைகள், தோத்திரப் புத்தகங்கள், எல்லாம் வைத்த பிறகு பட்டாசு மத்தாப்புகளை வைக்க இடம் இல்லாமல் விழித்தான் சேகர்.

''பாட்டி, திரட்டுப்பால் டப்பியைக் கையில் எடுத்துக்கோயேன். அந்த இடத்தில் பட்டாசுகளை வச்சுடறேன்'' என்றான். ''நன்னாயிருக்கு, அதைத் தொடப்படாது. மாமா அங்கே வேண்டிய மத்தாப்பு வாங்கி வச்சிருப்பான்'' என்று பாட்டி சொல்லிவிட்டாள். அம்மாவும், ''ஆமாம், பட்டாசு வேண்டாம், இங்கே வந்த பிறகு விட்டுக்கலாம், வச்சுட்டுப் போ'' என்றாள். ஆனால் சேகருக்கு மனசு கேட்கவில்லை. அவனுக்கு என்ன தம்பியா, தங்கையா அவன் விட்டுச் சென்ற பொருளை எடுத்துக் கொள்வதற்கு? ஆனாலும் என்ன? அவனுக்கு அவற்றைத் தன் கூடவே வைத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் ஆசை! வீட்டில் ஒருவருக்கும் தெரியாமல் பொட்டலமாகக் கட்டி, கதிர்வேலுவிடம்

கொடுத்து, "பத்திரமாய் வச்சு வை. ஊர் வந்ததும் கொடுத்துடு, என்ன!" என்றான்.

"என்னவோப்பா, வழியிலே கெட்டுப்போகாமெ இருந்தால், கொடுக்கிறேன்" என்றான் கதிர் வேலு.

"எப்படியடா கெட்டுப்போகும், நீ பத்திரமாய் உன் மூட்டையோடு வச்சிருந்தா?"

"என்னமோ யாரு கண்டது? புதுமாதிரித் திருடங்க சினிமாவிலே வருங்களே அதுபோல வந்தால்-?" என்றான் கதிர்வேலு

கடைசியில் ரெயிலுக்குப் புறப் படும் நேரம் நெருங்கிற்று. எல்லா ரும் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார் கள். ரெயில் பரபரப்பிலும்கூட கதிர்வேலுவிடம் தனியாக, "பட் டாசை ஜாக்கிரதையா வச்சிருக்கி யாடா?" என்று கேட்டான் சேகர். அப்பா அவர்களை வண்டி பார்த்து ஏற்றிவிட்டார்.

"சேகர்! ஊருக்குப் போய், பாட்டியைப் படுத்தப்படாது, சமத்தாயிருக்கணும், தெரிஞ் சுதா? டேய், கதிர்வேலு! சேகர் விஷமம் பண்ணுமெ பார்த்துக் கோடா" என்றாள் அம்மா.

"ஆமாம், அவன் பார்த்துண் டான்! அவனையும் சேர்த்து நான் பார்த்துக்கணும். படம் பார்க்கப் பக்கத்தூருக்கு ஓடிப்போகாமெ இருந்தான்னா, அதுவே பெரிசு!" என்றாள் பாட்டி.

"பெரியம்மா சொல்லுகிற மாதிரி ஒன்றும் செய்யாதே. வாலைச் சுருட்டி மடியிலே வச்சுண்டு வந்து சேரு" என்றார் அப்பா, கதிர்வேலு விடம்.

வண்டி புறப்பட்டுவிட்டது. ரெயில் நெருக்கடியில் படுத்துத் தூங்க வசதியில்லை. எல்லோருமே உட்கார்ந்த வண்ணம் ஆடி விழுந் தார்கள். வெகு நேரம் தூங்க முடி யாமல் வெளியே பார்த்திருந்துவிட் டுக் கண்ணயர்ந்தான் சேகர்.

"பெரியம்மா! ஸ்டேஷன் வந் துடுத்து, எழுந்திருங்க!" என்று கதிர்வேலுவின் குரல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள் பாட்டி.

"எல்லாம் முழுச்சிண்டுதான் இருக்கேன், கத்தாதே. அதிகப் பிரசங்கி!" என்று கதிர்வேலுவை அதட்டிவிட்டு, "சாமான்களை இறக்கு" என்றாள் பாட்டி. உண்மையில் அவள் தூங்கினாலும், கதிர்வேலு கண்டுபிடித்துச் சொல்வதாவது என்று இருந்தது அவளுக்கு. அம்மா சொன்னதற் குச் சரியாக ஸ்டேஷனிலிருந்த லாந்தல், வெளிச்சம் கொடுப்பதற் குப் பதில் இருட்டைத்தான் அதி கப்படுத்திக்கொண் டிருந்தது. அவர் களைத் தவிர வேறு யாரும் அந்த இடத்தில் இறங்கவும் இல்லை. அவர்கள் தட்டித் தடவி சாமான் களை இறக்கிக்கொண்டு தூங்கும் பிரயாணிகளைத் தாண்டிக்கொண்டு இறங்கினார்கள். இவர்களுக்காக மாமாவின் இரட்டை மாட்டு வண்டி வந்து காத்திருந்தது. வண்டிக்காரன் சாட்டையும் கையு மாக நின்றான்.

அவனும் கதிர்வேலுவுமாகச் சாமான்களை வெளியே கொண்டு வந்து வண்டியில் ஏற்றினார்கள்.

"பெரியம்மா! குழந்தையும் நீங் களும் வண்டியிலேயே சுகம்மாப் படுத்துக்குங்க, பொழுதுவிடிய ஊர் போய்ச் சேர்ந்துவிடலாம்" என் றான் வண்டிக்காரன். "நீ இப்படி என் பக்கம் வந்துடு, தம்பி!" என்று கதிர்வேலுவை முன்னால் வந்து உட்காரச் செய்தான்.



''அடேயப்பா! என்ன இருட்டு!'' என்ருன் கதிர்வேலு.

''இல்லாட்டி, பட்டணம் போலே பகலாட்டம் விளக்கு எரியும்னு பாத்தியா! நமக்குக் கண்ணு தெரியாட்டாலும், மாடுங்களுக்கு வழி தெரியும். பயப்படாதே!'' என்ருன் வண்டிக்காரன்.

அமாவாசை இருட்டல்லவா? எங்கும் 'மை'போல இருண்டு கிடந்தது. சாலே மரங்கள் அந்த இருட்டை இன்னும் அதிகப்படுத்தின. ஆகாயத்தில் தீபாவளி மழைக்கான கருமேகங்கள் வேறு சூழ்ந்து கறுப்புத் திரையிட்டிருந்தன.

''வழியிலே பயம் கிடையாதா? மாடுகள் எதையானும் கண்டு மிரளாமெ போகுமா?'' என்றெல்லாம் கதிர்வேலு வண்டிக்காரனை விசாரித்தான். ''குண்டு போட்டாக்கூட இந்த மாடுங்க மிராளாது!'' என்று பெருமையாகச் சொன்ஞன் வண்டிக்காரன்.

''ஆமா, திருட்டுப் பயம் எதுவும்..'' என்ருன் கதிர்வேலு.

''திருட்டுப் பயமா? பேசப்படாது. நம்ம ஐயா பேரைச் சொன்ஞ எந்தத் திருட்டுப் பயலும் கிட்ட வரமாட்டான்'' என்று வீருப்புப் பேசிஞன் வண்டிக்காரன்.

''டேய் கதிர்வேலு, இருட்டு வேளையிலே என்ன கண்ட பேச்சு? சேகர் பயப்படுவான். நிறுத்து!'' என்று பாட்டி அதட்டிஞள். அவனுக்கு மேலே பாட்டிக்குத்தான் பயம் அதிகம். வண்டிக்காரன் மாடுகளை அதன் போக்கில் விட்டுவிட்டு, அரை நித்திரையில் சாய்ந்துவிட்டான். வண்டி லேசாக ஆடித் தாலாட்டுவது போல, பாட்டியையும் சேகரையும் தூங்க வைத்தது.

அதென்ன, திடீரென்று பேரிடி போன்ற சத்தம்! துப்பாக்கிச் சத்தமா? பூமியே அதிர்ந்து ஆடுவது போல் இருந்தது. அதே கணத்தில்





ஒரு நத்தை: (மற்றொரு நத்தையிடம்) இந்தா..சும்மா சும்மா வெளியே எட்டிப் பார்க்காதே..தீபாவளியும் அதுவுமா யாரானும் பட்டாசு திரின்னு நினைச்சுண்டு நெருப்பு வச்சுடப் போறான்!

மாடுகள் வாயு வேகத்தில் பிய்த்துக்கொண்டு கிளம்பின. வண்டிக்காரன் பதறி விழித்து விஷயம் புரியாமல் மாடுகளை அடக்க முயன்றான். கண் மூடிக் கண் திறப்பதற்குள் இவ்வளவும் நேர்ந்துவிட்டது. பாட்டியும் சேகரும் நடுங்கி விட்டார்கள். கதிர்வேலு மட்டும் சற்றுத் தைரியமாக இருந்ததாகத் தெரிந்தது.

''பயப்படாதீங்கம்மா, பயப்படாதீங்க!'' என்று சமாதானம் செய்தான். ஆட்கள் யாரும் வண்டியைத் தொடர்ந்து ஓடி வருவதாகத் தெரியவில்லை. நாலு கால் பாய்ச்சலில் ஓட்டம் பிடித்த மாடுகள் வீட்டு வாசலில் வந்த பிறகுதான் நின்றன.

நடந்ததைக் கேட்ட பொழுது, மாமாவுக்கு நம்பிக்கை வரவில்லை. ஆனால் அந்த வழி போன ஆட்கள் வந்து, ''வண்டிச் சாலையில் ஏதோ பட்டாசும் மத்தாப்பும் எரிந்து வெடித்துக் கிடக்கிறது!'' என்று சொன்ன பிறகுதான், ஏதோ நடந்து இருக்கிறது என்று மாமா தெரிந்துகொண்டார்.

சேகருக்கு மட்டும் சமாசாரம் தெரிந்து போயிற்று. அவன் கதிர்வேலுவிடம் பட்டாசுப் பொட்டலத்தைக் கேட்டபொழுது, அது அவனிடம் இல்லை. உடனே அவன், ''ஏண்டா, நீயா அதைக் கொளுத்தி, பாட்டி உள்பட எல்லாரையும் பயப்பட வச்சே?'' என்றான் கோபமாக.

''நான் வேணும்னு செய்யலே சேகர், மூட்டையோடே பட்டாசை மடியிலே வச்சிருந்தேனு, வண்டி ஏதோ மேலே ஏறி பெரிய ஆட்டமா ஆடிச்சு. அப்போ பொட்டலம் விழுந்திடுச்சு. அப்புறம் நீ கேப்பியே, அதுக்கு வேண்டி, மாடுகளும் நடைதானே போடுதுன்னு வண்டியை நிறுத்தச் சொல்லாமெ இறங்கிப் போய்ப் பார்த்தேன். இருட்டுலே கண்ணு மண்ணு தெரியல்லே. வத்திக் குச்சியைப் பத்தவச்சு பாக்கறப்போ கை விரலிலே சுட்டுடுச்சு. கீழே போட்டுட்டேன். பிறகு தேடிக்கிட்டிருந்தா வண்டி போயிடப் போவுதேன்னு பயந்து ஓடியாந்து ஏறிக்கிட்டேன். வத்திக் குச்சி பொட்டலத்து மேலேதான் விளுந்திருக்கணும். காகிதம் பிடிச்சு உள்ளிருக்கிற மத்தாப்பு, பட்டாசு எல்லாமாப் பத்திக்கிட்டு வெடிச்சிருக்குது. ஒரே பயமாப் போச்சு. அப்போ தெரியலே, இப்போ ஆளுங்க வந்து சொன்ன பிறகு தெரியுது!'' என்றான். கதிர்வேலு சொல்வது, முழுதும் நிஜமா என்கிற சந்தேகம்தான் சேகருக்கு. பட்டாசை எடுத்து வந்தது பாட்டிக்குத் தெரிந்தால் வீண் வம்பு என்று அவன் ஒருவரிடமும் சொல்லவேயில்லை.

கதிர்வேலு வண்டிக்காரனிடம் தனியாகப் பேசிக்கொண்டிருந்த சமயம், ''குண்டு போட்டாக்கூட மாடு மிரளாதுன்னு பெருமை பேசினியே; பாத்தில்லே ஓட்டத்தை?'' என்று கேட்டான். பிறகு பாட்டியிடம் வந்து, ''பெரியம்மா! நான் என்ன பெரிய துணையான்னு கேட்டீங்களே, நான் மட்டும் தைரியமா இருக்காட்டி எல்லாரும் எப்படிப் பயந்திருப்பீங்க?'' என்றான்.

பட்டாசு போனதில் ஒரு பக்கம் கோபமாக இருந்தாலும் சேகருக்கு மறுபக்கம் சிரிப்பாகவும் வந்தது.

சென்னியும் பொன்னியும் சந்தை வண்டியில் ஊருக்குக் கிளம்பினார்கள். கொஞ்சம் பானை சட்டிகள் வாங்கிக் கொண்டு அவர்கள் புறப்பட்டார்கள். பதினைந்து மைல் தூரம். அந்த வழியிலே ஓர் இடத்தில் திருடர் பயம் உண்டு. அந்த இடந்தான் ஆவாரங்காடு.

சென்னியிடம் பணம் இல்லை; பொன்னியிடம் பணம் இல்லை; என்னிடமும் பணம் இல்லை. ஆமாம்; நானும் அதே சந்தை வண்டியில்தான் ஊருக்குக் கிளம்பினேன். நான் சின்னப் பையன். எங்கள் அம்மா என்னைப் 'பயணம்' கிளப்பிவிட்டாள்.

சென்னியும் பொன்னியும் என் அம்மாவுக்குத் தெரிந்தவர்கள்.

''குழந்தை சாருவைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். ஆவாரங்காட்டிலே திருட்டுக் கூட்டம் வந்தால்..'' என்று என்னவோ சொல்ல வந்தாள் அம்மா.

''அட போம்மா, மடியிலே கனம் இருந்தால்தானே வழியிலே பயம்..'' என்று சொல்லிச் சென்னி சிரித்தாள்.

''அவனுக வந்தானுகளுன்னு, இப்ப தம்பி கையிலே இருக்குதே ரெட்டை நாக்குப் பூட்டு, அதை அவனுக மண்டையிலே போட்டு உடைச்சுடறோம்'' என்றாள் பொன்னி.

நான் புதிதாக ஒரு பூட்டு வாங்கி வைத்திருந்தேன், அப்பா பீரோவுக்காக. அதைத் திருடன் மண்டையிலே போடுவாளாம்!

கீற்றுக் கூண்டு போட்ட கட்டை வண்டி. சாவகாசமாக மாலை எட்டு மணிக்குக் கிளம்பியது. நல்ல நிலாக் காலந்தான். என்றாலும், 'பின்னிருட்டு வருமுன் ஆவாரங் காட்டைத் தாண்டிவிடலாம்' என்று வண்டிக்காரன் சொன்னான்.

'கட கட' என்று கொஞ்சம் ஓட்டமும் பிறகு கொஞ்சம் மெதுவுமாக வண்டி சென்றது.

நிலவு சாய்வதற்கு முன்பே ஆவாரங்காட்டை எட்டி விட்டோம். இரண்டு புறமும் ஒரே ஆவாரஞ் செடிகள் மஞ்சள் பூப் பூத்துக் 'குத்துக் குத்தாக' நின்றது அந்த நிலவிலும் தெரிந்தது. காடு தொடங்கிப் பாதித் தூரத்துக்கு மேல் கடந்திருப்போம். இன்னும் ஓர் இருபது தப்படிதான் பாக்கியிருக்கும். இந்தச் சமயம் வலத்து மாடு எதையோ கண்டு மிரண்டது; அப்படி இப்படித் திரும்பப் பார்த்தது; படுக்கவே படுத்துவிட்டது!

''யார் வண்டியிலே?'' உறுமியது ஒரு குரல்.

நான் பயந்து நடுங்கினேன்.

வண்டிக்காரன் உடனே குதித்தோடிவிட்டான்.

சென்னியும் பொன்னியும் மட்டும் தைரியமாயிருந்தார்கள்.

''கேக்கறது யாரு?'' என்று அழுத்தமாகவே பதில் கேள்வி போட்டாள் பொன்னி.

''அதுவா? ரெண்டு நிமிஷத்திலே தெரியும். கையிலே இருக்கிற பணமுடிச்சு, காதிலே கழுத்திலே கையிலே இருக்கிற நகை நட்டு எல்லாத்தையும் எடு'' என்றது இன்னொரு கம்பீரமான குரல்.

''வெற்றிலை பாக்கு முடிச்சுத்தான் எங்களிடம் இருக்கிறது. இரண்டு பேர் கைம் பெண்கள். கையும் காதும் கழுத்தும் மூளி. ஒரு சின்னப் பையன் இருக்கிறான். அவனிடமும் ஒன்றும் இல்லை'' என்று துணிச்சலாகவே சொன்னாள் சென்னி.

''சரி; நாங்க பார்க்கிறோம்'' என்றது மூன்றாவது குரல்.

முதலில் ஒரு தடிக்கம்பு வண்டிக்குள்ளே வந்து துழாவியது. பிறகு கறுப்பு மீசையும் சுழலும் விழிகளுமாய் மூன்று ஆட்கள் தரிசனம் தந்தார்கள்.

பொன்னிக்கு ஆத்திரமாய்ப் போயிற்று. ''இதோ இந்தச் சட்டிபானைதான் இருக்கு. வாரிக்கிட்டுப் போங்க'' என்று அவற்றை எடுத்துவைத்தாள்.

திருடர்களும் கோபச் சிரிப்புடன் தடியாலேயே கொந்தி ஒவ்வொரு சட்டியை எடுத்துத் தலையிலே கவிழ்த்துக் கொண்டார்கள். மிச்சம் மீதியைப் பட்பட் என்று அடித்து உடைத்தார்கள். கோமாளித்தனமான திருடர்கள்!

''தம்பி ராஜா கிட்ட ஒண்ணும் இல்லியா?'' என்றான் ஒரு திருடன்.

நான் நடுங்கியபடி, பூட்டுத் துணிச் சுருளை நீட்டினேன். வாய் பேசவில்லை.

''அது வெறும் பூட்டு. அதை என்ன செய்யப் போறீங்க?'' என்று கேட்ட பொன்னி, 'லபக்' என்று அதைப் பிடுங்கிக் கொண்டாள். அம்மாவிடம் சொன்னபடி வீரத்தனமாக ஒரு திருடனின் மண்டையைக் குறிபார்த்து எறிந்தாள். மண்டையிலே கவிழ்த்த சட்டிதான் உடைந்தது; மண்டைக்கு ஒரு சேதமும் இல்லை.

''அப்படியா, அம்மணி! பார்த்துக்கலாம்'' என்றான் அவன்.

பிறகு, வண்டி முழுவதையும் திருடர்கள் நன்றாய்ச் சோதனை

கண்ணா, மணி வண்ணா!

போட்டார்கள். அவர்களுக்கு ஒரு சல்லிக்காசும் கிடைக்கவில்லே. எங்களிடம் இருந்தால்தானே?

''திருப்தி யாயிடிச்சா?'' என்ருள் சென்னி.

''எங்களுக்குத் திருப்தி யாயிடிச்சு; உங்களுக்குத் திருப்தி பண்ணுரும்'' என்ருன் ஒரு திருடன். மேலும், என்னைப் பார்த்து, ''தம்பி ராஜா, எடு சாவியை'' என்ருன்.

என் இடுப்பில் செருகியிருந்த சாவியை எடுத்துக் கொடுத்தேன்.

''அடே வீரா, இந்த அம்மாக்கள் நமக்கு மகுடந் தந்து, பூட்டாலே அருச்சனை பண்ணிஞங்க. இவங்களுக்கு வரம் தரணும். ரெண்டு பேர் காதும் தொள்ளையா இருக்குது. அது மூளியில்லாமெ பண்ணி, ஊருக்கு அனுப்புவோம்'' என்ருன் மண்டைச் சட்டி உடைந்த திருடன். மேலும் மற்ருெருவனைப் பார்த்து, ''பிடி அப்பா இவர்களே. ஓர் அம்மாளைக் கிழக்கு முகமாக உட்கார்த்து; மற்றவளை மேற்கு முகமாக உட்கார்த்து'' என்ருன்.

''தொடாதே எங்களை'' என்ருள் சென்னி.

''அப்படியாஞ மரியாதையா நீங்களே உட்கார்ந்திடுங்க.''

சென்னியும் பொன்னியும் காதுங்காதும் வைத்தாற்போல் உட்கார்ந்தார்கள் - அதாவது, வலது காதும் வலது காதும் பொருந்த எதிர் எதிர் முகமாகத் திரும்பி யிருந்தார்கள்.

''தம்பி ராஜா, இந்தத் தீண்

கட்டி வெண்ணெய்க்கு எங்கே போவேன்?

போட்டோ: ராமகிருஷ்ண

டாத பத்தினிகளை நாங்கள் தொடக்கூடாது. நீ சின்னப் பிள்ளைதானே. தொடலாம். இவர்கள் காதையும் காதையும் சேர்த்து இந்தப் பூட்டை மாட்டு.''

நான் சற்றுத் தயங்கினேன். திருடர்களின் கெடு பிடி வலுத்தது. பெண்களே சம்மதித்து என்னைத் தூண்டினார்கள். கண்ணீருடன் விம்மிக்கொண்டு, இரண்டு பேர் காதையும் சேர்த்துப் பூட்டைப் பூட்டி, சாவியைத் திருடர்களிடம் கொடுத்தேன்.

''நல்ல பிள்ளை! தம்பி ராஜா, உன் பேர் என்ன?''

''சாரங்கபாணி.''

''நல்ல பேரு. என்ன கிளாஸ் படிக்கிறே?''

''நாலாங் கிளாஸ்.''

இதோடு திருடர்கள் போய் விட்டார்கள். அப்புறம்தான் வண்டிக்காரன் வந்தான்.

ஆவாரங்காட்டை விட்டு நகர்ந்தோம்.

சென்னியும் பொன்னியும் அப்படி இப்படித் திரும்ப முடியாமல் அவதிப்பட்ட காட்சியை இப்போது நினைத்தால், எனக்குச் சிரிப்பு வருகிறது. நீங்களே அதைக் கற்பனை செய்து பாருங்கள். உங்களுக்கும் சிரிப்புத்தான் வரும். ஆனால், அப்போது அழுகைதான் வந்தது.

ஆனால், அவர்கள் வருத்தப்படவில்லை. வெட்கந்தான் அவர்களைப் பிய்த்துத் தின்றது. ஒரு தினுசாகத் துணியால் காதைச் சுற்றி மூடி, வெளியே தலையைக் காட்டாமல் வண்டிக் கூண்டில் ஒண்டியபடி வந்தார்கள்.

ஊருக்குள்ளே புகுந்தாயிற்று.

சென்னியும் பொன்னியும் வண்டியை விட்டு இறங்கவில்லை.

சாவிக்காரனை அழைத்து வந்தோம். எந்தச் சாவியும் பொருந்தவில்லை. காது அறுகாமல் பூட்டை உடைப்பது பெரும் பாடாய்ப் போயிற்று.

நாலு நாளைக்கெல்லாம் பள்ளிக்கூடத்தில் எனக்கு ஒரு பார்ஸல் வந்தது. திறந்து பார்த்தால், அதிலே அந்தச் சாவி இருந்தது. அடடா! எவ்வளவு நாணயமான திருடர்கள்! ஆனால், வெறுஞ் சாவியை வைத்துக்கொண்டு என்ன செய்வது? பூட்டுத்தான் போய்விட்டதே. அருமையான பூட்டு! இப்போது என்னவோ 'மில்லர் லாக்,' 'அலிகார் பூட்டு', 'அது இது' என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அது ஒரு 'கண்ட்ரி பூட்டுத்தான். ஆனாலும் மகா உறுதியானது. 'கட்டையூர் ரெட்டை நாக்கு'ப் பூட்டு. அது போய்விட்டது. அதுமாதிரிப் பூட்டை அப்புறம் நான் கண்டதேயில்லை!

சரியான பாடம்

ராஜி

ஒரு சிறிய கிராமம். அந்தக் கிராமம் ஒரு பெரிய காட்டுக்குப் பக்கத்தில் இருந்ததனால் வேடர்கள் அங்கே வசித்து வந்தார்கள். அந்த ஊர் வேடுவச் சிறுவர்கள் எல்லாரும் மிகவும் விஷமத்தனம் வாய்ந்தவர்கள். எப்பொழுதும் ஒருவருக்கொருவர் ஏதாவது சச்சரவு செய்த வண்ணமாக இருப்பார்கள். அப்படி இல்லாவிட்டால் வாசல் பக்கம் போய்க்கொண்டிருக்கும் பிராணிகளின் மீதோ அல்லது வேறு ஜந்துக்களின்மீதோ கற்களையாவது விட்டெறிந்துகொண்டிருப்பார்கள். தீபாவளி நெருங்க நெருங்க அவர்களுடைய துஷ்டத்தனமும் அதிகரித்து கொண்டே வந்தது.

தீபாவளிச் சமயத்தில் அந்தக் கிராமத்துச் சிறுவர்களுக்கு அவர்கள் பெற்றோர் பட்டணத்திலிருந்து பலவித வாணங்களும் வெடிகளும் வாங்கித் தந்திருந்தார்கள். ஒரு சிறுவன் ஒரு சிறு வெடியைக் கொளுத்தி, தத்தித் தத்திப் போய்க்கொண்டிருந்த ஒரு தவளையின்மீது விட்டெறிந்தான். பாவம், அந்த வெடி தவளைக்குக் காயத்தை உண்டாக்கியது, ஒரு சிறுவன் அயர்ந்து வாசலில் தூங்கிக்கொண்டிருந்த ஒரு நாயின் பக்கத்தில் அதற்குத் தெரியாமல் ஓர் 'ஆட்டம் பாம்'பை வைத்துக் கொளுத்தினான். ஆட்டம்பாம் படால் என்று பெரிய சப்தத்துடன் வெடிக்கவே நாய் திடீரென்று பயந்து நாலுகால் பாய்ச்சலில் ஓட்டமாக ஓடிற்று. அதைப் பார்த்து அங்கிருந்த சிறுவர்கள் எல்லாரும் கைகொட்டிச் சிரித்தார்கள். ஒரு சிறுவன் சுவரின் ஓரமாக நின்றுகொண்டிருந்த கழுதையின் வாலில் மிகவும் சிரமப்பட்டு ஓர் எலெக்டிரிக் பட்டாசைக் கட்டுடன் கட்டிக் கொளுத்திவிட்டான். அவ்வளவுதான்; பட்டாசு காது செவிடுபடப் படபடவென்று வெடிக்கவே கழுதை பெரிதாகக் கத்திக்கொண்டே சுற்றிச் சுற்றி ஓடியது.

சிறுவர்களுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. கழுதைக்கு மேல் சப்தம் போட்டுக் குதித்தார்கள். பால் கறப்பதற்காக வாசல் பக்கம் கட்டப்பட்டு நின்றுகொண்டிருந்த ஒரு பசுமாட்டுக்குப் பக்கத்தில் ஒரு கொம்பு வாணத்தை வைத்து, திடீர் என்று கொளுத்

தவே பசுமாடு மிரண்டு குதித்தது. சற்று நேரம் கழித்து வந்த பால்காரன் பசுவைச் சமாதானப்படுத்திப் பால் கறக்க முயன்றான். ஆனால் அது பால் கறக்காமல் நன்றாக உதைக்க ஆரம்பித்தது. விஷயம் அறியாத பால்காரன் மாட்டை அடி அடியென்று அடித்தான். மாடு அடிபடுவதைப் பார்த்த சிறுவர்கள் கை கொட்டிச் சிரித்தார்கள். பல பல காக்கைகள் கூட்டமாய் ஏதோ ஆகாரத்தைக் கொத்திச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் ஒரு கட்டு ஊசி வெடிகளை எடுத்துக் கொளுத்திப் போடவே காக்கைகள் பயந்து நாலாபக்கமும் பறந்து சென்றன. சிறுவர்கள் அதைக் கண்டு குதித்தார்கள். வாசல் பக்கத்துடன் சிறுவர்கள் நின்றார்களா? இல்லை. வீட்டிற்குள்ளேயும் தங்கள் கை வரிசையைக் காண்பித்தார்கள். எலி தனது இரண்டு குஞ்சுகளுடன் சுவரின் ஓரமாக ஓடி ஒரு பொந்தில் நுழைவதைப் பார்த்தார்கள். ''டேய் எலியையும் இந்த எலிக் குஞ்சுகளையும் சும்மா விடக்கூடாது'' என்று பல வெடிகளைப் புஸ்வாணமாகச் செய்து எலிப் பொந்தின் பக்கத்தில் வைத்துக் கொளுத்தினார்கள். எலியும் எலிக் குஞ்சுகளும் பொந்துக்குள் புஸ்வாணத்தின் புகை தாங்க முடியாமல் மூச்சுத் திணறின. அந்தக் கிராமத்தில் ஒரே குட்டையில்தான் கொஞ்சம் தண்ணீர் இருந்தது. அங்கே சென்று தவளை வாணத்தைக் கொளுத்தி, தண்ணீரில் போடவே இந்தத் தவளை வாணம், சப்தத்துடன் சுற்றிச் சுற்றி வருவதைப் பார்த்த வாத்துகள் பயந்து கரை சென்றன. அதைப் பார்த்த சிறுவர்கள் சந்தோஷத்தினால் உரக்கக் கூச்சலிட்டார்கள். இது மாதிரி மிருகங்களையும் மற்றப் பிராணிகளையும் தீபாவளி நெருங்க நெருங்க அந்தக் கிராமத்துச் சிறுவர்கள் அதிக உபத்திரவம் செய்ய ஆரம்பித்தார்கள்.

''அடா அடா, இப்படியே இந்தச் சிறுவர்களை விட்டு வைத்திருந்தால் நம்முடைய பாடு திண்டாட்டம்தான். நாம் வாயில்லா ஜீவன்கள். நம்மால் ஒன்றும் அவர்களுக்குத் தீங்கிழைக்க முடியாது என்று நினைக்கிறார்கள். அது தவறு. நம்மாலும் அவர்களுக்குத் தீங்கு இழைக்க முடியும். தகுந்த பாடம் ஒன்று கற்பிக்கலாம்'' என்று ஆட்டம்பாம்பினால் பயந்த நாய், வெடியினால் காயம்பட்ட தவளையுடன் பேசிக்கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் கழுதை, குருவிகள், காகங்கள், முதலியவைகளும்



அங்கே கூடின. பிறகு யாவும் சேர்ந்து பக்கத்துக் காட்டை நோக்கிச் சென்றன. காட்டுக்குச் சென்றதும் கிராமத்துச் சிறுவர்களால் தங்களுக்கு நேரிடும் துன்பங்களைச் சொல்லவே, யானைகள், நெருப்புக் கோழிகள் முதலியன யாவும் உதவி செய்து எப்படியாவது சிறுவர்களுக்குத் தகுந்த பாடம் ஒன்று கற்பிக்கவேண்டும் என்று வெகு நேரம் யோசனை செய்து முடிவுக்கும் வந்தன.



தீபாவளிக்கு முதல் நாள் இரவு சிறுவர்கள் யாவரும் அவரவர் வீட்டு வாசல் திண்ணையில் வெடிகளையும் வாணங்களையும் குவித்து வைத்துக்கொண்டு சந்தோஷமாக உட்கார்ந்தார்கள். அந்தச் சமயம் காட்டிலிருந்து கணக்கிட முடியாத பெரிய தவளைகளும், ஆந்தைகளும். நெருப்புக் கோழிகளும், யானைகளும், காட்டு எலிகளும் மற்றவைகளும் கிராமத்தை நோக்கிச் சென்றன. ஒவ்வொரு சிறுவன் வீட்டு வாசலிலும் அவை தம் தம் வேலைகளைச் செய்யத் தயாராகக் காத்துக்கொண்டிருந்தன. ஒரு சிறுவன் ஒரு பட்டாசைக் கொளுத்திக் கீழே போட்டான். அவன் போட்டது தான் தாமதம்; அருகிலிருந்த பெரிய தவளை வெடியின்மீது பாய்ந்தது. பாய்ந்தவுடன் பட்டாசின் திரி அணைந்துவிடவே வெடி வெடிக்காமல் போயிற்று. மறுபடியும் ஒரு சிறு வெடியைக் கொளுத்திக் கீழே போட்டான். அதற்கும் அதே கதிதான் நேர்ந்தது. உடனே கட்டுடன் ஒரு பட்டாசுக் கட்டைக் கொளுத்திக் கீழே போட்டான். உடனே இரண்டு மூன்று பெரிய தவளைகள் ஒரே சமயத்தில் பாய்ந்து, அந்தக் கட்டு வெடிக்காமல் செய்தன. பிறகு அந்த சிறுவன் சிறு வெடியைக் கொளுத்திக் கீழே போடாமல் மேலே போட்டான். ஆனால் கூரையில் தயாராகவிருந்த ஆந்தைகள் அந்த வெடியை வெடிக்கவிடாமல் பாய்ந்து, தங்களது அலகினால் திரியைச் சாமர்த்தியமாகத் துண்டித்து வெடியை வெடிக்காமல் செய்தன. சிறுவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. கட்டுடன் கொளுத்தி, மேலே விட்டெறிந்து பார்க்கலாம் என்று சீனவெடியை எடுத்து அருகிலிருந்த மெழுகு வத்தியில் கொளுத்தப் போனான். ஆனால் மெழுகு வத்தியைக் காணவில்லை. மெழுகு வத்தியை ஓர் எலி எடுத்துச்சென்று எலிப் பொந்துக்குள் வைத்துவிட்டது. உடனே சிறுவன் உள்ளே வேகமாகச் சென்று ஒரு கரண்டியில் நெருப்புத் துண்டுகளைக் கொண்டுவந்து வைத்துக் கொண்டான்.

ஆனால் அடுத்த நிமிஷம் நெருப்புத் துண்டுகளைக் காணவில்லை. எல்லாம் அங்கிருந்த நெருப்புக் கோழியின் வயிற்றுக்குள் சென்றன. ''வெங்காய வெடியை வெடிக்கிறேன்'' என்று கோபமாகச் சிறுவன் உயரத் திண்ணையிலிருந்து வெங்காய வெடியைக் கீழே போட்டான். அவ்வளவுதான். கீழே கூடியிருந்த நெருப்புக் கோழிகள் வெங்காய வெடிகள் கீழே பூமியில் விழுவதற்குள் அவைகளை விழுங்கிவிட்டன. அதனால் ஒரு வெங்காய வெடியாவது வெடிக்கவில்லை.

''அம்மா, அம்மா! எதிர் வீட்டுக் குஞ்சு, யானை வெடி வாங்கக் கடைக்குப் போயிருக்கான். நானும் அதுக்குத்தான் உன்னிடம்....''

கொம்பு வாணத்தைக் கொளுத்தி அது பல வர்ணங்களுடன் மேலே செல்வதையாவது பார்க்கலாம் என்று கொம்பு வாணத்தைக் கீழே வைத்துக் கொளுத்தியதுதான் தாமதம்; பெரிய தவளைகள் பல அதன்மீது பாய்ந்து கொம்பு வாணத்தைக் கீழே தள்ளின. அதனால் வாணம் உயரே செல்லாமல் தரையிலேயே பீச்சியது. உடனே சிறுவன் தெருப் பக்கம் வந்து, இதை மற்றச் சிறுவர்களுக்குச் சொல்வதற்காக வாசலில் நின்ருன். தெருவில் மற்றச் சிறுவர்களுக்கும் இதேபோல் ஏற்படவே அவர்களும் வருத்தத்துடன் வந்து நெருங்கினுர்கள். வெடிகள் வெடித்தால்தானே சிறுவர்களுக்குச் சந்தோஷம்?.

எல்லாச் சிறுவர்களும் ஒன்று சேர்ந்து, ''டேய், நாம் தவளைவாணத்தைத் தண்ணீரில் கொளுத்தி வேடிக்கை பார்க்கலாம். அப்போது தவளையோ, நெருப்புக் கோழியோ ஆந்தையோ நமக்கு ஒரு கெடுதியும் செய்ய முடியாது'' என்று நிச்சயித்தார்கள். 'அதுதான் சரி' என்று எல்லாரும் தவளை வாணங்களை எடுத்துக் கொண்டு குட்டைக்குச் சென்ருர்கள். இவர்கள் அங்கே போன சமயம் பல யானைகளும் ஒட்டகங்களும் அந்தக் குட்டையில் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தன. அவை கரையேறியபின் குட்டையில் ஒரு பொட்டுத் தண்ணீர் இருக்கவேண்டுமே! அதைப்பார்த்த சிறுவர்கள் அப்படியே ஏமாந்து நின்ருர்கள். அவர்களுக்கு அழுகையே வந்துவிட்டது. அந்தச் சிறுவர்களைப் பார்த்து அங்கே கூடியிருந்த அத்தனை பிராணிகளும் பட்சிகளும் சுற்றிச் சுற்றி வந்து, மகிழ்ச்சியோடு கூச்சலிட்டன.

வேடுவச் சிறுவர்களுக்குப் புத்தி வந்தது. அவர்கள் ஒன்று சேர்ந்து கைகூப்பி, ''மிருகங்களே, பிராணிகளே! சரியான பாடம் கற்ருேம். கனவிலும் உங்கள் வழி இனி வர மாட்டோம்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

அதைக் கேட்ட பிறகுதான் அந்தக் கூட்டம் காட்டை நோக்கித் திரும்பியது. சிறுவர்கள் வெடிகளையும் வாணங்களையும் கொளுத்திச் சந்தோஷமாகத் தீபாவளியைக் கொண்டாடினுர்கள்.

வளரும் எழுத்தாளர்கள்

பெரும்பாலும் கல்லூரி மாணவர்கள் அடங்கிய இந்த எழுத்தாளர் வரிசையிலே சில கல்லூரி ஆசிரியர்களும் இருக்கிறார்கள். வளரும் இலக்கியம் படைத்து வரும் இவர்களைப்பற்றிய குறிப்பு பின்னர் வெளிவரும்.

'சுருமீன்'

'ஜம்பு'

'நிலவுச்சிரிப்பன்'

எஸ். விசுவநாதன்

'ரகமி'

நா. ஜகந்நாதன்

தே. பார்த்தசாரதி

தம்பி ஸ்ரீநிவாஸன்

வான்மதி'



எஸ். சுந்தரராஜன்

கே. எஸ். பி.

'ரமிலன்'

பாரதி தங்கராசன்

வடமலை அழகன்

ஜே. எம். சாலி

ஆர். சரஸ்வதி

கே. சுந்தரேசன்

தாபி. எஸ். ரமணி

தஞ்சை அ. பிச்சை

'ஜோவலன் வாஸ்'

'கோபாகி'

விமலா ரமணி

'பூரம்'

வி. ஆர். சௌரிராஜன்

'வேதா'

எம். எம். மக்கீன்

'களிகைதராசு'

இரா. முகி.

சு. முருகேசன்

எஸ். பி. அமலன்

பூவண்ணன்

கே. சொக்கலிங்கம்

ஜே. எத்திராஜன்

ராஜாமணி


கி. சாரங்கராஜன்

கே.வி.எஸ். மோகன்

லியோஜோஸப்

ஜி. ஜயராமன்

தெ. பா. சீதாராமன்

பி. கலாசாமி

ந. ராமாநுஜன்

கே. கண்ணுச்சாமி

கோவர்த்தனன்

அ. ஸ்ரீநிவாஸன்

ஆர். குரு

மனித சாதி

மு. வரதராசன்

ஒரு நாள் காட்டில் விலங்குகள் அங்கும் இங்கும் ஓடி ஒளிந்துகொண்டிருந்தன. பறவைகள் கலைந்து, பறந்து அலைந்துகொண்டிருந்தன. காட்டின் இடையே ஒரு மரத்தின் கிளையில் இரண்டு குயில்கள் இருந்தன. விலங்குகளும் பறவைகளும் இவ்வாறு அலைவதைக் கண்டு அந்தக் குயில்கள் அஞ்சியிருந்தன. யாரோ காட்டிற்குள் வேட்டையாட வந்திருக்கிறார்கள், அதனால்தான் விலங்குகளும் பறவைகளும் இப்படி அலைகின்றன என்பதைக் குயில்கள் தெரிந்துகொண்டன. பெண் குயில் ஆண் குயிலைப் பார்த்து, ''எனக்கு என்னவோ பயமாக இருக்கிறது. நீ ஒரு பாட்டுப் பாடு. பயம் தீரும். அல்லது நானாவது ஒரு பாட்டுப் பாடுவேன்'' என்றது.

''கொஞ்சம் பொறு; இப்போது பாட்டு வேண்டாம்'' என்றது ஆண் குயில்.

பெண் குயில் வருந்தியது. ''பாட்டுப் பாடுவதற்கு இது எவ்வளவு பொருத்தமான காலம்! வானம் என்ன அழகாக நீல வண்ணமாகத் தோன்றுகிறது. ஒரு சிறு மேகமும் வானத்தைக் களங்கப்படுத்தவில்லை. தென்றல் காற்று எவ்வளவு மென்மையாக வீசுகிறது! ஏன் இப்படி ஒடுங்கியிருக்க வேண்டும்?'' என்றது.

''நீ சொல்வதை நான் நன்றாக உணர்கிறேன். எனக்கும் பாட வேண்டும் என்று ஆசை தூண்டுகிறது. மிகப் பொருத்தமான காலம்தான். என்ன செய்வது? அந்தப் பாழும் மனிதர்களுக்கு நம் குரல் என்றால் விருப்பம் மிகுதி. நாம் பாடிய உடனே அந்தக் குரலைக் கேட்டுக்கொண்டே இந்த மரத்தடியில் வந்துவிடுவார்கள். அதனால்தான் அஞ்சுகிறேன்'' என்றது ஆண் குயில்.

''ஐயோ! என்னால் பாடாமல் இருக்க முடியவில்லையே. என் குரல் தினவெடுக்கிறது. ஒரே ஒரு சிறு பாட்டாவது பாடிவிடுவேன். அவர்கள் வந்தால் நம்மைக் கண்டுபிடிக்க முடியாது. மனிதர்களின் கண்ணுக்குத் தெரியாமல் கிளைகளில் இலைகளுக்கு இடையே ஒளிந்திருக்கும் வித்தை நமக்குத் தெரியும் அல்லவா?'' என்று சொல்லிக்கொண்டே பெண் குயில் 'கூஊ கூஊ' என்று மெல்லப் பாடியது.

ஆண் குயில் வாயைத் திறக்காமல் அமைதியாக இருந்தது. அப்போது சிறிது தொலைவில் மனிதர்களின் காலடியின் ஓசை கேட்டு அதன் உள்ளம் அஞ்சியது. யாரோ வருகிறார்கள்; இலை நெருங்கிய இடத்தில் அமர்ந்து ஒளிந்துகொள்வோம் என்று பெண் குயிலுக்கு எச்சரிக்கை செய்தது. இரண்டும் அவ்வாறே இலை நெருங்கிய இடத்தில் ஒளிந்துகொண்டு அச்சத்தோடு இருந்தன.

வந்த கூட்டம் வேட்டைக்கு வந்த கூட்டம்தான். அந்தக் கூட்டத்தின் தலைவன் ஒரு நாட்டின் அரசன். அவனைச் சுற்றிக் காவலாட்களும் வீரர்களும் ஆயுதங்களுடன் வந்தார்கள். அந்த மரத்தில் இலைகள் அடர்த்தியாக இருந்தபடியால், நிழல் நன்றாக இருப்பதைக் கண்டதும், வந்தவர்கள் நேரே அங்கேயே வந்து தங்கினார்கள்.

அரசன் அமைச்சரைப் பார்த்து, ''அமைச்சரே! இந்தப் பக்கத்தில் தான் அந்தக் குயிலின் இனிய குரல் கேட்டது. அது இந்த மரங்களில் எவற்றிலாவது ஒளிந்து கொண்டிருக்கும், பாருங்கள்'' என்ருன்.

''அது பாடிவிட்டுப் பறந்து போய்விட்டிருக்கும். இப்போது எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?'' என்ருர் அமைச்சர்.

''ஒரு வேளை இருந்தாலும் இருக்கும். பாருங்கள்'' என்று அரசனும் தலை நிமிர்ந்து மரத்தின் கிளைகளைப் பார்த்தான். ''குயிலைப் பார்த்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. குயில்மட்டும் ஏன் இப்படி ஒளிந்துகொள்கிறதோ, தெரியவில்லை. சின்ன சின்ன சிட்டுக் குருவிகள் நம் எதிரிலேயே பயப்படாமல் திரிகின்றன. இந்த இசைக் குயில்கள்மட்டும் ஏன் இப்படிப் பயப்பட வேண்டும்? நான் எத்தனை இசைக் கலைஞர்களுக்குப் பரிசு கொடுத்துப் பாடல்களைக் கேட்டு மகிழ்கிறேன். இந்தக் குயில்கள் கிடைத்தால் ஒரு துன்பமும் செய்யாமல் கூட்டில் வைத்து வளர்த்து இசை கேட்டு மகிழ்வேனே!'' என்ருன்.

அரசனுடைய இந்தப் பேச்சைக் கேட்ட குயில்களுக்கு அச்சம் மிகுதியாயிற்று. கூட்டில் அடைப்பதற்காக வலை வீசிப் பிடிப்பானே என்று அஞ்சி நடுங்கின.

''நாம் உடனே பறந்து ஓடிப் போக வேண்டும். இங்கே இருப்பதே ஆபத்து!'' என்றது பெண் குயில்.

''இப்போது மரத்தைவிட்டுப் பறந்தால் எவனாவது குறி பார்த்துக் கொன்றுவிடுவான். வாய் திறக்காமல் ஒளிந்திருப்பதே நல்லது'' என்றது ஆண்.

வெயிலில் நடந்து அலைந்துவந்த காரணத்தால் அரசனுக்கு உறக்கம் வந்தது. அமைச்சனிடம் பேசியபடியே கொட்டாவிவிட்டு மெல்ல உறங்கிவிட்டான். காவலாட்களும் வீரர்களும் உறங்கத் தொடங்கினர்கள். எல்லாரும் உறங்கிவிட்டதைக் கண்ட குயில்கள் ஒருவாறு அச்சம் நீங்கி இருந்தன. அப்போது அமைச்சர் ஒருவர் மட்டும் உறங்காமல், கண்ணை மட்டும் மூடியபடி இருந்தார்.

''நாம் இப்படிப் பயந்து பயந்து வாழ்கிருேமே. இது என்ன வாழ்வு! காக்கையைக் கண்டால் பயம்! வல்லூறு முதலானவற்றைக் கண்டால் பயம்! மனிதனைக் கண்டாலும் பயம்! எவ்வளவோ இனிமையாகப் பாடும் இசைக் கலையை நமக்குக் கொடுத்த கடவுள், இந்தப் பயந்து வாழும் வாழ்வை ஏன் கொடுத்தார்?'' என்றது பெண் குயில்.

அமைச்சர் கண்ணை மூடியபடியே வியந்து கேட்டுக்கொண்டிருந்தார்.

''உனக்கு உண்மை தெரியவில்லை! நாம் மட்டும்தான் பயந்து வாழ்கிருேம் என்று எண்ணிக் கொண்டிருக்கிருய்'' என்றது ஆண் குயில்.

''ஆமாம்! மற்றப் பறவைகளும் விலங்குகளும் பயப்படாமல்தான் வாழ்கின்றன'' என்றது பெண்.

''இல்லை, இல்லை. நன்ருக எண்ணிப் பார். விலங்குகளின் அரசன் என்று சொல்லப்படும் சிங்கம் எப்படி வாழ்கிறது? ஒவ்வொரு நாளும் அது பகலெல்லாம் கற்களின் இடுக்கில் உடம்பை ஒடுக்கி அடங்கிக் கிடக்கிறதே! அது ஏன்? பயந்து வாழ்வதால்தான்! வானத்தில் உயரப் பறக்கும் பருந்துகளும் கழுகுகளும் ஏன் சின்ன மரக்கிளைகளில் உட்காருவதில்லை? பயந்துதான்! இந்த மனிதர்களையே எண்ணிப் பார். நாம் கடவுள் கொடுத்த சிறகுகளையும் அலகுகளையும் நகங்களையும் மட்டும் நம்பி வாழ்கிருேம். நம்முடைய பயம் சிறிது. இவர்களைப் பார். கையும் காலும் பல்லும் நகமும் போதா என்று இவர்கள் எத்தனை ஆயுதங்களைச் செய்து எடுத்துக்கொண்டு வந்திருக்கிருர்கள்! நாம் கவலை இல்லாமல் இந்த மரத்தைவிட்டு வேறு மரத்திற்கும், இந்தக் காட்டைவிட்டு வேறு காட்டுக்கும் பறந்து போகிருேம். இவர்கள் அப்படிப் போக முடியுமா? வேறு நாடுகளில் இவர்கள் அஞ்சாமல் வாழ முடியுமா? எத்தனை கோட்டை, கொத்தளங்கள் வைத்

துக்கொண்டு வாழ்கிருர்கள்?'' என்றது ஆண்.

''உண்மைதான்'' என்றது பெண் குயில். அதன் உள்ளத்தில் அச்சம் குறைந்து ஒருவகை ஆறுதல் பிறந்தது.

ஆண் குயில் மேலும் சொன்னது: ''நாம் எவ்வளவோ மேலானவர்கள். நம் சாதி குயில் சாதி. நாம் மற்றக் குயில்களைக் கண்டு பயப்படுகிருேமா? இல்லவே இல்லை. இந்த மனித சாதி மட்டமான சாதி. மனிதர் மனிதரையே கண்டு மிகவும் அஞ்சுகிருர்கள். புலி கரடிக்கு மனிதர் அஞ்சுவதைவிட மனிதருக்கு மனிதர் அஞ்சுவதே மிகுதி. அந்தப் பயம் முற்றிய போதுதான் போர் நடத்திச் சாகிருர்கள். அதற்காகவே பெரும் பொருள் செலவிட்டுப் பெரு முயற்சி செய்கிருர்கள். நாம் வாழ்வதற்காக உழைக்கிருேம், வாழ்வையே பாடுகிருேம். இந்த மனிதர்கள் சாவதற்காக உழைக்கிருர்கள், சாவையே பாடுகிருர்கள்.''

பெண் குயில் பேசாமல் இருந்தது.

''என்ன எண்ணுகிருய்?'' என்றது ஆண்.

''ஆமாம். மனித சாதி மட்டமான சாதிதான்'' என்றது பெண்.

அமைச்சரால் அமைதியாகப் படுத்திருக்க முடியவில்லை. இவ்வளவு இழிவாகப் பேசிய அந்தக் குயில்களைப் பார்க்க வேண்டும் என்று எழுந்து இங்கும் அங்கும் பார்த்தார். இதுதான் நல்ல சமயம் என்று குயில்கள் இரண்டும் அப்பால் பறந்து போய்விட்டன.

அரசன் விழித்து எழுந்ததும் தாம் கேட்டதை எல்லாம் அமைச்சர் கூறினர். அரசன் வெட்கத்தால் தலை குனிந்தான். ..

தங்க மீன்
கதை: கி.ரா. சித்திரம்: சுசி
பங்கஜமும், அம்மாவும் கோவிலுக்குப் போனார்கள். வழக்கம்போல் பங்கஜம் குளத்துப் படிக்கட்டில் உட்கார்ந்தாள்
நான வரும் வரையில் இறங்காமல் உட்கார்ந்திரு! படி வழுக்கும்!
சரி அம்மா!
ஜலத்திலே வெள்ளி போல் துள்ளித்திரியும் பலவித மீன்களை அவள் ஆசையோடு பார்த்துக்கொண்டிருந்தாள்
அதோ சிவப்புக் கழுத்து மீன்! எல்லாம் என்ன அழகு! நானும் ஒரு மீனாகிருந்தால்.
அப்போது அவள் காலை மீன் பிறாண்டியது
பங்கஜம்! நீ நினைப்பது எனக்குத் தெரிகிறது. நீ விரும்பினால் இப்போதே மீனாகிவிடலாம்!
அப்படியானால் என்ன செய்யவேண்டும்?
ஒன்றும் இல்லை ஆனால் படியில் இறங்கு! தயங்கினால் முடியாது!
பங்கஜம் அம்மா கூறியதை நினைத்துத் தயங்குகிறாள்
இடுப்பளவு ஜலத்தில் துணிந்து இறங்கியதும்..
அதோ எங்கள் ராணி!
வியப்படைந்த பங்கஜத்தைப் பார்த்து மீன் ராணி பேச ஆரம்பித்தாள்..
நன்றாக யோசி! மீனான பிறகு மீண்டும் மனுஷியாக முடியாது!
ஆகாவிட்டால் பரவாயில்லை. என்னை அழகான தங்க மீனாக மாற்றிவிடு!

மீன் ராணி உடனே மந்திரவாதி மீனை அழைத்துப் பங்கஜத்தை மீனாக்கும்படி உத்தரவிட்டாள். மந்திரவாதி பங்கஜத்தின் தலையில் கோலை வைக்கவே அவள் மீனாகி விட்டாள்
பெண்ணே! இனி உன் பெயர் தங்க மீன்! நீ தான் இப்பொழுது எவ்வளவு அழகாகி விட்டாய்!
எல்லா மீன்களும் போன பிறகு தங்கமீன் கரையை மெல்ல எட்டிப் பார்த்தது.
பங்கஜம்! அடி பங்கஜம்! எங்கேயடி போய்விட்டாய்!
இதோ இருக்கிறேனம்மா! இதோ பார்! காது கேட்கவில்லையா? தண்ணீரில் இருக்கிறேனே!
தங்கமீன் கத்துவது அவளுடைய அம்மாவின் காதில் விழவில்லை. அம்மா அழுது பதறினாள்.
தங்க மீனுக்கு அழுகை அழுகையாக வந்தது...
இதற்காகவா அழுகிறாய்? அசடே, வா! உனக்கு நீராழி மண்டபம் எல்லாம் காட்டுகிறேன்!
சரி, வா!
இவ்வாறு தங்க மீனைச் சமாதானப்படுத்திய சிவப்புக் கழுத்து, தங்க மீனுக்கு வேடிக்கைகள் எல்லாம் காட்டியது. எப்படி நீந்துவது வலையில் அகப்படாமல் தப்புவது என்றெல்லாம் சொல்லித்தந்தது. ஆயினும் ஒரு நாள் மாலையில் .....
ஒரு செம்படவன் போட்ட வலையில்....
ஆ! தங்க மீன்!
இவற்றை உயிரோடு விற்றுவிட்டால் போதும், இன்றைக்கு!

கடைத்தெருவில்....
உயிரோடு தங்கமீன்! தங்கமீன் வாங்கலியோ, தங்கமீன்!
என்னப்பா விலே
அது அஞ்சு ரூபாயுங்க!
அடி, என்ன அழகான மீனடி!
அடேயப்பா! ஒரு மீனுக்கா அஞ்சு ரூபாய்!
ஒருத்தரும் வாங்கமாட்டேங் கறாங்க! அப்போ இது சமையலுக்குத்தான்! இன்னிக்கி முளிச்ச மூஞ்சி நல்லா இல்லே!
இப்படி எண்ணுவதற்குள் அவன் அருகே ஒரு மோட்டார் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு கனவான் அவனே அழைத்து....
நீயா தங்கமீன் விற்பவன்? என்ன விலே?
நான்தான்! அதன் விலே பத்து ரூபாய்!
பத்து ரூபாயா? சரி; அப்படியே கலயத்துடன் கொடு!
பாபு! அடே பாபு! இதோ பார், என்ன கொண்டுவந்திருக்கிறேன் என்று!
3

பாபு அதைக் கண்ணாடித் தொட்டியில் விட்டுவிட்டு.....
ஆகா! அழகான தங்கமீன்! யார் வீட்டுக் காட்சியிலும் இந்த மீன் இருக்காது!
தங்கமீன் கண்ணாடித்தொட்டியிலிருந்து வருத்தத்தோடு வீட்டையும் சிறுவர்களையும் பார்த்து ஏங்கியது!
மறுநாள்......
அதோ வருவது யார்! அம்மா போல இருக்கிறதே!
பங்கஜத்தின் அம்மாவும், பாபுவின் அம்மாவும்...
குழந்தை என்ன ஆனளோ! தேடாத இடம் பாக்கியில்லே!
அம்மா! இதோ பார் அம்மா! இங்கே இருக்கிறேனே!
தங்கமீன் அழைத்த தால் அம்மாவுக்குக் கேட்பால் தானே?
அம்மா! அம்மா!
ஏம்மா! தூக்கத்தில் என்னைக் கூப்பிடுகிறாய்! குளத்தின் படிக்கட்டில் உட்கார்ந்து தூங்கலாமா? எழுந்திரு வீட்டுக்குப் போவோம்!
அப்பா! பிழைத்தேன் அத்தனையும் கனவு! நல்ல வேளை!
சுபம் 4

தீபாவளிக் கூத்து!

'லெமன்'

மணி: அக்கா இங்கே பாரு!
ஆகா என்னைப் பாரு—புதுச்
சொக்கா நிஜார் போட்டி ருக்கேன்;
ஜோரா யிருக்கா பாரு!
அருமை அக்கா சொல்லு!
ஆய்ந்து பார்த்துச் சொல்லு—ரொம்பப்
பெருமை எனக்குப் பேன்ட்டும் ஷர்ட்டும்
பேஷா யிருக்கா சொல்லு!

கிட்டு: பட்டாஸ் பத்துக் கட்டு;
பல்பு வாணம் எட்டு—அப்பா
திட்டா விட்டால் இப்போகொஞ்சம்
தீர்த் திடுவேன் சுட்டு!
அண்ணு என்ன உசத்தி?
அவனுக் கெல்லாம் ஜாஸ்தி—இப்போ
அண்ணு சரிபங் கில்லையென்றுல்
ஆகும் பாரு குஸ்தி!

மணி: தின்னு பார்நம் வீட்டு
தீபா வளி ஸ்வீட்டு—அதிகம்
தின்னு டாதே திணறிப் போவே
திகட்டும் ஸ்பெஷல் ஸ்வீட்டு!
நம்கி கடை ஸ்வீட்டு;
நமக்குக் கம்மி ரேட்டு—ஆனல்
தும்கு தர்ருன் இல்லே தந்தால்
துளிதான் கையை நீட்டு!

கிட்டு: அக்கா சுத்த மோசம்!
ஆமா ஊமை வேசம்—என்
சொக்கா யெல்லாம் ஜோர்தான் என்று
சொன்னுல் என்ன மோசம்?

மணி: அதுவா இந்த நேரம்;
அத்தான் வரும் நேரம்—இப்போ
எதுசொன் ஞலும் ஏருதடா
எங்கே யோவி சாரம்!



அந்தியூர்ச் சந்தை

எ. ந. கணபதி

அந்தியூருச் சந்தையிலோர்
ஆடு வாங்கவே
ஆசையோடு காசுசேர்த்தேன்
ஆறு மாசமாய்

முந்தியிலே காசை வைத்து
முடிச்சுப் போட்டிட்டேன்
மும்முரமாய் வண்டிகட்டிப்
பயணம் புறப்பட்டேன்.

சந்தை பெரிய சந்தையாம்
அந்தி யூருச் சந்தையாம்
எந்தப் பக்கம் திரும்பினாலும்
எண்ண முடியாத் தலைகளாம்

மாட்டு வண்டிக் கூட்டமாம்
வகை வகையாய்க் கடைகளாம்
ஆட்டு மந்தை மாட்டு மந்தை
அணிஅணியாய் வருகுதாம்

பச்சைக் காய்கள் வாங்கலாம்
பல சரக்கும் வாங்கலாம்
இச்சைக் கேற்ற கனிவகைகள்
ஏராளமாய் வாங்கலாம்

அம்பிக்கொரு பொம்மை
அம்மா வுக்குச் சேலை
வம்பு பேசும் தங்கச்சிக்கு
வளையல் வாங்கி வைத்தேன்.

அந்தியூருச் சந்தையிலோர்
ஆடும்வாங்கினேன்
அருமையோடு வீட்டிலதை
வளர்க்கப் போகிறேன்

முந்தியிலே முடிஞ்சகாசு
மறைஞ்சு போச்சுது
வந்தவழியைப் பார்த்து
ஊரு திரும்பியாச்சுது!

அம்மாவும் குழந்தையும்

ஆர். சரஸ்வதி

குழந்தை: குடிக்க நல்ல பாலை நமக்குக்
கொடுப்ப தாரம்மா? பாலைக்
கொடுப்ப தாரம்மா?

அம்மா: கோடி வீட்டுக் குப்பன் வந்து
கொடுக்கி ருனம்மா - பாலைக்
கொடுக்கி ருனம்மா.

குழந்தை: குப்பனுக்குப் பாலைக்கொண்டு
கொடுப்ப தாரம்மா? பாலைக்
கொடுப்ப தாரம்மா?

அம்மா: குப்பன் வீட்டில் வளரும் பசுவும்
கொடுக்கிற தம்மா - பாலைக்
கொடுக்கிற தம்மா!

குழந்தை: குப்பன் வீட்டுப் பசுவுக் குப்பால்
கொடுப்ப தாரம்மா? - பாலைக்
கொடுப்ப தாரம்மா?

அம்மா: குப்பன் பசுவின் மடியிலிருந்து
கறக்கி ருனம்மா - பாலைக்
கறக்கி ருனம்மா!

குழந்தை: மடியி னுக்குள் பாலை நிரப்பி
வைப்ப தாரம்மா? - பாலை
வைப்ப தாரம்மா?

அம்மா: கடவுள் பாலைக் கொண்டு மடியில்
கொட்டு ருரம்மா - பாலைக்
கொட்டு ருரம்மா

குழந்தை: மடியி னுக்குள் கடவுள் போக
முடியு மோஅம்மா? - போக
முடியு மோஅம்மா?

அம்மா: துடுக்குப் பெண்ணே, தெரிய வில்லை
தூங்க லாமம்மா - எனக்குத்
தூக்கம் வருதம்மா!

கதை: 'ஆர்வி'

கடற் புலி

சித்திரம்: ஸாமி

நான் அந்நியன். உங்களோடு எனக்குச் சண்டை யில்லை. புயலில் சிக்கி, உயிர் பிழைத்தவன். என்னைத் தயவு செய்து விட்டு விடுங்கள்!

ஹோ ஹா!
ஹோ! ஹா!
ஹோ! ஹா!

கூட்டத்தில் ஒரு
பார்த்து கையை
ஹா ஹோ! ஹா ஹோ! ஹா ஹோ!
கிழவன் முன்வந்து தலைவனைப்
தூக்கி . . . .

பேசாமல் இரு. இவர்களுக்கு நீ பேசுவது புரியாது. நான் கேட்பதற்கு நீ பதில் சொல்வது போல் சொல். நான் பார்த்துக் கொள்கிறேன்.
பெரியவரே! நன்றி!

(தொடரும்)

கண்ணன்
சித்திரப் போட்டி

குழந்தைகளின் கலையார்வத்தைத் தூண்டுவதற்காக, ஆண்டு தோறும் கண்ணன் சித்திரப் போட்டி நடத்துகிறோம். இந்த ஆண்டுப் போட்டிக்குக் கிட்டத்தட்ட இரண்டாயிரம் படங்கள் வந்திருந்தன. அவற்றில் பரிசு பெற்ற ஆறு படங்களை இங்கே பெருமிதத்துடன் வெளியிட்டிருக்கிறோம். தமிழ் நாட்டுக் குழந்தைகளின் கலையுணர்ச்சி மிகவும் உன்னதமாக இருக்கிறது என்பதற்கு இந்தப் படங்களே அத்தாட்சி. இந்தப் படங்களைத் தீட்டி அனுப்பிய குழந்தைகளுக்குக் கண்ணனின் அன்பு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்தப் படங்கள் உங்களுடைய ஒருமுகமான பாராட்டுக்களுக்கு உரியதாகும் என்று கருதுவதோடு, இன்னும் போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் ஊக்கமும் உண்டாக்கும் என்று நம்புகிறோம்.

— ஆசிரியர்.

பரிசு பெற்ற படங்கள்

நதியின் நடுவில்
வே. மித்தர்
(வயது 15) தல்லாகுளம்



காஷ்மீரில் ஒரு காட்சி
ஏ. ஆர். உதயசங்கர்
(வயது 10) செஞ்சி

ரெயில் மேம்பாலம்

அ. அனந்த
கிருஷ்ணன்
(வயது 14)
ராயபுரம்



நாட்டுக்கு
உழைப்போர்
நல்லது
செய்வோர்!

எம். அண்ணமலே
(வயது 12)
பள்ளத்தூர்

ஆதவன் வீழ்ந்திட்டாலும்
அழகினைக் காட்டிச்
செல்வான்

எம். கே. தாயுமானவன்
(வயது 16)
திருவள்ளூர்

மாலைக் காட்சி

ர. பரமேசுவரன்
(வயது 13)
புது டில்லி

பொழுதுபோக்கு

1



ஊறுகாய் ஜாடிகள்: ஊறுகாய் ஜாடிகளை ஒழுங்குபடுத்துவதற்காக ஒரு பெண் பக்கத்தில் நிற்கிருள். ஒரே சமயத்தில் இரண்டு ஜாடிகளை எடுத்து இடம் மாற்றி வைக்கலாம். அநாவசியமாக அவற்றை எடுத்துப் புரட்டாமல் மிகக் குறைந்த தடவைகளில் அவள் எடுத்து வைக்க வேண்டும். எவ்வளவு தடவை அப்படி மாற்றி வைக்க வேண்டியிருக்கும்?

2

காரம் காய்கள்: கறுப்புக் காய்களில் ஐந்து, வெள்ளைக் காய்களில் ஐந்து ஒன்று மாற்றி ஒன்ருக இருக்கின்றன. கடைசி இரண்டு இடம் காலியாக உள்ளன. இப்பொழுது ஐந்து கறுப்புக் காய்கள் ஒரு புறமாகவும் ஐந்து வெள்ளைக் காய்கள் ஒரு புறமாகவும் வரும்படி செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்போது காலி இடங்களில் ஒரே சமயத்தில் அடுத்த அடுத்த இரண்டு காய்களைத்தான் எடுத்து வைக்கலாம். கைக் காயை மாற்ருமல் வையுங்கள், பார்ப்போம்.

விடை: 62-ஆம் பக்கம்.







போட்டோ க்விஸ்

படங்களைப் பார்த்து என்ன படங்கள் என்று கண்டுபிடியுங்கள்.



6



7

8



9



10

விடைகள்: 62-ஆம் பக்

போட்டோ: என். ராமகிருஷ்ண

21810

சென்னை-600 008

கோமாளிப் பரிசுகள்

இந்தக் கோமாளி கொண்டுவந்த பரிசுகளை யாரோ ஒளித்து விட்டார்கள். எத்தனை பரிசுகள், என்ன என்ன பரிசுகள் என்று கண்டு பிடியுங்கள்.

விடை 62-ஆம் பக்கம்.

சித்திரக் கட்டம்

க. திருநாவுக்கரசு



கட்டத்தைச் சுற்றியுள்ள படங்களைப் பார்த்து, கட்டங்களைச் சரியாகப் பூர்த்தி செய்யவேண்டும்.

விடை: 62-ஆம் பக்கம்.

வழி எப்படி?



வெளியூர் மாட்டு வண்டிக்குச் சரியான வழி தெரியவில்லே. ஆபத்தும் தடையுமில்லாத வழிகளே உங்களால் கண்டுபிடித்துச் சொல்ல முடியுமா?

வெட்டி ஒட்டுங்கள்

நல்ல நிழற்படம் ஒன்றை ஒரு குழந்தை சுக்கல் சுக்கலாகக் கத்தரித்துவிட்டது. அந்தத் துண்டுப் படங்களைச் சேர்த்து ஒட்டி அது என்ன நிழற்படம் எனறு கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்.

விடை: 62-ஆம் பக்கம்.

ஒரு நாள் வேலை!

கா லை 7 இருக்கும். பவன் ஹோட்டல் யேறி

வந்தான் 1 யன். சுற்றும் யாகப் பார்த்து உட்

ந்தான். ஹோட்டல் வந்ததும், "யா! 1

டில் 3 களும் 1 யும் கொண்டு வா!" என்று R டர்

கொடுத்தான். சாம்பா யும் வந்தது. 2 ஆக

அதைத் தின்றான். "ஒரு தோசை" என்று லி மூடு

முன் தட்டில் வந்தது. பிறகு . டிபன் ந்ததும்

கொடுத்தான். யன் க்குக் கீழே உட் ந்து

களைக் காலி செய்தான். யில் கழுவிவிட்டு, பில்

லோடு யடிக்கு வந்தான். பவன் முதலாளியைப்

பார்த்து, "என்னைத் தெரிய லையா? நான்தான்

. க் . இரட் த் தெரு. போன முறைகூட

யில் கொண்டு வர லை. சாப்பிட்டு விட்டேன்.



போனால் போ ம், என விட்டு விட்டீர்கள். இல்லையா?"
என்று கேட்டான். ஆமாம், என்று ணை த்
திறந்தார். உடனே, "அப் யே இன்றும் கொண்டு
வர லை. பில் 9 தான்!" என்று கூறியவாறே
யில் எடுத்து வைத்தான். சட்டென்று யைத்
னார். "அடே கோ ! அந்தப் யனைப் . பத்திரி
யிலே துணுக் ப் த்துவிட்டு உண் யிலேயே ஏமாற்
றப் பார்க்கிறான் !" என்று அ னார். கோ
ச்ச லில் ந்து சிவராம னைப் பிடித்து வந்தான்.
"அடே யா, யாரிடம் க்கிறாய்? கழற்று, உன் சட்
யை. ½ த் யை இறுகக் . கோ ! இவன்
யிலே யைக் கொடு. 9 க் கூலிக்கு 1 நாள்
க்கட்டும்" என்றார் . சிவராம கலங்க, சட்
யைக் கழற்றினான். 7 வரை களைத் த்தான்.

சேர்த்துப் பார்!

எலி ஒன்று கீழே எதையோ கூர்ந்து பார்க்கிறது. அது என்ன வென்று தெரியவேண்டுமானால் எண்களை வரிசைக் கிரமமாகச் சேர்த்துப் பாருங்கள்.

விடை: 62-ஆம் பக்கம்

வேடிக்கைக் கணக்கு

5 8 7 3 = 50
7 6 3 5 = 44
9 4 2 7 = 17

இரண்டு எண்களுக்கு மத்தியில் என்ன என்ன கணிதக் குறிகள் போடவேண்டும் என்று குறிப்பிடுங்கள்.

1 முதல் 9 வரையில் இந்தக் கட்டங்களில் பூர்த்திசெய்து விடையைப் பாருங்கள்.

			12
			17
			16
15	12	18	13



3, 4, 5, 6, 7, 8, 9 இவைகளைக் கட்டங்களில் போட்டுக் கூட்டுத் தொகை 18 வரவேண்டும்.

சிதறியுள்ள இந்த எழுத்துக்களைக் கொண்டு ஒரு வாக்கியத்தை அமைக்கலாம்.

ரகமி

விடை: 62-ஆம் பக்கம்

நரகாசுரன் சிரிப்பு



செய்யும் விதம்

முதலில் மேலே உள்ள படத்தைப் புள்ளிக்கோட்டோடு வெட்டிக் கொள்ளுங்கள். பிறகு இதை இடதுபுறமுள்ள நரகாசுரன் வாயோடு பொருந்தும்படி, ஒட்டு என்ற இடங்களில் மட்டும் பசையைத் தடவி ஒட்டுங்கள். ஒட்டுவதற்கு முன்னால் அ என்ற நடுக்கோட்டை மேல்புறம் இருக்கும்படி மடித்துக்கொண்டு ஒட்டினால்தான் ஆ, இ பகுதிகளின் பின்புறம் சரியாக வரும். இந்தப் பக்கத்தை இன்னும் கனமான தாளில் ஒட்டிக்கொண்டு படத்தின் நடுக் கோட்டுக்குச் சரியாக உள்புறமாகக் குறுக்கினால் நரகாசுரன் சிரிப்பான்! நாமும் சிரிக்கலாம்.

பொழுது போக்கு

விடைகள்:

ஊறுகாய் ஜாடிகள்: 13, 19 என்ற ஜாடிகள் அவற்றிற்குரிய இடங்களிலேயே உள்ளன. அதனுல் 22 முறை மாற்றி அடுக்கினுல் சரியாக வந்துவிடும். ஆனுல் இது குறைந்த எண் அல்ல? 17 தடவைகளிலேயே சரியாக மாற்றி, அமைத்துவிட முடியும். (3-1, 2-3) (15-4, 16-15) (17-7, 20-17) (24-10, 11-24, 12-11) (8-5, 6-8), (21-6, 23-21) (22-23, 14-22) (9-14, 18-9)

காரம் காய்கள்: இந்தக் கட்டம்போல் படம் போட்டுக்கொண்டு காய்களை மாற்றி வைத்துக்கொண்டு வாருங்கள். இடது பக்கக் காய் இடது பக்கமாகவே ஒதுங்கவேண்டும். வலது பக்கக் காய் வலது பக்கமாகவே ஒதுங்கவேண்டும். கைமாற்ருமலே ஒரு கோடியில் இரண்டு இடம் காலியாகும்படி, காய்களை ஐந்தாவது தடவையில் வரிசைப் படுத்தி விடலாம்.



போட்டோ க்விஸ்: 1. கடல் சங்கு. 2. பலூன்கள். 3. பெண்கள் டம்பப் பை. 4. அகார்டியன் வாத்தியம். 5. இன்ஜெக்ஷன் சிசாக்கள். 6. லஸ்தர் விளக்குகள். 7. ஈச்சங் கூடைகள். 8. புல் பத்தைச் சிங்காரம். 9. குதிரைச் சேணம். 10. பழச்சாறு பிழியும் கண்ணுடி.

கோமாளிப் பரிசுகள்: 1. முயல் பொம்மை. 2. மணி. 3. ஊதல். 4. புத்தர். 5. ஆடும் குதிரை. 6. குடை. 7. ஏரோப்ளேன். 8. துப்பாக்கி. 9. பொம்மைக் கரடி. 10. மோட்டார். 11. வாத்து. 12. டமாரம். 13. கிண்ணம்.

சித்திரக் சட்டம்: இ. வ. 1. வாத்து, 4. தலை, 6. கப்பல் 8. பல், 9. பல்லி. 11. அரம். 13. ஏணி. 14. பந்து, 15. காகம், 17. செம்பு, 18, ஏழு, 19. கை. 20. குடை.

மே. கீ. 1. வால், 2. துடுப்பு, 3. ஊதல், 5. விரல், 7. வில். 8. பம்பரம். 9. பசு. 10. லிங்கம், 11. அணில், 12. காது. 16. கழுதை, 17. செக்கு.

வெட்டி ஒட்டுங்கள்: காளிங்க மர்த்தனம்.

சேர்த்துப் பார்: பூனை.

வேடிக்கைக் கணக்கு: I (1) $5 \times 8 + 7 + 3 = 50$ (2) $7 + 6 \times 3 + 5 = 44$ (3) $9 - 4 \times 2 + 7 = 17$.

II 1, 2, 9. 6, 7, 4. 8, 3, 5.

III 9, 4, 5. 6. 7, 8, 3.

IV குழந்தைகள் விரும்பிப் படிப்பது கண்ணன் தீபாவளி மலர்.

விடுசதைப் பாடல்கள்: 1. பட்டாஸ், 2. மத்து, 3. எச்சில் இலை. 4. வெற்றிலை, 5. வாழைப்பழம், 6. தேங்காய்.

ஒரு பெரிய பணக்காரர் வீட்டில் ஒரு நாயையும் பச்சைக் கிளியையும் வளர்த்து வந்தார்கள். இரண்டுமே அந்த வீட்டில் எல்லோருக்கும் மிகவும் செல்லம்.

ஆனால் அவர்கள் அபிப்பிராயத்தில் அந்த நாய்தான் தங்கள் வீட்டைக் காவல்புரிவதாகவும் கிளி வெறும் அழகிற்காக வளர்ப்பதாகவும் கருதி வந்தனர்.

இதனால் அந்த நாய்க்குக் கொஞ்சம் கர்வம். கிளிக்கு இதில் கொஞ்சம் மன வருத்தம்.

ஒரு நாள் அந்த நாய் கிளியிடம், "கிளியாரே, உன் வெறும் அழகுக்காக உன்னை வைத்துத் தீனி போடுகிறார்களே! பார், எனக்கு அவர்கள் போடும் ஆகாரத்துக்குப் பதிலாக நான் அவர்கள் வீட்டைக் காக்கிறேன்" என்றது ஜம்பமாக.

கிளிக்கு ரோசம் வந்து விட்டது. உடனே, "நாயாரே, நான் உன்னைப் போல் அல்ல. வேண்டுமானால் என்னால் இந்த ஊரையே காக்க முடியும், தெரியுமா? நான் மனிதரைப்போல் பேச முடியும். உன்னால் முடியுமா?" என்றது.

"ஹும்...வெறும் பேச்சு மட்டும் இருந்தால் போதுமா? காரியத்தில் காண்பிக்கவேணும்" என்றது நாய். அதற்கு, தன்னால் மனித பாஷையில் பேசமுடியவில்லையே என்று சற்று வருத்தம்தான்.

கிளியும் ரோசத்தில் பேசிவிட்டதே தவிர, என்ன செய்து தன் சாமர்த்தியத்தை வெளியிடுவதென்று அதற்குப் புரியவில்லை.

இப்படி இருக்க, ஒரு நாள் இரவு அந்தப் பங்களாவின் பின்புறம் ஏதோ சத்தம் கேட்டது. உடனே நாய், 'வொள், வொள்' என்று குரைத்துக்கொண்டே பின்புறம் ஓடியது. அதன் மேல் யாரோ கல்லை விட்டெறிந்து விட்டு திபு திபுவென்று ஓடும் சப்தமும் கேட்டது. வீட்டிலுள்ளவர்கள் விளக்கைப் போட்டு ஓடி வந்து பார்த்தார்கள்.

"யாரோ திருடன் வந்திருக்கிறான். பாவம், நம் நாய் அவனைத் துரத்தியிருக்கிறது. அதைக் கல்லால் அடித்துவிட்டு ஓடிவிட்டிருக்கிறான் அந்தத் தடியன்" என்றவாறே நாயின் தலையைத் தடவிக் கொடுத்தார் அந்த வீட்டு எஜமான். நாய் ஜம்பத்துடன் நிமிர்ந்து கிளியைப் பார்த்தது. கிளிக்கு இது சற்றுப் பொறாமையாகதான் இருந்தது. ஆனால் என்ன செய்வது?

இப்படியே சில நாட்கள் சென்றன. திரும்பவும் அந்த வீட்டில் ஒரு நாள் இரவு திருடன் வந்தான். நாய் குரைக்க வாயைத் திறந்தது. அச்சமயம் கிளி, "நாயாரே, நீ சும்மா யிரு. இந்தத் தடவை நான் வீட்டைக் காக்கிறேன்" என்று கேட்டுக் கொண்டது. நாயும், 'சரி, இதன் வேலையையும்தான் பார்த்து விடலாமே' என்று சும்மாயிருந்தது.

திருடர்கள் இருவர் மெள்ள, அடிமேல் அடி வைத்து யாராவது விழித்திருக்கிறார்களா என்று பார்த்துக்கொண்டே பணப் பெட்டி இருக்கும் அறையில் நுழைந்தனர். நாய் ஆச்சரியத்துடன், ரகசியமாக, "கிளியாரே, என்ன இது? திருடன் உள்ளே நுழை



கிறான், பார்த்துக் கொண்டே நிற்கிறாயே?'' என்றது.

''உஸ் ஸ்....பார்த்துக் கொண்டே இரு'' என்று சைகை காட்டியது கிளி.

திருடர்கள் உள்ளே போய்த் தங்களால் முடிந்த அளவு வெள்ளிப் பாத்திரங்கள், நகைகள், பணம் எல்லாவற்றையும் மூட்டை கட்டிக் கொண்டு வாயிற்படியைத் தாண்டினர்.

கிளி ''ஐயோ திருடன், ஐயோ திருடன்'' என்று அடித்தொண்டையிலிருந்து கத்தியது. தூக்கி வாரிப் போட்டது திருடர்களுக்கு. கையிலிருந்த மூட்டைகளை அப்படியே கீழே போட்டனர்.

இதற்குள் கிளி போட்ட சத்தத்தைக் கேட்டு வீட்டில் உள்ளவர்கள் விழித்துக்கொண்டு ஓடி வந்தனர். திருடர்கள் தப்புவதற்காக வெறுங்கையுடன் விழுந்தடித்துக் கொண்டு ஓடப் பார்த்தனர். ஆனால் வீட்டு வாசலை அடையு முன் வீட்டுக்காரர் அவர்களைப் பிடித்து விட்டார். உடனேயே போலீசாரிடம் அவர்களை ஒப்படைத்துவிட்டு வந்தார்.

வீட்டிற்கு வந்ததும், அவரிடம் வீட்டுக்கார அம்மாள், ''பார்த்தீர்களா? கிளியை எதற்காக வெட்டியாக வளர்த்து அதற்குப் பேசச் சொல்லிக் கொடுத்துக்கொண்டு மாரடிக்கிறாய் என்றீர்களே? இன்று திருடனையே பிடித்து விட்டது பாருங்கள்!'' என்றாள் பெருமையுடன்.

''வீட்டிலிருந்த நகை, வெள்ளிப் பாத்திரம், ஒன்று விடாமல் எடுத்து மூட்டை கட்டியிருக்கிறானே அந்தத் திருடன்! நல்ல வேலை! கிளி பார்த்துக் கத்தியதோ பிழைத்தோம். ஆமாம். அது வரை, இந்த நாய் என்ன பண்ணியது? ஒரு குரைப்புக்கூடக் காணோமே?'' என்றார்.

''அது எங்கேயாவது தூங்கிக் கொண்டிருந்திருக்கும்!'' என்றாள் அந்த அம்மாள்.

கிளிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. தான் சொன்னதை நிரூபித்து விட்டோம் என்ற பெருமை அதற்கு. மறுநாள் காலை நாய் கிளியிடம், ''கிளியாரே, நான் செய்யும் காரியத்தையேதான் நீயும் செய்தாய். இது என்ன ஊருக்குப் பெரிய உபகாரம்?'' என்றது.

அதற்குக் கிளி, ''ஹூம்... நீ திருடனைக் கண்டவுடனேயே குரைப்பாய். உடனே அவன் ஓடி விடுவான். நம் வீடு தப்பிக்கும். ஆனால் அந்தத் திருடன் உடனே வேறு ஒரு வீட்டில் திருடுவானே, அதைத் தப்புவிக்க முடியுமா? இன்று பார், அந்தத் திருடர்கள் உள்ளே வந்து எல்லாவற்றையும் மூட்டை கட்டியதும் கத்தினேன். எல்லோரும் எழுந்தனர். திருடர்கள் ஓடுமுன், போய்ப் பிடித்து விட்டனர். அதனால் இந்தத் திருடர்களால் இந்த ஊரில் இனி உபத்திரவம் இல்லையல்லவா?'' என்றது.

நாயும் கிளியின் புத்தியை மெச்சியது. இரண்டும் ரொம்பச் சிநேகமாக அந்த வீட்டில் வளர்ந்து வந்தன.

ஏமாளித் திருநாள்

நீலம்

மாணவர் சங்கத்தின் ஆண்டு விழாவை எப்போது நடத்தலாம்? பரீட்சைக்கு முன்பா, பின்பா? இதைப் பற்றி மூன்றாவது படிவ அறையில் ஏகமாகக் கூச்சல்; ஆரவாரம். தலைக்குத் தலை விதம் விதமான யோசனைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

சங்கத் தலைவன் ஸ்ரீகாந்த், துருதுருப்பு மிகுந்தவன். துணிச்சலுக்கும் பேர்போன பையன். சில பாடங்களில் மார்க்குகள் முன் பின்னாக இருந்தாலும், பகுத்தறிவிலே அவனுக்கு நிகர் வேறு யாரும் கிடையாது. அவனையும், அவன் கூட்டாளிகளையும் எப்போதும் மட்டம் தட்டிக்கொண்டிருந்த கணக்கு, சயன்ஸ் உபாத்தியாயர்களே ஸ்ரீகாந்தின் புத்தி நுட்பத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவன் தெரிவித்த திட்டத்தை மற்ற மாணவர்களும் ஒப்புக்கொண்டார்கள், சிலருக்கு மட்டும் சந்தேகம். ஸ்ரீகாந்த் எதையாவது செய்து வைத்து, தங்களைச் சந்தியில் இழுத்துவிட்டால் என்ன பண்ணுவது என்று. அவர்கள் கவலைப்பட்டார்கள்.

சந்தேகப் பேர்வழிகள் யார், யார் என்பதெல்லாம் ஸ்ரீகாந்த் தெரிந்துகொண்டிருந்தான். ஆகவே அவன் அவர்களைத் தாஜா செய்து, தைரியமூட்டி, தன் கையில் போட்டுக் கொண்டான்.

‘‘ஆண்டு விழாவுக்கும் பரீட்சைக்கும் சம்பந்தமில்லை. நாம் படிப்பது எட்டாவது. பரீட்சை தேறினால் ஒன்பதாவது. இல்லையானால் இதே வகுப்பு. சில உபாத்தியாயர்

ஊசிப் பட்டாசு!

கள் நம்மை முட்டாள்களாக்கிப் பட்டம் கட்டிவிடுகிறார்கள். யார் என்ன பட்டம் கட்டினாலும் நமக்குள் ஒற்றுமை குலையாது கட்டுப்பாட்டுடன் நடப்போம் என்பதைத் தெளிவு படுத்துவது அவசியம்'' என்று அவன் பேசியபோது வகுப்பு அறையே இடிந்து விழுந்தது போல மாணவர்கள் கரகோஷம் செய்தார்கள்.

போண்டா வைத்தா, ஐஸ் கிரீம் பாச்சு, திக்குவாய் திருமலை - ஆகிய மூன்று பேரும் ஸ்ரீகாந்த் வகுத்த திட்டப்படி ஓரணா, இரண்டணா என்று மாணவ அங்கத்தினர்களிடமிருந்து விழாவுக்கு நிதி வசூல் செய்தார்கள்.

நோட்டீஸ் அச்சுப் போட அதிகமாகப் பணம் தேவைப்படும் போலிருந்தது. சந்தா மூலம் வசூலான தொகையோ கொஞ்சந்தான். எனவே 'கார்பன்' பேப்பரை வைத்துக் கையாலேயே அழைப்பு நோட்டீஸ்களைத் தயாரிப்பதென்று போண்டாவும் ஐஸ் கிரீமும் முடிவு செய்தார்கள்.

''ஜமாயுங்கள்! எப்படியோ விழாவை நடத்தினால் சரி!'' என்று ஸ்ரீகாந்த் கண்ணைச் சிமிட்டினான். அங்கே கூடி நின்ற மற்ற மாணவர்களுக்கு ஸ்ரீகாந்தின் கண் சிமிட்டலின் மர்மம் விளங்கவில்லை.

ஆயிற்று. விழாவுக்கு இன்னும் எண்ணி நாலே நாள்தான் பாக்கி. மாலை வேளைகளில் மாணவர்கள் வகுப்பறையில் வந்து கூடினார்கள். கலர் காகிதங்களைக் கத்தரித்துப் போட்டுக்கொண்டே தோரணம் கட்டுவதில் அவர்கள் தீவிரமாக இருந்தார்கள். வெட்டு வேலையும், ஒட்டு வேலையும் வெகு வேகமாக நடந்துகொண் டிருந்தன. இரண்டு நாள் முன்னதாகவே வகுப்பறை, வர்ணக் காகிதப் பூக்களாலும் தோரணங்களாலும் ஜோடிக்கப் பட்டுக் கண்களைக் கவர்ந்தது.

'சர்க்கார் மந்திரி விழாவுக்குத் தலைமை வகிக்கிறார். சங்கத்தின் ஆண்டு விழாப் பிரசங்கம் கல்வி இலாகா டைரக்டரால் நிகழ்த்தப்படும்' என்று நோட்டீஸில் அறிவிக்கப்பட்டிருந்தது. மாணவர்கள், ஆசிரியர்கள் எல்லோருக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டன.

கணித ஆசிரியரிடம் 'போண்டா' போனான். அழைப்பைக் கொடுத்தான். ''மந்திரி வெளியூரிலிருந்து வருகிறார். நீங்களும் ஸ்டேஷனுக்கு நேரிட வந்திருந்து வரவேற்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் கௌரவமாக இருக்கும்'' என்று அவரிடம் கேட்டுக்கொண்டான். தர்மத்துக்கும் சிரிக்காத கணித ஆசிரியருக்குக்கூட முகத்தில் புன் சிரிப்புத் தோன்றியது!

சயன்ஸ் உபாத்தியாயரிடம் ஐஸ் கிரீம் சென்று அழைப்பை நீட்டி, ''நீங்கதான் ஸார், மந்திரிக்கும் கல்வி டைரக்டருக்கும் நல்வரவு கூறவேண்டும்'' என்று உபசாரமாகப் பேசினான். சயன்ஸ் உபாத்தியாயருக்கு உச்சி குளிர்ந்தது, ஐஸ்கிரீம் பண்ணிய உபசாரம்.

எல்லா ஏற்பாடுகளும் முடிவடைந்துவிட்டன. கணித ஆசிரியர் மிக ஆடம்பரமாக உடுப்புகளை அணிந்து கொண்டார். புதிய 'ட்வீடு' கோட்டைப் போட்டுக் கொண்டார். ஜரிகைத் தலைப்பாகையைச் சரி பார்த்துச் சூடிக் கொண்டார். கண்ணாடியில் அப்படியும் இப்படியும் ஆடி ஆடி,

நெளிந்து அழகு பார்த்தார். ஸ்டேஷனுக்குக் கூடப்போக வந்திருந்த மாணவர்களில் சிலர் வாயைக் கையால் பொத்திக் கொண்டு சிரிப்பை அடக்கிக் கொண்டதை ஜாடையாகக் கவனித்த ஆசிரியர், மந்திரியை வரவேற்கப்போகும் மகிழ்ச்சியில் தமது கெடுபிடியையோ, கடுகடுப்பையோ காட்டாமல் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டுப் போனார்.

கல்வி டைரக்டரை எப்படி எப்படி எல்லாம் புகழ்ந்து பேசலாம் என்று கற்பனை உலகத்தில் சுழன்று கொண்டிருந்தது சயன்ஸ் உபாத்தியாயரின் மனசு. தமது வழக்கப்படி கதர் ஜிப்பாவைப் போட்டுக் கொண்டார். தோளின்மேல் பூவேலைப்பாடுகள் நிறைந்த சால்வையைச் சாத்திக்கொண்டார். இந்தக் கோலத்தோடு அவர் மூன்றும் படிவ அறையைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக்கொண் டிருந்தார்.

காலை ஆறு மணி முதலே மாணவர்கள் வகுப்பு அறையில் வந்துகூட ஆரம்பித்து விட்டனர். கூட்டம் சேரச் சேர, கூச்சலும் கும்மாளமும் அதிகரித்தன. இதைக் கண்ட தலைவன் ஸ்ரீகாந்த், அமைதியாக இருக்கும்படியும், மந்திரியும் கல்வி டைரக்டரும் வந்து சேரும் நேரம் நெருங்கி விட்டதாயும் கூறி மாணவர்களை அடக்கினான்.

வகுப்பு அறையில் கட்டப்பட்டிருந்த காகிதத் தோரணங்களும், காகிதப் பூக்களும் ஒரு புறம் சுவரில் மாட்டியிருந்த காலண்டரும் காற்றில் பட படத்தன. எதிர்ப்புறச் சுவரில் கடிகாரம் 'டக் டக்' என்று ஓடிக்கொண்டிருந்தது. ஒன்பது மணிக்கு விழா ஆரம்பமாகும் என்று நோட்டீஸில் அறிவித்திருந்தார்கள்.

ஸ்டேஷனுக்குச் சென்ற கணித ஆசிரியர் பிளாட் பாரத்தில் வந்து நின்ற ஒவ்வொரு ரெயில் வண்டியிலும் காலை ஆறு மணி முதல் மந்திரியைத் தேடிவிட்டார்.

எந்த வண்டியிலும் மந்திரி வந்து இறங்கியதாகத் தெரியவில்லை. கணித ஆசிரியருக்கு அலுப்பும் ஆயாசமும் எற்பட ஆரம்பித்தன. ஜரிகை 'டர்ப'னைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டார். பிளாட்பாரத்தில் அங்கு மிங்குமாக நடை போட்டார். போண்டா இதைப் பார்த்தான்.

''ஸார்! ஸார்! ஒருகால் மந்திரி நேரிடக் காரில் கிளம்பி ஸ்கூலுக்கே போயிருக்கலாமோ என்னவோ! எதற்கும் நான் ஓடிப்போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன். நீங்

ஸ்ரீகாந்த் தயங்காமல் பேசவாரம்பித்தான்...

கணக்கு வாத்தியார்...

கள் இங்கேயே இருங்கள்!'' என்று சொல்லிவிட்டுப் பதிலுக்குக்கூடக் காத்திராமல் சிட்டாய்ப் பறந்துவிட்டான்.

சயன்ஸ் உபாத்தியாயருக்கோ ஸ்கூலில் நின்று நின்று கால் கடுத்துப் போயிற்று. ஆகவே அவர் விழா மேடையில் காலியாகக் கிடந்த நாற்காலி ஒன்றில் போய் உட்கார்ந்தார். சோம்பல் முறித்தார்; கொட்டாவி விட்டார்; விரல்களை மடக்கி நெட்டி முறித்துக் கொண்டார். இடது கையால் தன் வழுக்கை மண்டையை லேசாகத் தடவியும் கொடுத்தார்!

இந்தச் சமயத்தில் போண்டா அங்கே வந்து சேர்ந்தான். உடனே மாணவர்கள், மந்திரி வந்துவிட்டதாக எண்ணி, கைதட்டி ஆரவாரித்தார்கள். பரபரப்பைப் பார்த்து சயன்ஸ் ஆசிரியர் தத்திக் குதித்துச் சால்வையைச் சரி செய்து முறுக்காக எழுந்து நின்றார்.

போண்டா ஓட்டமும் நடையுமாகச் சென்று ஸ்ரீகாந்தைத் தேடிப் பிடித்து அவன் காதில் ஏதோ 'கச முச' என்று ரகசியம் பேசினான். மாணவர்கள் போட்ட கூச்சலில் கடிகாரம் ''டாண், டாண், டாண்....'' என்று ஒன்பது மணி அடித்ததோ, போண்டாவைச் சயன்ஸ் ஆசிரியர் கூப்பிட்டதோ யார் காதிலும் விழவில்லை.

போண்டாவும் திரும்பி வரவில்லை; மந்திரியையும் காணோம். மணியோ ஒன்பது! கணித ஆசிரியர் கன கோபமாக ஸ்கூலுக்குத் திரும்பினார். அங்கு ஒரே அமர்க்களமாய் இருந்தது. விஷயம் என்னவென்றே புரியவில்லை. ஸ்ரீகாந்த், போண்டா, ஐஸ்கிரீம், திக்குவாய் முதலியவர்களைக் கூப்பிட்டு விசாரித்தார்.

நான்கு பேருக்கும் உள்ளூற உதைப்புதான். இருந்தாலும் ஸ்ரீகாந்த் தைரியத்தை விடாமல், நடந்து கொண்டான். கணித ஆசிரியரையும், சயன்ஸ் உபாத்தியாயரையும் மேடைமீது அமரும்படிப் பணிந்து கேட்டுக்கொண்டான். யார் வந்தாலும், வராவிட்டாலும் விழா நடக்கும் என்று சொல்லி மாணவர்களை அமைதியாக இருக்கும்படி வேண்டிக் கொண்டான். அவன் தயங்காமல் பேசவும் ஆரம்பித்தான்:

''எல்லாரும் ஒன்பது மணி ஆகிவிட்டதே என்று கடிகாரத்தை உற்று உற்றுப் பார்க்கிறீர்கள். அதோ எதிர்ப்புறச் சுவரில் காற்றில் ஊசலாடும் காலண்டரையும் நீங்கள் பாருங்கள். தேதியைக் கவனியுங்கள். உங்கள் கவனக் குறைவை நமது கணித ஆசிரியருக்கும், சயன்ஸ் ஆசிரியருக்கும் இதோ எடுத்துக் காட்டிவிட்டேன். இவர்கள் இருவரும் நம்மில் பலரை முட்டாள்களாக்கிப் பட்டம் கட்டி வந்தார்கள். ஆனால் எல்லாருமே ஏமாளிகள் என்று பட்டம் கட்டிக் கொள்ளும்படியாக ஒரு நாள் வருஷா வருஷம் நடந்து வருகிறது. அந்தச் சுபதினமே இன்று! இப்போதாவது காலண்டரையும் தேதியையும் கவனியுங்கள்!'' என்று சொல்லிவிட்டு ஸ்ரீகாந்த் மேடையிலிருந்து குதித்து மாணவர்கள் கூட்டத்திற்குள் புகுந்து கொண்டான். போண்டா, ஐஸ்கிரீம், திக்குவாய் இவர்கள் போன இடமே தெரியவில்லை. மாணவர்கள் எல்லோரும் காலண்டரைப்

பார்த்தனர். ஆம்! அன்று ஏப்ரல் முதல் தேதிதான்!

இரண்டு ஆசிரியர்களுக்கும் தாங்க முடியாத ஆத்திரம். அவமான உணர்ச்சியால், ஆவேசத்தோடு புகார் செய்ய ஹெட்மாஸ்டர் வீட்டை நோக்கி இருவரும் விரைந்தார்கள். அவரோ ஊரில் இல்லை. மறுதினம்தான் வந்தார். ஆகவே ஹெட்மாஸ்டர் வந்த பிறகு அவரிடம் சென்று தங்களை ஏமாற்றிக் கோமாளித்தனம் செய்து தங்களை ஏப்ரல் ஏமாளிகளாக்கிய ஸ்ரீகாந்த் கோஷ்டிக்குக் கடும் தண்டனை விதிக்கவேண்டுமென்று வாதாடினார்கள்.

'ஏமாளிப் பட்டங்களைக் கட்டுவதற்கும், கோமாளி வேலைகளைச் செய்வதற்கும் ஏற்ற திருநாள் ஏப்ரல் முதல் தேதி! இந்தச் சுப தினத்தில் செய்யப்படும் காரியங்களைத் தப்பாகவும், அவமானமாகவும் கருதவே கூடாது. அந்தத் தேதியில் இப்படி ஒரு சம்பவம் ஏற்படாமலிருந்தால் ஏப்ரல் முதல் தேதிக்குக் கௌரவமில்லை. கோமாளி வேலைகளால் ஏமாளிப் பட்டத்தை யாராவது கட்டத் தவறியிருந்தால்தான் தண்டனை தரவேண்டும்;' என்பது ஹெட்மாஸ்டர் கருத்து. இதை அனுசரித்தே அவர் தீர்ப்பும் இருந்தது.

சயன்ஸ் வாத்தியார்...

புகார் செய்யப் போன ஆசிரியர்களுக்கு மேலே பேச வாய் எழவில்லை. ஹெட்மாஸ்டரின் தீர்ப்பு காட்டுத் தீ போல மாணவர்களுக்கு எட்டவே அவர்கள் தலைகால் தெரியாமல் துள்ளிக் குதித்தார்கள். சங்க ஆண்டு விழா ஏமாளிப் பட்டமளிப்பு விழாவாக மாறியது கண்டு அனைவருக்கும் ஒரே வியப்பு!

தைரியசாலி!



''நான் எவ்வளவு தைரியமாக் கொளுத்தறேன் பார்!''



மேடைப்பேச்சு

'சசிதேவன்'

மேடையில் பேசிட வேணுமென்று
மெத்த விரும்பினுன் சின்னமணி....
அன்ருெருநாள் ஒரு கூட்டத்திலே
ஆராரோ பேசினர் அற்புதமாய்.
மெய்ம் மறந்தே மக்கள் கேட்டிருந்தார்;
மேடையிலே விழி வைத்திருந்தார்.
'நானும் இக்கூட்டத்தில் பேசிடுவேன்;
நல்ல பிரசங்கி யாயிடுவேன்.
அத்தனை பேரையும் மிஞ்சிடுவேன்—'
இப்படி எண்ணிய சின்னமணி
எழுந்து நடந்தான் தலைவரிடம்,
''இரண்டொரு வார்த்தைகள் பேசிடவே
எனக்கு இடம்தர வேணு''மென்ருன்.
அநுமதி பெற்றவன் மேடையிலே
அட்டகா சத்துடன் ஏறினனே,
''அன்பர்களே, ஊ-ஊஹூம்-நண்பர்களே,

ஆகையினுலே நான் சொல்லுவது
என்ன என்றுல்-ஊ ஹூம்..ஆகையினுல்..''
என்று குழறினுன் சின்னமணி.
அப்புறம் வார்த்தை வரவே இல்லை;
நாக்கு வறண்டது; மேனியெல்லாம்
நடுக்கம் எடுத்தது ஓர் நிமிஷம்.
தொண்டை அடைத்தது ஓர் நொடியில்.
தொய்ந்து விழுந்தன தோளிரண்டும்.
கண்கள் இரண்டு கலங்கினவே,
கல்லாக நெஞ்சு கனத்ததுவே.
தெப்பமாய் ஆடை நனைந்திடவே,
தேகமெல்லாம் வியர்த் தூற்றியதே.
சோடா குடிக்கக் கிடைத்த பின்னும்
சொல்லிட வார்த்தை கிடைக்கவில்லை.
''ஆகையினுலே நான் சொல்லுவது
அன்பர்களே-ஊ ஹூம்...ஆகையினுல்..''
எத்தனை ஆயிரம் 'ஆகையினுல்'
எண்ணத் தொலையாது 'ஆகையினுல்',
கூடியிருந்தோர் நகைத்தனரே.
பொறுமை இழந்த ஒரு மனிதன்
பொங்கி எழுந்தான் இடத்தை விட்டு.
''ஆகையினுலே நீ பேசுவதை
அப்படித்தானே நிறுத்தி விடு!''
என்று சொன்னுன் அங்கு நின்றவர்கள்
எக்காள மிட்டுச் சிரித்தனரே.
அத்தனையும் கண்ட சின்னமணி
அரை நொடியில் மேடை விட்டிறங்கி,
ஆளை விட்டால் போதும் என்றுடனே
அங்கிருந் தோடி மறைந்தனனே!

இளம் எழுத்தாளன்

எஸ். விசுவநாதன்

1

இளம் எழுத்தாளன் சீனிவாச ராகவனுக்கு எல்லா எழுத்தாளர்களையும் பற்றிக்கொண்ட அதே வியாதிதான்' அப்பொழுது பற்றிக்கொண்டிருந்தது. வியாதியின் பெயர்: 'எதை எழுதுவது?' தீபாவளி நெருங்கிக் கொண்டிருப்பதையும், தத்தம் கையெழுத்துப் பத்திரிகைகளின் மலருக்கு விஷய தானம் செய்ய வேண்டுமென்று கோரி அவனுக்கு வந்த வேண்டுகோள்களையும் நினைத்தவுடன் 'ஏன்தான் எழுத்தாளன் ஆனோமோ?' என்ற கவலையும் பற்றிக் கொண்டது. 'சீனிவாசா!' என்று ஒரு நண்பன்; 'ராகவா!' என்று ஒரு நண்பன்; 'டியர் சீனு!' என்று ஒருவன்; 'மிஸ்டர் ராகவன்!' என்று மற்றொருவன்; பக்கம் பக்கமாக நின்று பழியை எடுத்தனர் இந்த நண்பர்கள். இவர்கள் வாயையெல்லாம் மூடவேண்டுமானால் ஐந்து சிறுகதைகள், மூன்று கட்டுரைகள், ஒரே ஒரு கவிதை— இவை போதும். விஷயம் ஏதானாலும் சரிதான்! சீனிவாசராகவனுக்கு ஆத்திரமாக வந்தது. 'இவர்கள் எல்லாம் பத்திரிகை போடவில்லை என்று யார் அழுதார்கள்?'

ராகவனுக்குக் கதைகள் எழுத வேண்டும் என்ற ஆசை வந்தது அவனுடைய பன்னிரண்டாவது வயதில். அதன் பிறகு ஏதேதோ ,கிறுக்கி' வந்தான். குழந்தைப் பத்திரிகைகளில் அவன் எழுதியது ஏதோ வெளிவந்தது. அது நாலு பேருக்குத் தெரிந்தும் விடவே, அவனை 'உலகப் பிரசித்தமான எழுத்தாளன்' என்றும், 'எழுத்தாளன் என்றால் ராகவனைப் போன்ற பிறவி எழுத்தாளனே எழுத்தாளன்!' என்றும் வகுப்புக்கு வகுப்பு அறிமுகப்படுத்தினார்கள். சீனிவாசராகவனுக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது!

'ஹச்' சென்று யாரோ தும்மினார்கள்; சீனிவாசராகவனின் சிந்தனை கலைந்தது. சிறுகதைகள் கேட்ட நான்கு பேரிடம் அவற்றை ஒப்படைத்தாகிவிட்டது. எல்லாம் தீபாவளிச் சம்பந்தமான கதைகள். கட்டுரைகளும், கவிதையும் கூட முடித்துக் கொடுத்தாகிவிட்டது. கடைசியாகக் கேட்ட 'தீபம்' பத்திரிகையின் தொல்லைதான் பெரிய தொல்லையாகப் போய்விட்டது. மண்டையைப் போட்டு உடைத்துக்கொண்டும் உருப்படியாக யோசனை ஒன்றும் கிடைக்கவில்லை ராகவனுக்கு.

''சீனிவாசா!'' என்று யாரோ அடித் தொண்டையால் வாசற்புறமிருந்து கூப்பிடுவது கேட்டதும் ராகவனுக்கு அடி வயிற்றில் புளியைக் கரைத்தது. அந்தச் சனியன் பிடித்த 'தீபம்' தியாகராசன் அல்லவோ அது!

வெளியே வந்தான் ராகவன்.

''கதை ரெடியா, சீனிவாசா?''

தலையைச் சொறிந்துகொண்டான் ராகவன்.

''இன்னும் 'பிளாட்'டே ஒன்றும் கிடைக்கவில்லை. தியாகு! நாளைக்குச் சாயந்தரம் எப்படியும் கொடுத்துவிடுகிறேன்..'' என்றான் கடன்காரனுக்குப் பதில் சொல்வது போல்.

‘‘அட, என்னப்பா நீ ஒன்று? பத்திரிகையெல்லாம் அச்சாகிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது நீ தந்தால்தான் அது அச்சுக் கோப்புக்குப் போய், ப்ரூப் வந்து, திருத்தி, அச்சடித்து, அடடா! எவ்வளவு வேலையிருக்கிறது! இப்பொழுது உட்காரேன்..உம்.. எழுது; லீவுதானே? உட்கார் சொல்லுகிறேன். இந்தா, பேனாவைப் பிடி. பேப்பர் வாங்கி வரட்டுமா? உம்..பிடி என்றால் பிடி!'' என்று சட்டையிலிருந்து பேனாவை எடுத்து நீட்டித் துளைக்கத் துவங்கிவிட்டான் தியாகு.

‘‘இல்லை தியாகு; இப்போ எழுதவே ஓடாது. நாளை சாயந்தரம் நிச்சயம் உன் கையிலே ஒப்படைத்துவிட்டுத்தான் மறு வேலை!'' என்று உறுதியாகச் சொன்ன பின்புதான் அவன் அங்கிருந்து அகன்றான்.

ராகவனுக்குத் தன் மீதே கோபம் கோபமாக வந்தது.

என்றைக்கோ ஒரு தீபாவளிக் கதை எழுதிவிட்டு, நன்றாயில்லை என்று பழைய புத்தகக் கட்டில் செருகியது அவனுக்கு நினைவு வந்தது. ஓடிப் போய் அங்கே துழாவிப் பார்த்தான். அது கிடைக்கவில்லை. ஆனால் ராகவன் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ‘தீபம்’ இந்தியாவெங்கும் போகும் சஞ்சிகை. ஆகையால் சற்றுத் தரம் உயர்ந்ததாக அமைய வேண்டும் என்று கருதித்தான் மண்டையைப் போட்டு அப்படிக் குழப்பிக்கொண்டிருந்தான்.

‘பளார்’ என்று யோசனை ஒன்று ராகவன் மூளையை வந்து தாக்கிற்று. ‘அடடா, இது முன்னமே தோன்றாமல் போயிற்றே..!’ என்று தன்னையே நொந்துகொண்டான் அவன். மெதுவாக நடந்து தங்கை அநுராதாவின் அறைக்கு வந்தான். அவள் அங்கே, திங்கட்கிழமை வகுப்பில் காட்ட வேண்டிய ‘மேப்’பை அவசர அவசரமாக வரைந்துகொண்டிருந்தாள், சமூகப் பாட ஆசிரியையை வாய்விட்டுச் சபித்தபடி.

‘‘அநூ..!'' என்று நைஸாக ஆரம்பித்தான் ராகவன். ‘‘நான் வேண்டுமானால் ‘மேப்’ போட்டு வைக்கிறேனே! நீ என்னவோ மருதாணி பறிக்கப் போக வேண்டும் என்றாயே!'' என்றான்.

அநு திகைத்துப் போய் அண்ணாவின் முகத்தைப் பார்த்தாள். ‘‘நீ நிச்சயமாகத்தான் சொல்லுகிறாயா? இல்லை விளையாடுகிறாயா?'' என்றாள்.

‘‘சே..சே, விளையாட்டாவது ஒன்றாவது! நீ அவஸ்தைப் படுவதைப் பார்க்கச் சகிக்கவில்லை எனக்கு!'' என்று ஒரு போடுபோட்டான் ராகவன்.

‘‘உனக்கு ஆயிரம் நமஸ்காரம், கோடிப் புண்ணியம்; போடு அண்ணா போடு, நல்லபடியாகப்

ஹாரன் சத்தம்!





நந்து: டேய், அந்த மஞ்சள் மாடி வீட்டிலேதாண்டா கொலு நன்றாக யிருக்கு!

சுந்து: அட போடா, ஆனால் அந்த வீட்டுச் சுண்டல் சுத்த மோசம்டா!

போடு!'' என்று சிட்டாகப் பறந்துவிட்டாள் அநு.

ராகவனின் 'ஐடியா' செயலில் திரும்பியது. அநுராதாவின் புத்தக அலமாரியைத் திறந்தான். சரசரவென்று எல்லாவற்றையும் அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்தான். பாடப் புத்தகம், நோட்டுக்கள், பழைய பத்திரிகைகள், பாதி தயாராகியிருந்த அவள் வகுப்புக் கையெழுத்துப் பத்திரிகை—'லிட்டரரி குரூப்' (இலக்கியப் பிரிவு) லீடர் அல்லவோ அவள்!—எதையெல்லாமோ துழாவித் துருவிப் பார்த்தான் ராகவன். அநு வரும் காலடிச் சத்தம் கேட்டு, அடித்துப் புடைத்துக்கொண்டு எல்லாவற்றையும் வாரித் திணித்தான். 'மேப்'பை அவசர அவசரமாக முடித்து வைத்தான்; அவன் முகத்தில் அபார ஏமாற்றம்!

அவன் தேடியது—ஒரு சிறு கதை. ஆம். ராகவனின் தங்கை அநுவும் ஒரு கதைப்பித்துத்தான்! அவளும் அவ்வப்பொழுது சில நல்ல கதைகள் எழுதுவது உண்டு. அவன் தேடியது அப்படி அவள் எழுதிய கதையே. அதை எடுத்து, 'தீபம்' தியாகராசனிடம் கொடுத்து, காரியத்தை முடித்துக் கையைக் கழுவிவிடலாம் என்று நினைத்துத் தேடினான். ஆனால் கிடைக்கவில்லை!

2

மாலை ஐந்தரை மணி வாக்கில், ராகவன் 'கிரிக்கெட்'டை முடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டான்.

''என்ன அநு! உனக்குப் பிடித்த இந்திப் படம் வந்திருக்கிறதே, போகவில்லையா? அப்பாவிடம் நான் உத்தரவு வாங்கித் தருகிறேனே!'' என்று ரொம்ப அக்கறையுள்ளவன் மாதிரி அவளைக் கிளப்பிவிட்டான்.

''அண்ணா! உனக்கு என்னால் ஏதேனும் காரியம் ஆகவேண்டுமா என்ன? காலையில் வலுவிலே வந்து 'மேப்' போட்டுக் கொடுத்தாய். மத்தியான்னம் சயன்ஸ் நோட்ஸ் எழுதித் தந்தாய். இப்போது சினிமாவுக்குப் போகப் பணத்தோடு நிற்கிறாய். என்ன விஷயம்?'' என்றாள் அநு கேலியாக.

''ஒன்றுமில்லை அநு, ஏதோ நீ ரொம்பவும் கேட்டாயே என்று சொன்னேன்! போக விருப்பமிருந்தால் போ! இல்லாவிட்டால் வேண்டாமே!''

''அது சரி. எனக்குப் போகப் பிரியம்தான். ஆனால் நீதான் கொண்டு வந்துவிட வேணும். இரவு என்னை வீட்டுக்குக் கூட்டி வரவும் நீதான் வரவேண்டும்!'' என்றாள் அவள்.

'தலையெழுத்தே!' என்று ஒப்புக்கொண்டான் அவன்.

''ஆனால் நானும் சினிமாவுக்கு வருகிறேன்! பொழுதே போகவில்லை!'' என்று அம்மாவும் கிளம்பிவிட்டாள். அவர்களைக் கொட்டகையில் கொண்டுவிட்டு,

டிக்கட் வாங்கிக் கொடுத்து, பிறகு வீட்டிற்கு வந்து நிம்மதியாக உட்கார்ந்து, அநுவின் புத்தக அலமாரியைக் குடைய ஆரம்பித்தான் ராகவன். துருவித் துழாவி ஒரு சிறு கட்டுக் காகிதத்தை எடுத்தான், அதைப் பிரித்துப் பார்த்ததும் அவன் வயிற்றில் பாலை வார்த்த மாதிரி இருந்தது. அவன் 'மிக நன்ருக இருக்கிறது' என்று புகழ்ந்த அவளுடைய சிறுகதைதான் அது! நல்ல காலம்! வேறு யாருக்கும் கொடுத்துத் தொலைக்காமல் தன் கையில் கிடைத்ததே என்று நினைத்துக்கொண்டான். கோடு இட்ட நீண்ட தாள்களைச் சரசர வென்று எடுத்து அவள் எழுதியதை அப்படியே 'அட்டக் காப்பி' அடித்துவிட்டு, தலைப்பின் கீழே, 'சீனிவாசராகவன்' என்று கூசாமல் போட்டுக்கொண்டான். அதை முடித்த பின்னரே அவனுக்கு நிம்மதி உண்டாயிற்று.

3

பலதரப்பட்ட பட்டாஸ் வெடிகளின் பயங்கரச் சத்தத்திடையே, பல்வேறு புஸ்வாணங்களின் தேய்ந்த ஒலிகளின் மத்தியிலே வருடா வருடம் வரும் தீபாவளி வழக்கம்போல மலர்ந்தது.

★

அவசரமாக வரைந்துகொண்டிருந்தாள்.....

தீபாவளி வந்தது....

காலை ஏழு மணிக்கு முன்பே கையெழுத்துப் பத்திரிகை மலர்களையெல்லாம் கொண்டுவந்து காட்டிவிட்டுப் போய்விட்டனர் சக மாணவர்கள். கூடவே இருந்து அநுவும் எல்லாவற்றையும் பார்த்துக்கொண் டிருந்தாள். 'அட முருகா! இவள் உள்ளே போய்த் தொலையமாட்டாளா! 'தீபம்' தியாகராஜன் வந்து தொலைந்தால் என் குட்டு வெளிப்பட்டுவிடுமே!' என்று தவித்தான் ராகவன்.

''தீபாவளி வாழ்த்துக்கள் சீனிவாசா!'' என்று அடித் தொண்டையால் கூறிக்கொண்டே சைக்கிளிலிருந்து இறங்கிய 'தீபம்' தியாகராஜன், முன் சீட்டில் கட்டாகக் கட்டியிருந்த மலர்களில் ஒன்றை உருவி, ராகவனின் கையில்வைத்து, ''மலர் நேற்றுத்தான் அச்சாகி வந்தது. உன்னிடம்தான் முதலில் வந்தேன்!'' என்றான். பிரித்துப் பார்க்கவே தோன்றவில்லை ராகவனுக்கு.

''உள்ளேயெல்லாம் பார், சீனு! அற்புதமாகத் தயாராகியிருக்கிறது இந்த வருடத்து மலர்!'' என்று தியாகு சொல்லிவிட்டு மலரைப் பிரித்து அவன் கதைப் பக்கத்தைக் காட்டியபோது, அருகிலிருந்தபடி ஆவலுடன் பார்த்துக்கொண் டிருந்த அநுராதா, முதல் வரியைப் படித்துவிட்டு, ''அட! இது என்னுடைய கதை..'' என்று பட்டும் படாமலும் இழுத்தாள். ராகவனுக்குப் பற்றிக்கொண்டு வந்தது. அதற்குள் தியாகு விடை பெற்றுக்கொண்டு சைக்கிளில் தாவினான்.

எங்கிருந்தோ சிரிப்பொலியும், வளையல் ஒலியும் வருவது கண்டு நிமிர்ந்தனர் அநுவும் ராகவனும்.

''ஹார்ட்டி தீபாவளி க்ரீட்டிங்ஸ் அநுராதா!'' என்று அவளுடைய வாத்தியாரம்மாளும், இன்னும் நாலைந்து பெண்களும் ஓர் அழகிய தீபாவளி மலரைக் கொடுத்துவிட்டு நகர்ந்தனர்.

''எங்கே! உங்கள் மலரா? நீங்களும் இந்தப் பத்திரிகைப் புயலில் சிக்கிக்கொண்டீர்களா?'' என்று ஏளனமாகக் கேட்டுக்கொண்டே, ராகவன் அவள் கையிலிருந்து அந்த மலரைப் பிடுங்கப் போனான்.

''ஐயையோ..நீ பார்க்காதே! விடு..நீ பார்க்கக்கூடாது அண்ணா!'' என்று அநுவின் கூச்சலைப் பொருட்படுத்தாமல் மலரைப் புரட்டினான் ராகவன். அநுராதா எழுதிய கதையின் தலைப்பு—

'தீபாவளியே-திண்டாட்டமே!'

அவன் முன்பு எழுதிய அதே கதை! அதே தலைப்பு!

''ஓகோ! என்னுடைய கதை நன்றாயில்லை என்று வைத்திருந்தேனே, அதை எடுத்து இவர்களுக்குக் கொடுத்துவிட்டாயாக்கும்!'' என்று ஆரம்பித்தான் ராகவன் கேலியுடன்.

''என்ன ஓகோ! நீ மட்டும் ரொம்ப யோக்கியமோ? மட்டமாக இருக்கிறது என்று நான் உள்ளே வைத்திருந்த என்னுடைய கதையை எடுத்து..!''

''உஷ்..சத்தம் போடாதே யேன். அது..'' என்று ராகவன் கெஞ்சாத குறையாகக் கேட்டுக்கொண்டு, ''சரி, தொலையட்டும், ஒவ்வொருவருக்கும் தத்தம் கதை நன்றாயில்லையே என்று தோன்றி, மாற்றி வைக்கவும் தோன்றியதே! அதைச் சொல்லு!'' என்றான் ராகவன்.

இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு அதிர்வேட்டுச் சிரிப்பு ஒன்று சிரித்தனர்.

இரவில் நடந்தது

கே. சுந்தரேசன்

இரவு மணி பன்னிரண்டுக்கு மேலிருக்கும். பக்கத்திலிருக்கும் சினிமாக் கொட்டகை விட்டுப் போகும் ஜனங்களின் சலசலப்பும் ஓய்ந்தது. வைத்தாவுக்கு ஏனோ இன்னும் தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான்.

''லொள்...லொள்.. லொள்'' என்று நாய் குரைத்தது. ஒவ்வொரு தடவை அது குரைக்கும் போதும் அவன் மனம் 'திக்திக்' கென்று அடித்துக்கொள்ளும். ஒரே வேதனையாக இருக்கும். 'சனியன் பிடிச்சது......ராத்திரி வேளையிலே மட்டும் வாயடச்சிண்டு இருந்தா என்ன?' என்று அவன் மனம் எண்ணியது.

அடுத்த அறையிலே அப்பா இருமும் சப்தம்; தொடர்ந்து கதவைத் திறக்கும் ஓசை; சற்று நேரம் அமைதி. பிறகு,—

வைத்தாவின் நெஞ்சு 'துணுக்' கென்றது. அவன் எதை எதிர்பார்த்தானோ அது அந்த இரவில் நடந்துவிட்டது. இனி அவன் என்ன செய்ய முடியும்?

மாலையில் நடந்த 'பிரளயம்' மறுபடியும் அவன் மனத்தில் தோன்றியது. அவன் அப்பொழுது மாடியிலே உட்கார்ந்து 'மர்மக் கதை'யைப் படித்துக் கொண்டிருந்தான். கீழேயிருந்து வந்த குரல் திடுக்கிட வைத்தது. 'சட்'டென்று மர்மக்கதையை மூடி, பெட்டிக்கடியில் செருகிவிட்டு உற்றுக் கேட்டான்.

''லொள்..லொள்..லொள்!''

''ஏண்டீ, இந்த நாயை வீட்டுலே வைச்சுக்காதே, அடிச்சு விரட்டுன்னு எத்தனை தரம் சொல்வது?'' என்ற அப்பாவைப் பார்த்து, ''இப்போ யாரைச் சொல்றேள்? நம்ப வைத்துவையா, இல்லே ஜிம்மியையா?'' என்றாள் அம்மா சிரித்துக்கொண்டே.

''எல்லாம் இரண்டு நாயையும் தான் சொல்றேன். பொம்மி நாயை ஒழிக்கல்லேன்னா.. இந்த நாயும் அதை இழுத்துண்டு வீட்டைவிட்டுப் போக வேண்டியதுதான். சனியன், இன்னொரு தடவை கத்தட்டும்..என்ன நடக்கறது பார்!'' என்று கர்ஜித்தார் அவர்.

இதைக் கேட்ட அவன் நடுநடுங்கிப் போனான்.

பாவம், ஜிம்மி! மிகவும் சாது. நன்றியுள்ளது. எல்லா நாயையும் போல் கம்பீரமாக வளர்த்தியுடன் அது இல்லை. அது எப்படி இருக்கமுடியும்? ஜிம்மிக்கு 'மாமிசத்துண்டு' என்றாலே என்ன என்பது தெரியாதே! எச்சில் இலை போடும் நேரம் அதற்குத் தெரியும். ஆயிரம் சாபங்களுடன் அம்மா ஒரு பிடி சாதம் போடும்போது தன் வாலை ஆட்டி அவளுக்கு நன்றி செலுத்த மறக்காது. ஆனால் அப்பாவைக் கண்டால் அதற்குப் . பிடிக்கவே பிடிக்காது. 'வள்..ள்' ளென்று விழுந்து மூலைக்குப் போய்ப் படுக்

கும். எப்படியோ அது ஜீவிக்கிறது, எலும்பும் தோலுமாக அவனுக்காக உயிரை வைத்துக்கொண்டு. இதை நினைக்கும்போது தான் அவனுக்கு வேதனையாக இருந்தது.

குரைத்த நாயை அப்பா அவிழ்த்து விரட்டிவிட்டுத்தான் படுத்துக்கொண்டார்.

அதற்குமேல் அவனுக்குத் தூங்கப் பிடிக்கவில்லை. மெதுவாக எழுந்து அப்பாவைப் பார்த்தான். அவர் குறட்டைவிட்டார். அடிமேல் அடி வைத்து மெதுவாகச் சென்று டார்ச் லைட்டை எடுத்துக்கொண்டு வெளியே வந்துவிட்டான். ஜிம்மியின் கஷ்டத்தை நினைக்கும்போது அவனுக்கு எந்தக் கஷ்டமும் பெரிதாகத் தோன்றவில்லை.

ஜிம்மி எங்கேயும் காணோம். சந்திரனை மேகக் கூட்டம் மறைத்தது. ஒரே இருள். அந்த இருளின் நடுவே இரண்டு கண்கள் 'பளிச்' சென்று தெரிந்தன.

வைத்தா டார்ச்சை அழுத்தினன். அங்கே ஜிம்மியைக் காணவில்லை. ஆனல் வேறொரு நாய் வந்துகொண் டிருந்தது. அழகான நாய். நல்ல கட்டான உடல். கம்பீரமான பார்வை. அது நிற்பதைப் பார்த்தாலே திருடர்கள் பயந்துவிடுவார்களே! போலீஸ் நாயா? வைத்தா வைத்த கண் வாங்காமல் பார்த்தான். அதுபோல் ஒரு நாய் இருந்தால்..?

அழகான பட்டையொன்று அதன் கழுத்திலே கட்டப்பட்டிருந்தது. அதுபோன்ற ஒரு பட்டை ஜிம்மிக்குக் கட்டினல் எவ்வளவு அழகாக இருக்கும்!

எங்கிருந்தோ 'லொள்' என்ற ஒரு சப்தம். அடுத்த கணம் இந்த அழகான நாய் 'குபீ'ரென்று பாய்ந்தது.

குண்டு நாயைப்

பயந்துபோன அவன் அருகிலிருந்த மரத்துக்குப் பின்னல் ஒளிந்துகொண்டு டார்ச்சை அழுத்தினன்.

அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது. இந்தக் குண்டு நாய் ஜிம்மியுடன்தான் சண்டை போட்டுக்கொண் டிருந்தது!

* * *

இரவு ஒரு மணி.

''டிர்ரிங்..டிர்ரிங்..டிர்ரிங்...''

இன்ஸ்பெக்டர் துரை ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்துக்கொண்டு, ''ஹலோ! போலீஸ் ஸ்டேஷன்!'' என்றார்.

அடுத்த விநாடி துள்ளி எழுந்து ஒரு பேப்பரைக் கிழித்து, '11, விநாயகர் தெரு' என்று குறித்துக்கொண்டார்.

'தாசில்தார் ஜம்புலிங்கமும் அவரது மனைவியும் இரவு சினிமா

வுக்குப் போய்விட்டுத் திரும்பினார்கள். ஜம்புலிங்கத்தின் மனைவி வீடு வந்ததும் தன் பெட்டியைப் பார்த்தாள். அவள் அணிந்திருந்த விலையுயர்ந்த நெக்லெஸ்ஸை யாரோ அபேஸ் செய்துவிட்டான்' என்ற செய்தியைத்தான் தாங்கி வந்தது டெலிபோன்.

''டேய்! திரி நாட் ஒன்!..டு நாட் எய்ட்!..புறப்பட்டு மூலைக்கொருத்தராகப் போங்க. திருட்டு நடந்து இரண்டு மணி நேரத்திற்குள்தான் இருக்கும்'' என்றார் துரை.

சற்று நேரத்திற்கெல்லாம் துரை ஓர் ஆளைப் பிடித்துச் சோதனை போட்டார். அவனிடம் எந்த விதமான பொருளும் இல்லை. ஐந்தணாச் சில்லறை—சிகரெட்..ஆள் நாகரிகமான உடையணிந்திருந்தான்.

பின்பற்றி ஓடினான்:..

''...ரோடிலே போறவங்க எல்லாரும் திருடனா? ஏனையா! ஆளைப் பார்த்தாத் தெரியாது?'' வந்த ஆள் எரிந்து விழுந்தான்.

''நோ..நோ..இந்தக் காலத்துலே யாரை நம்பறது? சந்தேகப்பட்டவங்களைச் சோதனை செய்ய வேண்டியது எங்க கடமை. தவறாக எண்ணாதீங்க'' என்றார் துரை, அசடு வழிய.

* * *

ஜிம்மி களைத்துப்போய்ச் சோர்வுற்றது. குண்டு நாய் அதை இரண்டு கால்களாலும் அழுத்திக்கொண்டு கடித்துக் குதறியது.

வைத்தா பொறுமையை இழந்தான். ''ஜிம்மியை உடனே காப்பாற்றி, குண்டு நாயின் கழுத்திலே இருக்கும் பட்டையை அதற்குத் தண்டனையாகப் பிடுங்கிக்கொண்டு துரத்தவேண்டும்'' என்று எண்ணினான். ஆனால் எப்படி நெருங்குவது?

கீழே கிடந்த ஒரு கழியை எடுத்து அந்தக் குண்டு நாயின் கழுத்துப் பட்டையிலே குத்தி இழுத்தான்.

அடுத்த கணம்....

அவன் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. ஆயிரமாயிரம் எண்ணங்கள் அவன் மூளையில் பளிச்சிட்டன.

குண்டு நாய் 'லொள்' என்று ஒரு தரம் கழுத்தைத் திமிறிக்கொண்டு 'குபீ'ரென்று பாய்ந்து ஓட்டமெடுத்தது. வைத்தா அதன் பின்னாலேயே ஓடத் தொடங்கினான். சந்திரனை மேகக் கூட்டம் மறைத்து மறைத்து விலகியது. அடர்த்தியான பல மரங்கள் நிறைந்த இடம். நாலைந்து கூரை வீடுகள். ஒரு வீட்டின் முன்பு போய் நாக்கை நீட்டி, வாலைச் சுருட்டிக் குனிந்து நின்றது அந்த நாய்.

''டாமி..'' என்றது ஒரு குரல்.

அரும்பு மீசை; நெளியும் கிராப்பு; குறுகுறுக்கும் கண்கள். கால் சட்டை; கட்டம் போட்ட மேல் சட்டை; தலை காடு மாதிரி வளர்ந்திருந்தது.

பேச்சுக் குரல்....

சற்று நேரம் பிரமித்து ஒளிந்து

நின்ற வைத்தா மூச்சுத் திணற ஓட ஆரம்பித்தான்.

திடீரென்று அவன் முகத்திலே டார்ச் வெளிச்சம் பளிச்சிட்டது. கண்ணை மூடித் திறந்தான்.

''டேய்!'' முரட்டுக் கரம் ஒன்று அவனைப் பிடித்து நிறுத்தியது.

''என்ன தம்பி, எத்தனை நாளாய் இந்த வேலை? அகப்பட்டுக் கிட்டே! மரியாதையாச் சொல்லு- நீங்க எத்தனை பேரு இதுபோல் கிளம்பியிருக்கீங்க? இந்த வய சுலேயே கிளம்பிட்டியா? ஊம் ..ம்!'' கணீரென்று வந்த அந்தக் குரலைக் கேட்டு வைத்தா நடு நடுங்கிவிட்டான். மெதுவாகத் தலையைத் தூக்கிப் பார்த்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது.

இரவிலே ஓடும் தன்னைப்பார்த்து, சந்தேகப்பட்டு நிறுத்திய அவன் ஒரு போலீஸ்காரன்.

இருளைக் கிழித்துக்கொண்டு வந்தது ஒரு மோட்டார் சைக்கிள். அதிலிருந்து இன்ஸ்பெக்டர் துரை, ''என்ன,'திரி நாட் ஒன்', ஏதாவது கிடைச்சுதா?'' என்று கேட்டுக் கொண்டே இறங்கினார்.

'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது' போலிருந்தது அவனுக்கு.

''ஸார்..ஸார்..நீங்க நினைக் கிறது தப்பு. நான் திருடனில்லே. உங்களுக்கு உதவியாகப் பெரிய தொரு மர்மத்தைக் கண்டுபிடித் திருக்கிறேன். முதலில் என்னுடன் வாருங்கள்'' என்றான் அவன். இன்ஸ்பெக்டரும் இரண்டு போலீஸ்காரர்களும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

''அதோ நிற்கிறதே, அந்த நாயை முதலில் பிடியுங்கள் அது ஒரு திருட்டு நாய்!'' என்றான் அவன், தூரத்தில் நின்ற நாயைக் காட்டி.

போலீஸ்காரர்கள் அதைச் சாமர்த்தியமாகப் பிடித்தார்கள். பிறகு குடிசையைச் சோதனை செய்யச் சொல்லி அங்கிருந்த இரண்டு ஆட்களையும் கைது செய்யச் சொன்னான் அவன். அவன் சொன்னபடியே அவர்கள் செய்தனர்.

துரை பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார். சற்று நேரத்திற் கெல்லாம் 'திரி நாட்ஒன்',''ஸார்! ஸார்..இதோ வைர நெக்லெஸ்.. நாம் சந்தேகப்பட்டுச் சோதனை செய்த அதே ஆள்தான் ஸார்.. இதோ!'' என்று இரண்டு ஆட் களையும் கைது செய்து கொண்டு வந்து துரைமுன் நிறுத்தினான்.

துரை கண்களை அகல விரித்தார். அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

''என்ன ஸார், என்ன பாக் கறீங்க? இந்த நாயின் கழுத்திலே எவ்வளவு பெரிய பட்டை பார்த் தீர்களா? திருடிய நகைகளைப் பட் டைக்குள் வைத்து, பழக்கப்பட்ட இந்த நாயின் கழுத்திலே கட்டி விடு கிறார்கள். தாங்கள் பயமில்லா மல் நாகரிகமாகப் போகிறார்கள். போலீஸ்காரர்கள் அவர்களைச் சந்தேகித்தால் தைரியமாகப் பேசு வார்கள்—மடியில்தான் கன மில்லையே?

''இது போன்ற குண்டு நாய்களை யாருமே எளிதில் நெருங்க முடி யாது - சந்தேகப்படவும் முடியாது. எந்த இருட்டானாலும் அது வீட் டைத் தேடி வந்துவிடுகிறது. இல்லையா ஸார்? எப்படி?'' என்றான் கம்பீரமாக.

''அது சரி! நீ எப்படி இவ்வள வும் அறிந்தாய்?'' என்றார் துரை.

'நாயின் கழுத்துப்பட்டைமேல் ஆசைப்பட்டுக் கம்பால் குத்தி இழுத்தபோது பட்டை சற்று அகன்றது. டார்ச் வெளிச்சத்திலே உள்ளே இருக்கும் நகை பளிச் சிட்டது' என்று சொல்ல நினைத்த அவன் தனக்குக் கௌரவமிருக்காது என்று எண்ணி, ''அதை ஏன் கேட் கிறீர்கள்? ரோட்டிலே இது வரும் போது ஜிம்மி இதைத் தாக்கியது. எனக்குச் சந்தேகம் உதித்தது. உடனே இதைத் தொடர்ந்து வந்து இவ்வளவையும் அறிந்தேன்..'' என்றான் வைத்தா.

துரை அவனை, ''சபாஷ்!'' எனத் தட்டிக் கொடுத்தார்.

இரவு மெல்ல மெல்லக் கழிந் தது. சேவல் கூவியது. பொழுது விடிந்தது. தாசில்தார் அளித்த நூறு ரூபாய்ப் பரிசு அவன் வீடு தேடி வந்தது. ..

சிங்கப்பூர் திருடர்கள்

ராஜன்

துப்பறியும் நிபுணர் துரைராஜ் மாடியில் தனது ஆபீஸ் அறையில் நின்று ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண் டிருந்தார். வாசலில் ஒரு லாரி வந்து நின்றது. அதிலிருந்து, காக்கி உடை அணிந்த ஒருவன் பெரிய பெட்டி ஒன்றைத் தூக்கிக்கொண்டு இறங்கி வந்தான். துரைராஜின் ஆபீஸ் பையன் சின்னத் தம்பியிடம் பெட்டியைக் கொடுத்து, சிறிய நோட்டுப் புத்தகம் ஒன்றையும் கொடுத்து ஏதோ சொன்னான்.

சின்னத்தம்பி பெட்டியைத் தூக்கிக்கொண்டு மாடிமேல் ஓடி வந்தான்.

துரைராஜ், அவனிடமிருந்த நோட்டுப் புத்தகத்தை வாங்கி, பெட்டியைப் பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சியாகக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.

லாரியும் புறப்பட்டுப் போய் விட்டது.

''யார் அனுப்பியிருப்பார்கள் இந்தப் பெட்டியை?'' என்று விரைந்துகொண்டே துரைராஜ் பெட்டியை உற்றுக் கவனித்தார்.

பெட்டியில் ஒரு சிறிய பூட்டுத் தொங்கியது. பெட்டியின்மேல் அனுப்பியவரின் பெயரோ விலாசமோ இல்லை. ஆனால், அந்தப் பெட்டி எங்கிருந்தோ கப்பலில் வந்தது என்பதற்கு அடையாளமாக 'ஜலராணி' என்று எழுதியிருந்தது.

துரைராஜ் மேஜை அறையைத் திறந்து, கொத்துச் சாவியை எடுத்தார்.

ஒரே நிமிஷத்தில் பூட்டுத் திறக்கப்பட்டது.

பெட்டியின் உள்ளே, விலையுயர்ந்த சட்டைகளும் கால் சட்டைகளும் கோட்டுக்களும் மடிப்புக் கலையாமல் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவைகளை ஆச்சரியத்துடன் ஒவ்வொன்றாக எடுத்து வெளியே வைத்தார் துரைராஜ்.

பெட்டியின் அடியில், பாய்ந்து ஓடும் புலியின் பொம்மை ஒன்று இருந்தது. அந்தப் பொம்மையை எடுத்துப் பார்த்தார் துரைராஜ். அது கனமாகவும் அழகாகவும் இருந்தது. அதை மேஜைமேல் வைத்தார். பெட்டியின் அடியில் ஒரு கவரும் இருந்தது. அதன்மேல் துரைராஜின் பெயரும் விலாசமும் எழுதப்பட்டிருந்தன. அவர் அதை உடைத்துப் பார்த்தார். உள்ளே, ஒரு சிறிய காகிதத்தில் அவசரமாக எழுதப்பட்டிருந்தது:

''துப்பறியும் நிபுணர் துரைராஜ் அவர்களுக்கு; என்னை உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ! உங்களை எனக்குத் தெரியும். அதாவது கேள்விப்பட் டிருக்கிறேன். இந்தப் பெட்டியை நான் நேரில் வந்து எடுத்துப் போகும் வரையில் பத்திரமாக வைத்திருங்கள். இந்தப் பெட்டி உங்களிடம் இருக்

கும் வரையில் என் மனம் நிம்மதியாக இருக்கும். இப்படிக்கு,
நாகசாமி.''

நாகசாமி யார் என்பது துரைராஜுக்குத் தெரியாது. சிறிது நேரம் ஆழ்ந்த யோசனைக்குப் பின் துரைராஜ் சின்னத்தம்பியைப் பார்த்தார்.

அவன், "என்ன ஸார்?'' என்றான்.

''மாலைப் பத்திரிகை வந்துவிட்டதா?''

''இன்னும் இல்லை, ஸார். அவசரமாக வேண்டுமானால் சைக்கிளில் போய் வாங்கி வருகிறேன்.''

''வாங்கி வா. அப்படியே ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போ!''

''ஆஸ்பத்திரிக்கா? ஏன் ஸார்?''

''இன்றைத் தினம் ஆஸ்பத்திரிக்கு அடிபட்டு வந்தவர்களின் பெயர்களும் முழு விவரங்களும் வேண்டும்; சீக்கிரம் வா!''

சின்னத்தம்பி சைக்கிளை எடுத்துக்கொண்டு பறந்தான்.

சிறிது நேரம் கழித்துத் திரும்பி வந்தான் சின்னத்தம்பி. பத்திரிகையில், 'ஜலராணி' என்னும் கப்பல்

★

துரைராஜ் பின்னால் நுழைந்தார்

அன்றுவிடியற்காலேதான் சென்னைத் துறைமுகத்தை வந்து அடைந்திருந்தது. அது சிங்கப்பூரில் புறப்பட்டு வந்திருக்கிறது என்பதையும் தெரிந்துகொண்டார் துரைராஜ். பிறகு சின்னத்தம்பியைப் பார்த்து, ''ஆஸ்பத்திரிக்குப் போனுயா?'' என்று கேட்டார்.

சின்னத் தம்பி சொன்னுன்: ''நாகசாமி என்பவர் அடிபட்டு ஆஸ்பத்திரியில் சேர்ந்திருக்கிருர். அவர் 'ஜலராணி'யிலிருந்து விடியற்காலேயில் இறங்கி வெளியே வந்ததும், கடற்கரைச் சாலேயில் யாரோ போக்கிரிகள் இரண்டு மூன்று பேர்கள் அவரைத் தாக்கியிருக்கிருர்கள். வழிப்பறி விஷயம். அடி ஒன்றும் பலமில்லே. இன்றே அவர் ஆஸ்பத்திரியைவிட்டு வெளியேறிவிடுவார்!''

''வேறு யாருமே அடிபட்டு ஆஸ்பத்திரிக்கு வரவில்லேயா?'' என்று கேட்டார் துரைராஜ்.

''அதைப்பற்றி நமக்கென்ன? நாகசாமி என்பவரைப்பற்றித் தானே நம் கவலேயெல்லாம் இப்போது? நீங்கள் அந்தக் கடிதத்தைப் படித்தபோது, நாகசாமி என்னும் பெயர் எனக்கு நன்ருகத் தெரிந்தது. இந்தப் பெட்டியை அனுப்பிய நாகசாமி ஆஸ்பத்திரியில் அடிபட்டுக் கிடக்கிருர். அவர், பெட்டியை எடுத்துக்கொண்டு வந்திருந்தால், வழிப்பறிக்காரர்கள் பெட்டியை அபேஸ் செய்து கொண்டு போய்விட்டிருப்பார்கள்! அதனுல்தான் பெட்டியை உங்களுக்கு அனுப்பும்படி கப்பல் கம்பெனிக்குத் தெரிவித்துவிட்டு வந்திருக்கிருர்'' என்ருன் அவன்.

''நாகசாமியைப் பார்த்தாயா நீ?''

''பார்த்தேன் ஸார்! நல்ல உயரம், எடுப்பான உடற்கட்டு.''

வெளியே, ஒரு டாக்ஸி வந்து நிற்கும் சத்தம் கேட்டது. சின்னத்தம்பி ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துவிட்டு, ''இதோ நாகசாமியே வந்துவிட்டார்!'' என்ருன்.

ஒரு மனிதர் கட்டுப்பட்டுக் கிடந்தார்.

நாகசாமி தலையில் ஒரு சிறிய கட்டுடன் உள்ளே வந்தார். வந்ததும் துரைராஜுக்கு வணக்கம் செலுத்திவிட்டு, ''உங்கள் கையில் என் பெட்டி இருக்கும் வரையில் எனக்கு நிம்மதியாக இருந்தது. சிங்கப்பூரிலிருந்தே இரண்டு மூன்று பேர்கள் என்னைத் தொடர்ந்து வந்தார்கள். சிங்கப்பூரில் நான் இரண்டு லட்சம் ரூபாய் கொடுத்து, விலையுயர்ந்த வைரக்கல் ஒன்றை வாங்கினேன். அதை அபகரித்துப் போக, சிலர் முயற்சி செய்கிறார்கள். அதனால்தான் வைரக் கல்லைப் பெட்டியில் வைத்து உங்களுக்கு அனுப்பிவிட்டேன். வைரக் கல் என்னிடம் இருக்கும் என்று எண்ணித் திருடர்கள் ஏமாந்தார்கள்'' என்றார்.

''பெட்டி இப்போதுதான் வந்தது. கப்பலிலிருந்து தாமதமாக இறங்கி யிருக்கும். பெட்டியில் எல்லாம் சரியாக இருக்கிறதா பாருங்கள்'' என்றார் துரைராஜ்.

நாகசாமி துணிகளை ஒவ்வொன்றாக எடுத்து வைத்துவிட்டு, புலிப் பொம்மையை எடுத்தார். அதன் வயிற்றைப் பிடித்து அமுக்கியதும், வாய்ப்பக்கமாகக் கண்ணைப் பறிக்கும் வைரம் ஒன்று வெளியே வந்தது. நாகசாமி வைரத்தை மீண்டும் உள்ளே போட்டுவிட்டு, பெட்டியை மூடினார். புலிப் பொம்மையைக் கோட்டுப் பையில் போட்டுக் கொண்டார். பிறகு மணிப்பர்ஸை எடுத்து, நாகசாமியிடம் நூறு ரூபாய் நோட்டுக்கள் இரண்டை எடுத்துக் கொடுத்து, ''வருகிறேன்'' என்றார்.

சின்னத்தம்பி அவருடைய பெட்டியைத் தூக்கிக் கொண்டு போய் டாக்சியில் வைத்தான். டாக்சியும் புறப்பட்டது.

இருட்டி விட்டதால், துரைராஜுக்குச் சௌகரியமாகப் போய் விட்டது. அவரும் தமது காரில் ஏறி விளக்கைப் போடாமல் டாக்சியைத் தொடர்ந்தார்.

டாக்சி சைதாப்பேட்டைக்கு அருகில், ரெயில் நிலையத்திற்குச் சிறிது தூரத்தில் தனித்து நின்ற வீட்டின் முன் நின்றது. அரைப் பர்லாங்குத் தூரத்தில் ஒரு மரத்தினடியில் காரை நிறுத்தினார். சின்னத் தம்பியிடம் மெல்லிய குரலில் ஏதோ சொன்னார். அவன் இறங்கி ரெயில் நிலையத்தை நோக்கி ஓடினான்.

துரைராஜ் காரிலேயே உட்கார்ந்துகொண்டு கவனித்தார்.

டாக்சி திரும்பி வேறு வழியாகப் போய்விட்டது.

பெட்டியுடன் கீழே இரங்கிய நாகசாமி வீட்டிற்குள் போய் விட்டார்.

துரைராஜ் மெல்லக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றார். கூடம் இருட்டாக இருந்தது. கூடத்திற்கு அப்பால் ஓர் அறையில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

அங்கே, நாற்காலியில் கட்டப் பட்டுக் கிடந்தார் ஒரு மனிதர். அவர் நல்ல உயரம். நல்ல பருமன். அவர் பீதியுடன் பார்த்துக்கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் நாகசாமி கையில் புலிப் பொம்மையுடன் நின்றிருந்தார். அவருக்கு எதிரே இரண்டு முரட்டுப் பேர்வழிகள் நின்றிருந்தார்கள்.

நாகசாமி சொன்னார்: ''அந்த முட்டாள் துரைராஜ் நான்தான் நாகசாமி என்று நம்பிவிட்டான். பெட்டியை உடனே தூக்கிக் கொடுத்து விட்டான். புலிப் பொம்மையில் வைரக்கல் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது. இதோ பாருங்கள்!''

நாகசாமி என்னும் பெயரில் துரைராஜிடம் வந்தவர் நாகசாமி அல்ல! அவன் புலிப் பொம்மையிலிருந்த வைரத்தை வெளியே எடுத்துக் காண்பித்தான்.

நாற்காலியில் கட்டப்பட்டுக் கிடந்த உண்மையான நாகசாமி கோபத்துடன் அவனைப் பார்த்தார். அவர் கோபத்துடன் காலால் உதைக்கப் பார்த்தபோது நாற்காலி சாய்ந்தது. அவர் துடித்தார். மற்ற மூவரும் சிரித்தார்கள்.

வெளியே கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

துரைராஜ் சிரித்துக்கொண்டே, ''பதற்றப் பட வேண்டாம். என்னுடைய ஆபீஸ் பையன் ரெயில் நிலையத்திற்குப் போய், போலீஸுக்

குப் போன் செய்தான். கண்ணை மூடிக் கண்ணைத் திறப்பதற்குள் போலீஸ் வந்துவிட்டது. என்னை ஏமாற்றிவிடுவது அவ்வளவு எளிதல்ல!'' என்றார்.

நாகசாமி என்னும் பெயருடன் வந்தவன் உள்ளே வந்த போலீஸைப் பார்த்ததும், வைரத்தைக் கொண்டு போய் எரியும் அடுப்பில் போட்டு விட்டு, எக்களித்தான்.

நாகசாமி அலறினார். அவரை அவிழ்த்து விட்டுக் கொண்டே துரைராஜ், ''பதற வேண்டாம்! உண்மையான வைரம் என்னிடம் இருக்கிறது. அதில் இருந்தது வெறும் இமிடேஷன்! இதோ உங்கள் வைரம்!'' என்றார், கோட்டுப் பையிலிருந்து உண்மையான வைரத்தை எடுத்து நீட்டியபடி.

வைரத்தை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டார் நாகசாமி. பிறகு, ''இந்த மூவரும் சிங்கப்பூரிலிருந்தே என்னைத் தொடர்ந்து வந்தார்கள்!'' என்றார்.

''நானே சொல்லுகிறேன். நீங்கள் கப்பலைவிட்டு இறங்கியதும், வைரம் உங்கள் கையில் இருக்கும் என்று நினைத்து, உங்களை இங்கே கடத்தி வந்தார்கள். உங்களிடம் வைரம் இல்லை. உங்களை மிரட்டி, வைரம் எங்கே என்று கேட்டபோது, உண்மையைச் சொல்லி விட்டீர்கள். உடனே உங்களுடைய உடைகளைக் கழற்றி, ஒருவன் அணிந்து கொண்டான். அவனைக் கொஞ்சம் ரத்தம் வரும்படி அடித்து கடற்கரைச் சாலையில் விட்டுவிட்டு, மற்ற இருவரும் வந்து விட்டார்கள். அடிபட்ட அவன்,'நாகசாமி' என்று சொல்லிக் கொண்டு, ஆஸ்பத்திரிக்குப் போய் வழிப்பறிக்காரர்கள் தன்னை அடித்துப் போட்டுவிட்டதாக அளந்திருக்கிறன். இந்தச் செய்தி பத்திரிகையிலும் வந்திருக்கிறது. ஆகையால், நாகசாமி என்பவன் அவன்தான் என்றுதானே நினைக்க வேண்டியிருக்கிறது? ஆனாலும் எனக்கு அவன்மீது நம்பிக்கையில்லை. நாகசாமியின் உடைகள் அவனுக்குச் சரியாக இருந்த போதிலும், வைரத்தை அவன் எங்கே தேடுகிறன் என்று பார்த்தேன். அடியில் பொம்மை இருப்பது அவனுக்குத் தெரியாது. மடித்து வைக்கப் பட்டிருந்த கோட்டின் காலரில் எங்கேயாவது தைத்து வைக்கப் பட்டிருக்கிறதா என்று மெல்லத் தடவிப் பார்த்தான். கிடைக்கவில்லை. பிறகு புலிப் பொம்மையைப் பார்த்தவுடன் தான் அவன் முகம் மலர்ந்தது!'' என்றார் துரைராஜ்.

யானை வரும் பின்னே! - மணி ஓசை வரும் முன்னே

''ஆமாம், மிஸ்டர் துரைராஜ். பெட்டியில் வைரம் இருக்கிறது என்று சொன்னேனே தவிர, புலிப் பொம்மையில் ஒளித்து வைக்கப் பட்டிருக்கிறது என்று நான் சொல்லவில்லை!'' என்றார் உண்மையான நாகசாமி.

போலீஸ்காரர்கள் மூன்று திருடர்களையும் பிடித்துக்கொண்டு சென்றார்கள்.

போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் துரைராஜ் சொன்னார்: ''இவர்கள் மூவரும் பெரிய பேர்வழியாக இருப்பார்கள். இவர்களுடைய பெயர்களைக் கேட்டு, சிங்கப்பூர் போலீஸ் இலாக்காவில் விசாரித்துப் பாருங்கள். ஒவ்வொருவனைப் பற்றியும் முழநீள ரிபோர்ட் இருக்கும் என்று நினைக்கிறேன்.''

நாகசாமி துரைராஜின் கையைப் பிடித்துக் குலுக்கிக்கொண்டே, ''வாருங்கள் போகலாம்!'' என்றார்.

கண்ணன் பெயர் தவிர,
கண்டவரை அழையாதே!

கண்ணன் திருநாமம்
கனியைவிடத் தித்திக்கும்!



பொல்லென்று பூத்ததே
பொற்கம்பி மத்தாப்பு!

கூடை முறம் கட்டிடுவேன்,
குறி சொல்லுவேன்!

பர்மாக் குடை அழகி
பகட்டுக் கண்ணழகி!

புகைப் படங்கள்: வி. கே. சர்மா

வங்காளப்புலி

ப. ரா.

முத்தையன் துப்பாக்கியைத் தோள் மீது சாத்திக் கொண்டு கம்பீரமாக நடந்து சென்றான். வீதியில் போவோர் வருவோர் அனைவரும் பயபக்தியுடன் தன்னையே உற்று நோக்குவது போலவும், தன்னைச் சுட்டிக் காட்டித் தமக்குள் கசமுசவென்று ஏதோ பேசிக் கொள்வது போலவும் தோன்றின அவனுக்கு.

பின் இருக்காதா என்ன? பிரசித்தி பெற்ற புலிவேட்டை வீரனான முத்தையனுக்கு மக்களது மரியாதை வலுவில் கிடைப்பது இயற்கைதானே?

''முத்தையனா? ஹ ஹ ஹ! அவனையா புலிவேட்டைக்காரன் என்று நம்புகிறீர்கள்? பத்தடி தூரத்தில் நிற்கும் யானையைக்கூடக் குறி தவறாது சுட முடியாதே அவனால்!'' என்று கேவலமாகப் பேசிய ஆசாமிகள் சிலரும் அந்த ஊரில் இருந்தனர். ஆனால் அவர்களில் யாருக்குமே அவன் எதிரில் நின்று மேற்படி வார்த்தைகளைச் சொல்லும் தைரியம் கிடையாது. ஏனென்றால், துப்பாக்கிப் பிரயோகத்தில் அவன் திறமை எப்படியிருந்தாலும், முஷ்டிப் பிரயோகத்தில் முத்தையனது குறி தவறுவதில்லை. நல்ல முரடன் அவன்.

நடுத்தெருவில் சென்றுகொண்டிருக்கும் போது 'டுமீல்!' என ஒரு சத்தம் கிளம்பிற்று. முத்தையன் பதறிக்கொண்டு துப்பாக்கியைக் கீழே போட்டான். தீபாவளிப் பண்டிகைக்கு இன்னும் நாட்கள் அதிகம் இருந்தன. வெடித்தது பட்டாசு அல்ல, தன் துப்பாக்கியே தான் என்று அவனுக்குத் தெரியாவிட்டால் பின் யாருக்குத் தெரியும்?

முத்தையனது துப்பாக்கி நல்ல துப்பாக்கிதான். ஆனால் அதனிடம் ஒரே ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. திடீரென்று ஏதோ நினைத்துக் கொள்ளும்; வெடித்து வைக்கும். அதற்கு இடம், காலம், சந்தர்ப்பம் எதுவுமே கிடையாது. நல்ல வேளையாக இதுவரை அது உயிர்ச்சேதம் எதுவும் விளைக்கவில்லை.

ஆனால் இன்று என்ன ஆயிற்று? துப்பாக்கி வெடித்த மறுகணம் திமு திமுவென்று செங்கற்கள் சரிந்து விழும் ஓசை. கண் இமைக்கும் நேரத்தில் வீதி முனையிலிருந்த அந்த மாடிக் கட்டடம் தரை மட்டமாகி விட்டது.

ஒரு சின்னஞ் சிறு ஈயக்குண்டிற்கு இத்தனை வலிமையா? எத்தனையோ வருஷங்களாக அந்த இடத்தில் கோபுரம்போல அசையாது நின்ற கட்டடத்தை..! இது என்ன மாயம்!

மாயம் மட்டுமா? முத்தையனுக்குக் காலம் சரியாக இல்லையென்

பதற்கு இதைவிடப் பெரிய அத்தாட்சி என்ன வேண்டும்? அந்தக் கட்டடத்தின் சொந்தக்காரர் வந்து கேட்டால் என்ன பதில் சொல்வது? தம் உடமையை நாசம் செய்ததற்கு நஷ்டஈடு கோரி அவர் கோர்ட்டு வரையில் போவாரே!

தனக்குப் பெயரும் புகழும் தேடித் தந்த துப்பாக்கியே இப்படிக் காலை வாரி விடுமென எண்ணியிராத முத்தையன் அதை மனமார, வாயாரச் சபித்தான். இதற்குள் அங்கே கூட்டம் கூடத் தொடங்கிற்று. சற்று முன்பு அவனை மரியாதையுடன் பார்த்த கண்களே இப்போது ஒரு விநோத ஜந்துவைக் கண்காணிப்பது போல நோக்கின.

அசட்டு விழி விழித்து நின்ற முத்தையனின் முன்னால் திடுமென வந்து நின்றார் ஒரு பெரிய மனிதர்; ''நான்தான் தம்பி, இக் கட்டடத்தின் சொந்தக்காரன்'' என்று தம்மைத் தாமே அறிமுகமும் செய்து கொண்டார். அவனுக்கு அடிவயிற்றைக் கலக்கியது.

ஆனால், இதென்ன விந்தை! அவர் முகத்தில் கொஞ்சமாவது கோபமோ, வருத்தமோ, படபடப்போ தோன்றவில்லையே! அதற்கு மாறாகப் பெரிய புன்னகையொன்றல்லவா அந்த உதடுகளில் நெளிந்துகொண் டிருக்கிறது!

அவர் பேசினார். அந்தக் குரலில் தான் எவ்வளவு அருமை!

''தம்பி, முத்தையா! நீ செய்த உபகாரத்திற்கு நான் மிகவும் கடமைப்பட்டவன்'' என்று தொடங்கினார். அவ்வார்த்தைகளைக் கேட்டு முத்தையன்மட்டுமா திடுக்கிட்டான்? அங்கே கூடியிருந்த அத்தனை ஜனங்களுமல்லவா ஒன்றும் புரியாமல் விழித்தார்கள்!

பெரிய மனிதர் தொடர்ந்து பேசினார்: இந்தக் கட்டடம் என் முப்பாட்டனார் கட்டியது. நூறு வருஷ காலமாகப் பல கடும் மழைகள், புயல்கள், ஏன், ஓரிரண்டு பூகம்பங்களைக் கூடத் தாங்கிச் சமாளித்து நின்றிருக்கிறது. ஆனாலும் என்ன? கேவலம் செங்கல்லும் மண்ணும் கலந்து கட்டப்பட்டதுதானே? என்றாவது ஒரு நாள் இடிந்து விழுந்து தரைமட்டமாக வேண்டியதுதான் இது. எனக்குத் தெரியாததல்ல. என்றாலும் இதன் உண்மை நிலைமை எனக்குத் தெரியும் வரையில் நானாக இடித்துத் தள்ள மனம் வரவில்லை. உன் துப்பாக்கியினின்று கிளம்பிய ஒரு குண்டு இதை வீழ்த்தி விட்டதென்றால், இந்தக் கட்டடம் வாஸ்தவத்தில் எத்தனை பலஹீனமாக இருந்திருக்க வேண்டும்! இதில் யாரும் வசிக்காத சமயத்தில் இந்தச் சம்பவம் நேர்ந்தது எவ்வளவு நல்லதாயிற்று!

''மேலும் இதை இடிப்பதற்கான செலவும் மிச்சமாயிற்று. இதே இடத்தைச் சுத்தம் செய்துவிட்டு நான் புது வீடு ஒன்று கட்ட ஆரம்பிக்க வேண்டியதுதான். என்ன விழிக்கிறாய்? எனக்கு இவ்வளவு பெரிய உதவி செய்த உன்னை நான் சும்மா விட்டு விடுவேனா, என்ன? வா, என் வீட்டுக்கு.'' முத்தையன் ஏதோ உளறுவதற்கு வாயைத் திறந்தான். அதைக் கேட்கக் கூடக் காத்திராமல் அவன் கையைப் பற்றித் தரதரவென்று இழுத்துச் சென்றார் அவர். அருகே நின்ற அவருடைய காரில் இருவரும் ஏறி அமர்ந்ததும் வண்டி கிளம்பியது.

* * *

பிரம்மாண்டமான அந்தப் பங்களாவில் முத்தையனுக்குச் சம்பிரமமான ஒரு விருந்து நடந்தது. விலாப் புடைக்கச் சாப்பிட்டு விட்டு அந்தப் பெரிய மனிதரும் அவனும் நிலா வெளிச்சத்தில் பேச உட்கார்ந்தனர்.

''உன்னைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன் தம்பி. ஆனால் சிலர் உனக்குக் குறி பார்த்துச் சுடத் தெரியாதென்று சொல்லிக் கொள்கிறார்களே, அது ஏன்!'' என்று கேட்டார் அவர்.

''அப்படிச் சொல்பவர்கள் எல்லோரும் என் விரோதிகள் ஸ்வாமி. பொறாமைதான் இந்தப் பொய்ப் பிரசாரத்திற்குக் காரணம்'' என்றான் முத்தையன்.

''சரி..நீ 'புலிவேட்டை முத்தையன்' என்று பெயர் வாங்கியிருக்கிறாய் அல்லவா? வாஸ்தவத்திலேயே புலி வேட்டை ஆடியதுண்டா? ஒரு புலியையாகிலும் கொன்றிருக்கிறாயா?''

முத்தையன் தயங்கினான், தலையைச் சொறிந்து கொண்டான், பிறகு ஈனஸ்வரத்தில் பதில் சொன்னான்:- ''உம்..இல்லை ஸ்வாமி.. புலிவேட்டைக்கென்று பலமுறை புறப்பட்டுப் போனதுண்டு. ஆனால்..புலியைக் கொல்லும் வாய்ப்பே கிடைக்கவில்லை.''

பெரிய மனிதர் அவன் முதுகை ஆதரவோடு தடவிக் கொடுத்தவாறு சொன்னார்:- ''தம்பி, நான் உன் நலனை நாடுபவன் என்பதுபற்றி நீ சந்தேகமே கொள்ள வேண்டியதில்லை. எந்த மூர்க்கமான மிருகத்தையும் நீ சுட்டுக் கொல்வதற்கு வேண்டிய தைரியமுள்ளவன். ஆயினும் உலகம் உன்னைப் பற்றிச் சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இதுவே என் விருப்பம்.''

முத்தையன் தலையை ஆட்டி வைத்தான்.

''இந்தப் பக்கத்துக் காடுகளில் புலிகள் அதிகம் கிடையாது. இருக்கும் சில புலிகளும் நீ சுட்டுக் கொல்வதற்குத் தகுதியற்ற கோழை மிருகங்கள். சரியான முரட்டுப் புலிகள் உலவுவது வங்காளத்து வனப் பிரதேசங்களில்தான். நீ உன் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு அங்கே போ. வேண்டிய புலிகளைச் சுட்டுத் தள்ளு. அவற்றில் ஒரு புலியின் தோலையாவது உரித்து எடுத்துக்கொண்டு வந்து இந்த ஊராருக்குக் காண்பி. அதன் பிறகு உன்னைப் பற்றிக் குறைவாக எவன் பேசுகிறானென்று பார்த்துவிடலாம்.''

''வங்காளத்தில் வேட்டையாடப் போவதற்குக் கொள்ளைப் பணம் வேண்டுமே, ஸ்வாமி!''

''நான் இருக்கும்போது பணத்தைப் பற்றி உனக்கென்ன கவலை? நீ நாளைக்கே புறப்படச் சித்தமாயிரு'' என்றார் பெரிய மனிதர்.

அப்புறம் முத்தையன் ஏன் ஆட்சேபம் சொல்லப் போகிறான்?

பட்டப் பகலிலேயே கும்பிருட்டாகத் தோன்றும் வங்காளக் காடு. தன் துப்பாக்கியொன்றைத் தவிர வேறு துணையின்றி ஓர் உயர்ந்த கற்பாறைமீது அமர்ந்திருந்தான் முத்தையன். இங்கே புலிகளுக்குப் பஞ்சமே யில்லை என்றுதான் காட்டையடுத்திருந்த கிராமவாசிகள் சொன்னார்கள். எந்த நிமிஷமும் ஒரு பயங்கர மிருகம் அவன் கண்களுக்குப் புலனாகக் கூடும்.

உண்மையைச் சொன்னால் முத்தையனுக்கு உள்ளூர நடுக்கம்தான். புலியை வேட்டையாடுவது சாதாரண விஷயமல்ல. மிகத் தந்திரமும் துணிச்சலும் படைத்த விலங்கு அது. தன்னுடலில் காயம் பட்டுவிட்டால் பிறகு அதன் ஆத்திரம் வர்ணிக்க இயலாது அதிகரித்து விடும். தன்னைத் தாக்கியவனைச் சும்மா விடாது. ஒரே குண்டில் அதைக் கொன்றால்தான் கொன்றது. இதெல்லாம் தெரிந்தும்கூட யாரோ ஒரு பெரிய மனிதனின் பேச்சைக் கேட்டுத் தன் சொந்த ஊரைவிட்டு இவ்வளவு தூரம் வந்தது முட்டாள் தனம். இந்த நிர்மானுஷ்யமான, பயங்கர வனத்தில் அவனுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் . . . .! இம்மாதிரியான எண்ணங்கள் முத்தையனை ஓயாது துளைத்துவந்தன.

இங்கே புலிகள் மட்டுந்தானா உலவின? இதர மிருகங்கள் இல்லையா? அதோ சீறிக் கொண்டு போகும் சர்ப்பம் தீண்டினாலே போதாதா?

'வந்தது வந்துவிட்டோம். கடவுள் கிருபையால் ஒரே ஒரு புலி கிடைத்தால் போதும். அதைக் கொன்று, தோலை உரித்துக் கொண்டு மரியாதையாக ஊருக்குத் திரும்பி விடலாம்' என்று அவன் எண்ணமிட்ட சமயம்—காடு அதிரும்படியான ஓர் உறுமல்! அவன் விரும்பி எதிர்பார்த்த புலி கற்பாறைக்குக் கீழே சற்றுத் தூரத்தில் தோன்றியது.

தடதடவென்று அடித்துக் கொண்டது முத்தையனது நெஞ்சு. அந்தப் பதினாறடி வேங்கையின் பயங்கரத் தோற்றந்தான் என்ன! அவனை அதே கணத்தில்பார்த்துவிட்ட அது சீறி நின்றது. அதன் வால் அபாய எச்சரிக்கை போல்

மேலே கிளம்பிற்று. பிரம் மாண்டமான தன் வாயைப் பிளந்து கோரைப் பற்களைக் காண்பித்து இன்னோர் உறுமல் உறுமிய பின் நேரே அவனை நோக்கி நிதானமாக நடந்துவரத் தொடங்கிற்று. நிதானம் என்றால் எப்படிப்பட்ட நிதானம்! ''நீ என்னிடம் சிக்கிக் கொண்டாய். இனித் தப்புவது இயலாத காரியம். நான் வந்து உன்னை விழுங்கும் வரையில் அங்கேயே காத்திரு'' என்று சொல்வது போலிருந்தது அதன் செய்கை.

நடுங்கும் கரங்களில் துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டிருந்த முத்தையன் குறி பார்த்தான். ஆயிற்று; இதோ புலி தீர்ந்துவிடப் போகிறது.

'டுமீல்' என்ற ஒரு சப்தம். துப்பாக்கி வெடித்துவிட்டது.

புலி செத்ததா? அதுதானே இல்லை! முத்தையன் சுட்டிருந்தால் புலி ஒருகால் மடிந்திருக்கலாம். அவன் விசையை இழுக்கும் வரை காத்திராமல் துப்பாக்கி தானே வெடித்திருக்கும் போது அதில் குறி எப்படி இருந்திருக்க முடியும்?

குண்டு எங்கோ பாய்ந்த சப்தம் கேட்டு உஷாராகிவிட்ட புலி முத்தையனை நோக்கிப் பாய்ந்து வந்தது!

அவன் மறுபடியும் சுட்டான். வெடி கிளம்பவில்லை. ''நான் என் இஷ்டப்படிதான் வெடிப்பேன். உன் உத்தரவுக்குக் கட்டுப்பட முடியாது'' என்பதுபோல் அந்தத் துப்பாக்கி ஒத்துழைக்க மறுத்துவிட்டது.

உடல் எங்கும் வியர்த்து வெலவெலத்துப் போன முத்தையனுக்குத் தப்ப வேறு வழி தோன்றவில்லை. அந்த மிருகம் பாய்ந்து வரும் வேகத்தைப் பார்த்தால் வயிறு கலங்கியது. எப்படியோ சமாளித்துக்கொண்டு எழுந்தான். அருகிலிருந்த மரத்தின்மீது ஏறிக் கொள்ளலாம் என்னும் உத்தேசத்துடன்.

எழுந்தவனுக்கு இன்னுமொரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது!

★

இரண்டு புலிகளும் சண்டையிட்டன



கழுதை 1: என்ன அண்ணே! தீபாவளியும் அதுவுமா வாலிலே முடிச்சுப் போட்டுக்கிட்டிருக்கே!

கழுதை 2: போன வருசம் வாண்டுப் பயல்கள் வாலிலே பட்டாசைக் கொளுத்திக் கட்டிப்பிட்டான்கள். அதனுல்தான் இந்த முன் ஜாக்கிரதை!

பாய்ந்து வரும் புலியைவிடப் பிரம்மாண்டமான இன்னெரு புலி அவன் பின்னுல் இரண்டு கஜ தூரத்தில் அமர்ந்திருந்தது. இத்தனே நேரமும் அது அங்கே சந்தடி செய்யாமல் உட்கார்ந்து அவனது நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்திருக்க வேண்டும்.

இதுவரை மௌனமாக வீற்றிருந்த இந்தப் புலியும் இப்போது ஓர் உறுமல் உறுமிற்று. 'அசையாதே. அங்கேயே நில்' என்று அதற்குப் பொருள். முத்தையன் கையிலிருந்த துப்பாக்கி 'டங்' என்ற ஓசையுடன் கீழே விழுந்தது. 'சரி, இதோடு தீர்ந்தோம்' என்றெண்ணியவனுய் அவன் கற்சிலேபோல் நின்றுன்.

பாய்ந்து வந்த புலியும் அவனை நெருங்கிற்று.

இரண்டு பூதாகாரமான புலிகள் - இடையே ஒட்டைத் துப்பாக்கியுடன் ஒரு மனிதன்!

இப்போதுதான் முத்தையன் சற்றும் எதிர்பாராத வகையில் சம்பவங்கள் நிகழத் தொடங்கின.

வந்த புலி முத்தையனே விட்டுவிட்டு ஏற்கனவே அங்கிருந்த புலியின்மீது பாய்ந்தது. மற்றதுதான் இளைத்த மிருகமா? ஒரு கணப் பொழுதிற்குள் இரண்டிற்கும் உக்கிரமான போர் மூண்டுவிட்டது.

சண்டையென்ருல் எப்படிப்பட்ட சண்டை! அடேயப்பா! புலிகளின் உறுமல்கள் விண்ணே முட்டின. அவற்றின் கண்கள் கனலேக் கக்கின. தாவுவதும் பதுங்குவதும் மீண்டும் பாய்வதுமாக ஒன்றையொன்று கிழித்தெறிந்து கொண்டிருக்கும் காட்சியைக் காண்பதற்கே அச்சமாக இருந்தது. சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் முத்தையன் மெல்ல நகர்ந்து அந்த மரத்தின்மீது ஏறிக்கொண்டான்.

அரைமணி நேர கடும் போரின் முடிவில் இரு புலிகளும் பிணமாகிக் கிடந்தன. முத்தையன் மரத்தினின்று இறங்கி வந்தான்.

அவனுயிர் மட்டுந்தானு பிழைத்தது? புலி வேட்டைக்காரன் என்ற பெயரும் அல்லவா பிழைத்துவிட்டது!

* * *

திரும்பி ஊர் வந்து சேர்ந்த முத்தையனைக் கௌரவிக்கப் பழைய பெரிய மனிதரின் ஆதரவில் ஒரு தேநீர் விருந்தும் பொதுக் கூட்டமும் நடைபெற்றன. வங்காளக் காடுகளில் அவன் கொன்ற இரு புலிகளின் தோல்களும் விளம்பரமாகக் காண்பிக்கப்பட்டன.

இப்போது முத்தையனைப் பற்றியோ, அவன் துப்பாக்கியைப் பற்றியோ இழிவாகப் பேசுபவர்கள் யாரேனும் இருக்கமுடியுமா? அவனுடைய பெயருக்குமுன் 'வங்காளப் புலி' என்ற பட்டப் பெயரும் அல்லவா அவனுடைய பராக்கிரமத்தைப் பறைசாற்றத் தொடங்கியது!



பெண்கள் வண்டியில்

ராஜலக்ஷ்மி

சென்னையிலிருந்து புறப்பட்ட பம்பாய் ஜனதா எக்ஸ்பிரஸ், ஆடி வழிந்துகொண்டு சென்றுகொண் டிருந்தது. பெண்கள் பகுதியில் பிரயாணம் செய்துகொண்டிருந்த பானுவும் கீதாவும் இரவு வெகுநேரம் வரையில் தூங்கவில்லை. அவர்களிருவரும் சென்னையில் மாமா கல்யாணத்துக்குப் போய்விட்டுப் பம்பாய்க்குத் திரும்பிக்கொண் டிருந்தார்கள். அப்பாவுக்கு லீவு கிடைக்காததால் அவர் மனைவியையும் இரு பெண் குழந்தைகளையும் மட்டும் கல்யாணத்துக்கு அனுப்பி வைத்தார். பெண்கள் வண்டி சௌகரியமாக இருக்கும் என்று அவர்களை அதில் ஏற்றி அனுப்பியதில் மாமாவுக்கு உள்ளூறப் பயந்தான். பெண்கள் வண்டியில் அடிக்கடி திருட்டுப் போகிறது என்று யாவரும் அறிந்த விஷயம். பகல் பூராவும் நல்ல தூக்கம் போட்ட பானுவுக்கு இரவு தூக்கம் பிடிக்கவில்லை. அவள் தாயார் கல்யாண அலைச்சலால் சோர்வடைந்து நன்கு உறங்கி விட்டாள். கூடப் பிரயாணம் செய்த இரு பெண்மணிகளும் இரண்டு ஸீட்டிலும் கால்களை நீட்டி நிம்மதியாகக் குறட்டை விடலானார்கள்.

கீழே ஒரு ஜமக்காளத்தை விரித்துப் பானுவையும் கீதாவையும் படுக்க வைத்தாள் அவளது தாயாரான லலிதா. மகாராஷ்டிர உடை அணிந்த ஒரு முரட்டு ஸ்திரீ மட்டும் தனி ஸீட்டில் அமர்ந்தவாறு கொட்டு, கொட்டென்று விழித்துக்கொண் டிருந்தாள். பானுவுக்கு ஏனோ அவளைக் கண்டாலேயே பிடிக்கவில்லை. அவள் ரெயில் புறப்பட்டதிலிருந்து பானுவையும் அவள் கழுத்தில் போட்டுக்கொண்டிருந்த மாங்காய் மாலையையும் அடிக்கடி முறைத்துப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். வெகு நாட்களாகப் பானுவுக்கு மாங்காய் மாலை அணியவேண்டும் என்று கொள்ளை ஆசை. ஏற்கனவே பயந்தாங்கொள்ளியான லலிதா அவளுக்கு மூன்று ரூபாயில் ஒரு இமிடேஷன் மாலை வாங்கிப் போட்டாள். புதிதாக இருந்ததால் அது தங்கத்தைப்போலவே தகதக வென்று மின்னிக்கொண் டிருந்தது. பானு பத்து வயதுச் சிறுமியாக இருந்தாலும் மிகுந்த புத்திசாலி. துறுதுறுவென்று அழகாக இருப்பாள். எவ்வளவு சிடுமூஞ்சியாக இருந்தாலும் அவர்களை இழுத்து வைத்துப் பேசிச் சிரிக்கச் செய்துவிடுவாள்.

கல்யாணத்துக்கு அவளுக்குக் கிடைத்த விலையுயர்ந்த சரிகைப் பட்டுப் பாவாடையையும், அம்மாவுக்குக் கிடைத்த பட்டுப் புடவையையும் டிரங்குப் பெட்டியில் வைத்துப் பூட்டி ஸீட்டுக்கடியில் வைத்திருந்தாள். சிறிய பெட்டியாக இருந்ததால் யாரும் எளிதாகத் தூக்கிக்கொண்டு போய்விட முடியும். பானு சாமர்த்தியமாக அந்தப் பெட்டியருகில் கீதாவை அணைத்தபடி படுத்திருந்தாள். கண்ணை மூடுவதும் திறப்பதுமாக

இருந்த அவளேயே கவனித்துக் கொண்டு இருந்த மகாராஷ்டிர ஸ்திரீமீது அவளுக்கு ஆத்திரமாக வந்தது. முதலிலிருந்தே அவள்மீது சந்தேகங்கொண்ட பானு மூச்சு விடாமல் தூங்குவதுபோல் பாசாங்கு செய்தபடி அவளேக் கவனித்தாள்.

குப்புறப் படுத்துக்கொண்டு, தலே யணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அரைக்கண் திறந்தபடி அந்த ஸ்திரீயைக் கவனித்தாள். முரட்டு ஸ்திரீ சுற்றுமுற்றும் நோக்கினுள். எல்லோரும் தூங்கு கிருர்கள் என்று நிச்சயப்படுத்திக் கொண்டு மெள்ளக் குனிந்து பானு அருகில் இடம் செய்துகொண்டு படுத்தாள். பானு தூங்குவது போலவே கைகளே அவள்மீது போட்டாள். பெண்களுக்குரிய மிருதுத்தன்மையில்லாமல் முரட் டுத்தனமாக இருந்த அந்த ஸ்திரீ யின் கைகள் மெதுவாகப் பானுவின் இளங்கழுத்தைத் தடவின. பானு வின் இதயம் படபடத்தது. கண் களே இறுக மூடிக்கொண்டு கட வுளே வேண்டினுள். அந்த ஸ்திரீ பானு கழுத்திலிருந்த மாலேயைக் கழற்றவாரம்பித்தாள். திடீரென்று பானு அந்தக் கைகளேக் கெட்டியா கப் பிடித்துக்கொண்டு தன் பலங் கொண்டமட்டும் பற்களால் நறுக் கென்று கடித்துவிட்டாள். இதைச் சற்றும் எதிர்பார்க்காத அந்த ஸ்திரீ 'ஐயோ' என்று அலறி விட்டாள். சத்தம் கேட்ட உடனே அனேவரும் அலறிப் புடைத்துக் கொண்டு விழித்துக்கொண்டனர். ஸ்திரீ பயத்துடன் மாங்காய் மாலேயை அறுத்துக்கொண்டு வேக மாக ஓடலானுள். ஜனதா வண்டி தான் அனுமார் வால்போல் நீள மாக ஓடுவதற்குச் சௌகரியமாக இருக்கிறதே! பானு ஒன்றையும் கவனிக்காமல் அவள்பின் ஓடிக் கொண்டே, ''பிடியுங்கள், திரு டன், திருடன்!'' என்று கத்தினுள். அந்த ஸ்திரீ சடாரென்று ஒரு கக்கூஸில் நுழைந்து கதவைத் தாளிட்டுக்கொண்டாள்.

இதற்குள் அங்கே கூடிய ஐந் தாறு ஆட்வர்கள், ''என்னம்மா குழந்தை?'' என்று விசாரித்தனர். பானு தைரியமாக, ''இதோ இந்த அறையில் திருடன் இருக்கிருன்; பிடித்துப் போலீஸில் கொடுங்கள்'' என்று கூறவே, எல்லோரும் கட கடவென்று நகைத்தனர். பானு ஏதோ கனவு கண்டிருக்கிருள் என்றே எல்லோரும் நினேத்தனர். பெண்கள் வண்டியில் திருடன் எப்படி நுழைய முடியும் என்று அவர்கள் யோசித்தனர். இதற்குள் ஸ்டேஷன் வரவே வண்டி நின்றது. கார்டு அந்தப் பெட்டியில் நுழைந்து என்ன கலாட்டா வென்று விசாரித்தார். கக்கூஸில் நுழைந்த ஸ்திரீ வகை தெரியாமல்

''இவனேப் போலீஸில்

கைகால் வெடவெடவென்று நடுங்க நின்றிருந்தாள். ''கதவைத் திற'' என்று கார்டு படபட வென்று தட்டினுர். ஜன்னலில் கம்பிகள் இருந்ததால் தப்பிப் போகவும் முடியாமல், மாங்காய் மாலையை மட்டும் வெளியே எறிந்துவிட்டுக் கதவைத் திறந் தாள் அவள்.

எல்லோரும் கக்கூஸில் நின்ற பெண்மணியைக் கண்டு திடுக்கிட் டனர். பரம யோக்கியமாகத் தங்களுடன் பிரயாணம் செய்த வள் திருடியா என்று வியந்தனர். பானு கூச்சலிட்டாள். ''பிடியுங் கள். இவள்தான் என் மாங்காய் மாலையை அறுத்தாள். இவள் பெண் வேஷம் போட்ட ஆண் பிள்ளை. புடைவை கட்டிக்கொண்டு திருட வந்திருக்கிருன். கார்டு மாமா, இவனைப் போலீஸில் பிடித் துக் கொடுங்கள்'' என்று கூறி யதுமே கார்டு அவளைத் திரும்பிப் பார்த்தார். அவர் கண்கள் ஆச்சரி யத்தால் அகல விரிந்தன. ''அடே! இவள் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆத்மநாதம் பிள்ளையுடைய பெண் பானுவல்லவா!'' என்று கூறி, அந்த முரட்டு ஸ்திரீயின் வேஷத் தைப் பலவந்தமாகக் களைந்தார். இதற்குள் ரெயில்வே போலீஸும் வந்துவிட்டது. அரை நிஜாரும்

பிடித்துக் கொடுங்கள்'' என்ருள் பானு.



பனியனுமாகக் காட்சியளித்த ஆண் உருவத்தைக் கண்ட போலீஸ் படைகள், 'ஆ!' வென்று ஸ்தம்பித்து நின்றுவிட்டனர். ஏன் தெரியுமா? பல வருடங்களாக ரெயிலில் கொள்ளை, கொலை பல செய்து எவர் கையிலும் பிடிபடாமல் தப்பிய கொலைகார மாயாண்டிதான் அங்கே பெண் வேஷத்தில் நின்றான். அவனைக் கண்டுபிடிப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசளிப்பதாகச் சர்க்காரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

கார்டு பானுவைத் தட்டிக் கொடுத்துவிட்டு, ''பலே பானு! போலீஸ் புலிகளால்கூட முடியாத காரியத்தை நீ செய்துவிட்டாய்!'' என்று கூறிவிட்டுத் திருடனை நோக்கி, ''எங்கே மாங்காய் மாலை! எடு, சீக்கிரம்'' என்று உறுமினார்.

"மாமா, அது பித்தளை! போனால் போகிறது. பாவம்! வைரம் வைரமாகத் திருடும்போதெல்லாம் அகப்படாமல் கேவலம் பித்தளை நகையைத் திருடும்போது அகப்பட்டுக்கொண்டானே! த்ஸொ! த்ஸொ!'' என்று பானு கூறவே, எல்லோரும் கொல்லென்று நகைத்தனர்.

கார்டு மகிழ்ச்சியுடன், ''பானுக் குட்டிக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கப் போகிறது. அதற்கு ஒரு வைர மாலையே வாங்கிவிடலாமே! இனி நீ எதற்குப் பித்தளை அணிய வேண்டும்?'' என்று அவள் முதுகில் தட்டிக் கொடுத்தார். மாயாண்டியின் கைகளில் விலங்கு மாட்டப்பட்டது. எல்லோரும் பானுவைப் பிரமாதமாகப் புகழ்வதைக் கண்ட லலிதாவின் தாயுள்ளம் மகிழ்ச்சிக் கடலில் முழுகியது.



சவாரனும் சைக்கிளும்

வி. ஆர். பாலன்

'ஆகா! ஒரு சைக்கிள் இருந்து விட்டால் இந்தப் பட்டணத்தில் எவ்வளவு உபயோக மாகிறது! ஒரு மணி நேரமாகக் கால் கடுக்க இந்தப் பஸ்ஸுக்காகக் காத்திருக்க வேண்டாம். நினைத்த போது குறித்த சமயத்தில் நாம் எங்கு வேண்டுமானாலும் போய் வரலாம்'—மேலே சொன்னது, எதற்காக என்றால், நான் சமீபத்தில் ஓர் 'இரண்டாவது கை' சைக்கிள் ஒன்றை வாங்கியிருக்கிறேன் என்பதை உங்களுக்குத் தெரிவிக்கவேதான். அதுவும் எப்படித் தெரியுமா? என் அறை நண்பர் கிருஷ்ணமூர்த்தியின் மூலம் மாதம் இருபது ரூபாயாக மூன்று மாதங்களில் கடனைக் கொடுத்து அடைத்துவிட வேண்டும் என்ற நிபந்தனையின்பேரில்தான்.

முதல் மாதமே இருபது ரூபாயைக் கொடுத்துவிட்டு, சைக்கிளை வாங்கிக்கொண்டுவிட்டேன். விற்றவரே என்னிடம், ''சார்! இதில் எந்தவிதமான 'இது'வும் இல்லை. இரண்டு டயர் மட்டும்தான் தேய்ந்துவிட்டது. நீங்கள் எங்கேயாவது கடையில் வாங்கினால் ஒரு டயருக்கு ஆறு ரூபாய் கொடுக்க வேண்டும். உங்ககளுக்குப் போலீஸ் டிபார்ட்மெண்டில் யாரையாவது தெரியுமா?'' என்று கேட்டார்.

முதலில் எனக்குப் புரியவில்லைதான். சைக்கிளுக்கும் போலீசுக்கும் வாங்கும்போதே என்ன சம்பந்தம்? லைட் இல்லாமல் போனால்-அல்லது 'இருவர்' ஏறிச் சென்றால்தானே கான்ஸ்டபிள் முன் பல்லைக் காட்டி நிற்க வேண்டும் என்று எண்ணிய நான், ''தெரியுமாவா? எழும்பூர் ஸ்டேஷன் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் துரைசாமிப்பிள்ளை எங்கள் குடும்ப நண்பராயிற்றே! விஷயம் என்னவென்று சொல்லுங்கள் முதலில்!'' என்றேன்.

தமது வழக்கப்படி அவரும், ''ஒன்றுமில்லை சார். வந்து..'' என்று ஆரம்பித்தபடியே கூறினார். ''வந்து சார். போலீஸ் ஸ்டோரில் சர்க்காரின் நியாய

பையன்: அப்பா, எனக்கும் ஸ்கூலுக்கும் ரொம்பத்தூரம்னு வாத்தியார் சொல்லி விட்டார் இன்னிக்கு!

அப்பா: (கிராமவாசி) அப்படியானு இனிமே வண்டியிலே கொண்டுவந்து விட்டுவிடறேன்னு சொல்லுடா, கண்ணு!

—வெ. அனந்தன்.

விலைப்படியே டயர்கள் சப்ளை செய்கிறார்கள். பாதி விலைதான் ஆகும். உங்களுக்குத் தெரிந்த அந்த இன்ஸ்பெக்டரிடம் கேட்டால் வாங்கிக் கொடுத்து விடுவார்'' என்றார்.

அதுவும் ஒரு வகைக்கு நன்மை தானே! லாபம் வருவதை யார் தான் வேண்டாம் என்று சொல்லுவார்கள்?

மறுநாளே நான் துரைசாமிப் பிள்ளையைப் பார்க்கச் சென்றேன். நல்ல வேளை! அன்று ஞாயிற்றுக் கிழமை ஆகையால் எனக்கும் ஆபீஸ் கிடையாது. அவரும் எங்கும் போகவில்லை. பெங்களூரிலிருந்து புதிதாக வாங்கி வந்திருந்த சடை நாய்க்குட்டியைத் தட்டிக் கொடுத்தபடியே உட்கார்ந்திருந்தவர் என்னைக் கண்டதும், ''அடாடா! குட்டி எழுத்தாளரே! எங்கே இப்படி? ரொம்ப நாட்களாகக் காணோம்?'' என்று சிரித்துக்கொண்டே கூறினார்.

''நமஸ்காரம் சார்! வீட்டிலே எல்லோரும் சௌக்கியமா?'' என்று கேட்டபடியே அவர் சுட்டிக்காட்டிய நாற்காலியில் அமர்ந்தேன்.

''என்ன தம்பி, விஷயம் என்ன?'' என்று கேட்டுக்கொண்டே வாசலைப் பார்த்தார் அவர். என் சைக்கிளைக் கண்டதும், ''ஏது தம்பி, வாங்கினாயா?'' என்று கேட்டுக் கொண்டே இடத்தைவிட்டு எழுந்து சைக்கிள் அருகே சென்று அதைப் பார்த்தார்.

''ஆமாம் சார்! 'சீப்'பாகக் கிடைத்தது. மாதம் இருபது ரூபாயாக மூன்றே மாதத்தில் கொடுக்க வேண்டும். இதற்காகத்தான் உங்களிடம் வந்தேன்!'' என்று சொன்னதும் அவர் பெடலை ஒரு முறை நன்றாகச் சுற்றிப் பார்த்து விட்டுப் பிரேக்கை அழுத்தினார். டக்கென்று நின்றதுமே அவர் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. என்ன இருந்தாலும் போலீஸ் அதிகாரியல்லவா? 'பிரேக்'கும் 'பெல்'லும்தானே முக்கியம்!

''என்ன பணம் வேண்டுமா? எவ்வளவு வேண்டும்? தருகிறேன்..'' என்று சொன்னார்.

''பணம் இல்லை, சார்! இரண்டு டயர் வேண்டும். உங்கள் போலீஸ் ஸ்டோரில் நயமாகக் கிடைக்கிறதாமே'' என்றதும் அவர் சிரித்துக் கொண்டே, ''வண்டியை இங்கேயே விட்டுவிட்டுப் போய்விடு. நான் கான்ஸ்டபிளிடம் சொல்லி இரண்டு டயர் வாங்கிப் போட்டு வைக்கிறேன். நாளைக்குச் சாயந்தரம் வந்து சைக்கிளை எடுத்துப் போ!'' என்றார். ''ரொம்பவும் நன்றி சார்!'' என்று கூறிவிட்டு அவரிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பினேன்.

மறுநாள் எழும்பூருக்குப்போனபோது என் சைக்கிளைப் பார்த்து நானே ஆச்சரியப்பட்டு விட்டேன். டயர்கள் இரண்டும் புத்தம் புதியவை. ஹாண்டில் பாரில் அழகிய சிவப்பு நிறக் கைப்பிடி இரண்டு. ஸீட்டில் பிளாஸ்டிக் கவர் ஒன்று. சைக்கிளும் சுத்தமாகத் துடைத்து வைக்கப்பட்டிருந்தது.

கொஞ்ச நேரத்தில் வீட்டுக்குள்ளிருந்து பிள்ளையும் வந்தார்.

'என்ன சார்! சைக்கிளையே புதிதாக ஆக்கிவிட்டீர்களே! என்னால் உங்களுக்கு வீண் தொல்லைதான்!'' என்று சொல்லிக்கொண்டே எழுந்த என்னைப் பார்த்து, 'எனக்கு இது மாதிரி வேலையிலெல்லாம் கொஞ்சம் ஆசைதான். ரொம்பவும் நல்ல சைக்கிள் தம்பி இது'' என்றபடியே என் முன்னால் உட்கார்ந்தார்.

''இந்தச் சைக்கிளைப் பார்த்ததும் எனக்கு ஒரு சுவாரசியமான விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. சொல்கிறேன் கேள்! வேண்டுமானால் கதையாகவும் எழுதிவிடு!'' என்றபடியே ஆரம்பித்தார்.

உண்மையிலேயே சைக்கிள் ரொம்பவும் அதிருஷ்ட சைக்கிள் தான். எனக்குச் செலவு வைக்காமலேயே தன்னைச் சரிப்படுத்திக் கொண்டுவிட்டது. எதை எழுதுவது என்று யோசித்துக்கொண்டிருந்த எனக்கு ஒரு விஷயமும் கொடுத்துவிட்டது.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கூறியது இதுதான்:

இந்தச் சம்பவம் நடந்து கிட்டத்தட்ட சுமார் ஐந்து வருடங்கள் இருக்கும். அப்போது நான் சப்-இன்ஸ்பெக்டர். பாண்டிச்சேரியிலிருந்து கடிகாரம், பிராந்தி, சவரன் முதலிய சாமான்கள் வரி கட்டாமலேயே திருட்டுத்தனமாக வெளியே கடத்தப்பட்டு வந்தன. போலீஸ் இலாகாவில் எவ்வளவோ முயற்சி செய்தும் சில கேஸ்களை மட்டும்தான் பிடிக்க முடிந்ததே தவிர எல்லாவற்றையுமே பிடிக்க முடியவில்லை—முடியவும் முடியாது என்றே சொல்லலாம். ஆனாலும் பிடிக்க முடியவில்லையே என்பதற்காக யாரும் சுலபத்தில் விட்டுக் கொடுப்பதும் கிடையாது.

சி. ஐ. டி. இலாகாவிலிருந்து இந்தச் சமயத்தில்தான் அந்தச் செய்தி எங்களுக்கு ரகசியமாக வந்தது. அடிக்கடி பாண்டிச்சேரியிலிருந்து தங்க நகைளும் முழு சவரன்களும் வெளியே கட்டணம் கட்டாமல் கொண்டு செல்லப்படுவதாக வந்த அந்தச் செய்தியில் போலீஸ் இலாகாவினரை உன்னிப்புடன் கவனித்து ஒரு மாதத்துக்குள் கண்டுபிடிக்குமாறு கட்டளையும் இடப்பட்டிருந்தது. நான்தான் சப்-இன்ஸ்பெக்டராக இருந்ததால் முழுப் பொறுப்பும் என்னைச் சேர்ந்தது. கான்ஸ்டபிள்களிடம் நான் விஷயத்தைச் சொல்லி, கட்டணம் இல்லாமல் யார் எந்தப் பொருள் கொண்டுசென்றாலும் உடனடியாகக் கைது செய்து அழைத்துவரும்படிச் சொல்லியிருந்தேன். ஏதோ சில சிறு கேஸ்களைத்தான் கான்ஸ்டபிள்கள் கொண்டு வந்தனரே தவிர, சவரன்களை எடுத்துச் செல்வது யார் என்று கண்டுபிடிக்கவில்லை. பாக்கு மூட்டை எடுத்துச் சென்றவரும் - திருட்டுத்தனமாக விஸ்கி பாட்டிலை ஒளித்துச் சென்றவரும்தான் திரும்பத் திரும்ப அகப்பட்டுக்கொண்டனரே தவிர நாங்கள் தேடும் ஆசாமி கிடைக்கவில்லை.

பதினைந்து நாட்களும் ஆகிவிட்டன. அந்தச் சமயத்தில்தான் எனக்கு இந்த யோசனை தோன்றியது. ''நிச்சயமாக சவரனை அமுத்திச் செல்லும் ஆசாமி வெளியூர்க்காரன் அல்ல. பாண்டிச்சேரியைச் சேர்ந்தவனாக இருக்கவேண்டும். அதுவும் அடிக்கடி காரிய நிமித்தம் வெளியூருக்கு ஊரைவிட்டே தினமும் செல்பவனாயிருக்க வேண்டும்!''—என்று நான் எண்ணியபடியே மறுநாள் முதல் இந்த வழியில் இறங்கினேன். தினமும் காலையில் ஏழு மணிக்கே படுக்கையிலிருந்து எழுந்து, சுங்க வரி காரியாலயத்துக்கு மாற்றுடையில் சென்று உட்கார்ந்து விடுவேன். அங்கேயிருப்பவர்களுக்கு என்னை நன்கு தெரியுமாதலால் அந்த வழியே வெளியூர் செல்லும் ஆட்களை ரகசியமாகக் காரியாலயத்துக்குள்ளிருந்தபடியே கண்காணிக்க வசதி ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்கள்.

எண்ணி மூன்று நாட்கள்—இரவு பகல் அங்கேயே உட்கார்ந்து நடப்பவைகளைக் கவனித்து வந்தேன். சாப்பாடு, டிபன், காபி எல்லாவற்றையும் இங்கேயே வரவழைத்துக் கொண்

''ஏன் சார், நான் சின்னப் பையனு உங்ககிட்டே படிச்ச போது நிறைய வீட்டுக் கணக்கு கொடுப்பீங்களே; இப்ப ஏன் என் பையனுக்கு ஒண்ணும் கொடுக்கிறதில்லே?''

''நீ கணக்கிலே மக்குன்னு எனக்குத் தெரியும். நீ உன் பையனுக்கு வீட்டில் போட்டுக் கொடுத்தனுப்பினு எல்லாம் தப்பாத்தானே இருக்கும்!''

டேன். அந்த மூன்று நாட்களிலும் எத்தனையோ மனிதர்கள் - காரிலும் - சைக்கிளிலும் - நடந்தும் பஸ்ஸிலும் வெளியே சென்றனர். வெளியிலிருந்து உள்ளேயும் வந்தனர். சுங்க வரி பரிசோதகர்களும் எல்லோரையும் வழக்கம்போல் சோதித்தே வெளியே அனுப்பினுர்கள். ஆனுல் நான் தேடும் குற்றவாளிதான் கிடைக்கவில்லையே!

நாலாவது நாள் வீட்டுக்கு வந்து 'கட்டணவரி காரியாலயத்திலே' நான் கண்டவைகளையெல்லாம் நினைவுபடுத்திக்கொண்டு என் அறையிலே அமர்ந்திருந்தேன். என் மூத்த மகன் பாஸ்கரன் தன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டே வந்தவன் என்னைப் பார்த்துவிட்டு மிரண்டான். அவன் மிரளும் போதே எனக்கு விஷயம் புரிந்து விட்டது. பயலுக்கு எந்த விதமான ஆபத்தும் கிடையாது—சைக்கிள் தன் எந்தப் பாகத்தையாவது இந்த முரடனின் கடினமான சவாரியில் பறி கொடுத்திருக்கும். நல்ல வேளை! நான் எண்ணியது போல எதுவும் ஆகவில்லை. ஆனுல் பின் சக்கரம் 'பஞ்ச்ச'ராகி விட்டதோடு நின்று விட்டிருந்தது. அன்றைக்கு!

உனக்குத்தான் தெரியுமே பிறரைப் போல நான் நாசுக்காக இருக்கமாட்டேன் என்று. எதையுமே நானே—என் கையாலேயே செய்தால்தான் எனக்குத் திருப்தி. புதிய வேலை ஒன்றைத் தெரிந்து கொள்வதோடு மூளையும் நல்ல முறையில் செலவாகிறது! என் பிள்ளைகளையும் தனக்கு வேண்டியதைக் கூடியவரையில் பிறர் உதவி இல்லாமல் தானே செய்துகொள்ளும்படியாகத்தான் நான் பழக்கி வைத்திருந்தேன். மேலும் அன்று முழுவதும் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்ததால் கொஞ்ச நேரம் வெளியே சைக்கிளில் சென்றுவிட்டு வரலாம் என்று எண்ணினேன்.

பாஸ்கரன் உதவியோடு சக்கரத்தைக் கழற்றி 'பஞ்ச்சரை'ப் பார்த்தேன் - பத்தே நிமிஷத்துக்குள். இயந்திர சம்பந்தமான எந்த வேலையாயிருந்தாலும் கூடிய வரையில் எனக்குத் தெரிந்தே தான் இருக்கும். கொஞ்ச நேரத்தில் சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே சென்றேன். ஊருக்கு ஒதுப்புறமான வழியே சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நான் தற்செயலாக இடது கையைக் கவனித்தபோது மோதிரத்தைக் காணவில்லை. அரை சவரன்தான் என்ருலும் அந்த விநாடி எனக்குத் திகைப்புடன் கவலையாகவும் இருந்தது.

அறைக்குள் அமர்ந்திருந்த போதுகூட கையிலே இருந்த மோதிரம் இந்த அரை மணி நேரத்தில் எங்கே போயிருக்கும்? உடனே வீடு திரும்பி சைக்கிள் பஞ்ச்சர்

செய்த இடமெல்லாம் தேடிய போதும் மோதிரம் கிடைக்க வில்லை. என் மனைவியோ வழியில் எங்கேயாவது நழுவிக் கழன்று விழுந்திருக்கும் என்று கூறினாள். ஆனால் அந்தச் சமயம் பாஸ்கரன் இந்த அருமையான யோசனையை வெளியிடாமல் இருந்திருந்தால்..

''சைக்கிள் பஞ்சர் போடும் போது ஒரு சமயம் மோதிரம் கழன்று போய் டயருக்குள்ளேயே விழுந்திருக்கப் போகிறது! பாருங்கள்!'' என்றான் பாஸ்கரன். முதலில் நானே இதை மறுத்தாலும் ஒரு வேளை ஏன் இருக்கக் கூடாது என்று சைக்கிள் காற்றை இறக்கிப் பிரித்துப் பார்த்தபோது மோதிரம் அதற்குள் நசுங்கிக் கிடக்கத்தான் செய்தது.

மறு விநாடியே என் மூளை 'துறு துறு' வென்று வேலை செய்தது.



சுத்த மோசம்!

டியுடோரியல் காலேஜ் பிரின்ஸிபால்: சே! சே! சுத்த மோசம், சார்! சர்க்கார் பரீட்சை ரிஸல்ட் எல்லாம் அறுபது பர்சண்டுக்கு மேலே பாஸ் போட்டு விட்டாங்களே இந்த வருஷம்!!

—வெ. அனந்தன்.

வேகமாகக் 'கட்டண வரி' காரியாலயத்துக்கு ஓடினேன். சென்ற மூன்று நாட்களாக நான் தினமும் கண்காணித்து வந்தபோது மாலை ஆறு மணிக்கு ஒரு கார் வெளியே செல்லும். மறுநாளுக்கு மறுநாள் காலை பாண்டிச்சேரிக்கு மீண்டும் வரும். அந்தக் கார் அவ்வூரில் இருந்த பெரிய பணக்காரருடையது. அவருக்கு விழுப்புரத்திலே ஒரு வீடும் - பாண்டிச்சேரியிலே ஒரு வீடும் இருந்தன. இரண்டு மனைவிகள் இருந்ததாலும் வியாபாரம் செய்வதாலும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் காரில் வந்து போவார்.

''நான் நினைத்தபடியேதான் நடந்திருக்கிறது. நான் என்ன நினைத்தேன் - என்ன நடந்திருக்க முடியும் என்று நீ சொல்லு பார்க்கலாம். இப்போதில்லாவிட்டாலும் நாளைக்கு யோசித்து வந்து சொல்லு!''—என்று பிள்ளை சொன்னபோது எனக்கு எப்படி இருந்திருக்கும்!

ஒப்புக்காக நானும் யோசனை செய்வது போல் சற்று நேரம் பாவித்தேன்.

''தெரியவில்லையா? நீதான் கதை எழுதுபவனுயிற்றே! யோசித்துப் பாரேன்!'' என்று சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டார்.

''சரி சார்! யோசித்துப் பார்த்து நாளை மாலை வருகிறேன்!'' - என்று ஏமாற்றத்தோடு திரும்பியபோது - பிள்ளையே சிரித்துக் கொண்டே 'வா! தம்பி' சும்மா வேடிக்கையாக இப்படிச் சொன்னேன்'' என்ற போதிலும் ஆவலோடு மீண்டும் கதை கேட்க அமர்ந்தேன்;

''தினமும் போலவே பச்சைக் கார் வந்தபோது அதை மேலோடு பரிசோதித்துவிட்டு வெளியே செல்ல அநுமதி அளித்தனர் சுங்க அதிகாரிகள். வண்டி புறப்பட்ட போது என் ரிவால்வரை எடுத்து டயரை நோக்கி ஒருமுறை சுட்டேன். கார் அப்படியே உட்கார்ந்து கொண்டு விட்டது. ஆனல் என்ன ஆச்சரியம்! குண்டு பாய்ந்த டயருக்குள்ளிருந்து முழு சவரன்கள் கீழே விழுந்தன. சுங்க அதிகாரிகள் திகைத்து நின்ற போதே நான் அந்தப் பணக்காரரைக் கைது செய்தேன். மற்ற டயர்களையும் சோதனை போட்ட போது அவைகளிலும் சவரன்களும், தங்கச் சங்கிலிகளும் இருந்தன. எனக்கும் சர்க்கிள் ஆகப் பதவி உயர்ந்தது. எல்லாவற்றுக்கும் பாஸ்கரனின் சைக்கிள் தானே காரணம்?'' என்று கதையை முடித்தார் பிள்ளை.

நானும் 'ஆமாம்' போட்டுக் கொண்டு எழுந்தேன். விடை பெற்றுக்கொண்டு என் சைக்கிளில் ஏறிப் 'பெடலை' வேகமாக அழுத்தினேன். 'சைக்கிளும் - சவரனும்' என் நினைவிலே தோன்றி எழுத்துக்களாக உருண்டன.

கவி கேதாரி

கேதாரி சிறுவயசிலேயே கவிதை கட்டுவான். பள்ளிக்கூடத்தின் ஆண்டு மலரில் அவை வெளியாகும்போது அவனுக்குத்தான் எவ்வளவு மகிழ்ச்சி!

அவனுடைய துரதிருஷ்டம், பாவம், அவன் எஸ்.எஸ்.எல்.ஸி., தேறினதும் அவன் அப்பா இறந்துவிட்டார். கிராமத்தில் இருந்த கொஞ்சநஞ்சம் நிலபுலன்களை விற்று அவனும் அவன் தாயும் பட்டணத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அவனுடைய அக்காள் புருஷன் வீட்டில் தங்கியிருந்தார்கள். தாயார் வந்தது பெண்ணுக்குச் சௌகரியமாகத்தான் இருந்தது. இருந்தாலும், கையில் இருந்த தொகையிலிருந்து தனக்கும் தன் மகனுக்கும் ஆகும் செலவைப் போட்டுக்கொண்டுதான் கேதாரியின் தாயார் அங்கே இருந்து வந்தாள். மகனுக்கு எங்கேயாவது ஓர் இடத்தில் வேலை கிடைத்துவிட்டால்தான் அவளுக்கு நிம்மதி ஏற்படும் போல் இருந்தது. மருமகனுடைய ஆதரவில் இருப்பதாக நாலுபேர் சொல்வது அவளுக்குத் தலை இறக்கமாக இருந்தது.

ஆனால் பட்டணம் வந்ததும் கேதாரிக்குப் பத்திரிகை மோகம் பிடித்துக்கொண்டது. தன் கவிதைகளில் ஒன்றாவது பத்திரிகைகளில் வெளியாக வேண்டும் என்று தலைகீழாக நின்றான். இன்று ஒரு பத்திரிகை, நாளை ஒரு பத்திரிகை, அதற்கு மறுநாள் ஒரு பத்திரிகை என்று தினம் தவறாமல் தன் கவிதைகளை அனுப்புவான்; திரும்பி வரத் தபால் செலவுக்குரிய ஸ்டாம்புகளும் உள்ளே ஒட்டியிருப்பான். மூன்றாம் நாள் பார்க்கவேண்டும்: முதலில் அனுப்பிய கவிதை வீட்டுக்குத் திரும்பி வந்து சேரும்; இப்படியே அடுத்தடுத்து அனுப்பிய கவிதைகளும் இரண்டு மூன்று நாட்களுக்குள் அவனிடமே வந்துவிடும்.

''அப்பா எனக்கு ஒரு மணி பர்ஸ் வாங்கிக்கொடு, அப்பா!''

''கையிலே காசு இல்லாமெ உனக்கு எதுக்குடா மணி பர்ஸ்?''

''போ அப்பா, நீ மாத்திரம் எப்பவும் காசு இல்லாமெ ஒண்ணு வச்சிக்கலையாக்கும்!''

கேதாரிக்கு அப்போது ஒரு யோசனை தோன்றியது. 'நாம் ஒரு புத்தகத்தின் ஆசிரியராக இராததால்தான் யாரும் நம்மை மதிப்பதில்லை. 32 பக்கத்துக்குள் சின்னப் பாடல் தொகுதி ஒன்று வெளியிடலாம். அதைப் பத்திரிகைகளுக்கு மதிப்புரைக்காக அனுப்பி வைக்கலாம் என்று தீர்மானித்தான். தாயாரிடம் இதைச் சொல்லி அச்சிடும் செலவுக்குப் பணம் கேட்டால் அவள் கொடுக்க மாட்டாள் என்று அவனுக்குத் தெரியும். ஆகவே, ''சுருக்கெழுத்தும் டைப் அடிக்கவும் கற்றுக் கொள்கிறேன், அம்மா! இந்தக் காலத்தில் வெறும் எஸ். எஸ். எல். ஸி., படித்த பையனுக்கு யார் உடனே வேலை தரக் காத்துக்கொண் டிருக்கிறார்கள்? டைப்பாவது அடிக்கக் கற்றுக் கொண்டு பரீட்சையில் தேறினல் எங்காவது வேலை நிச்சயமாகக் கிடைக்கும்'' என்றான்.

தாயாரும் எப்படியாவது மகன் முன்னுக்கு வரவேண்டும் என்று அவனுக்கு மாத மாதம் ஐந்தைந்து ரூபாய் கொடுத்து வந்தாள். கேதாரியோ டைப் அடிக்க வெளியே போவதுபோல் போய் வந்தான். மூன்று மாதத்துக்கெல்லாம் எப்படியோ ஓர் அச்சு ஆபீஸில் போய்ச் சிறிய அளவில் 32 பக்கத்துக்குத் தன் 'கவிதை'களை அச்சடித்துக் கொண்டு வந்துவிட்டான். தன் 'கவிதைத் தொகுதி'யின் பிரதிகளை எல்லாப் பத்திரிகைகளுக்கும் மதிப்புரைக்கு அனுப்பினன். ஆனல் எந்தப் பத்திரிகையிலும் அதைப்பற்றி ஒரு வரிகூட மதிப்புரையோ குறிப்போ வெளிவரவில்லை.

ஒரே ஒரு வாசகன் மட்டும் கேதாரியின் கவிதையை வெகு ஆவலோடு கேட்பான்: அவனுடைய மருமான்தான்; அக்காளுடைய ஆறு வயசு மகன். இந்தச் சிறுவன் அப்போதுதான் எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்றுக்கொண் டிருந்தான். மாமா தன் புத்தகத்தை இவனிடம் கொடுத்தான். அதில் மாமாவின் பெயரை எழுத்துக் கூட்டி, ''கே-தா-ரி கேதாரி'' என்று படித்து ஆச்சரியத்தோடு மாமன் முகத்தைப் பார்த்தான் பையன். மாமாவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

அந்த உற்சாகத்தில் கேதாரி 'சிவாஜி' என்று ஒரு நாடகம் எழுதினன். அதை நண்பர்களிடம் காட்டினன். அவர்கள், ''பேஷ், பேஷ்!'' என்று அவனை உற்சாகப் படுத்தி, ''நாடகத்தை மேடையில் நடித்துக் காட்ட ஏற்பாடு செய்யலாம்'' என்று சொன்னர்கள். அவனுக்குப் பழக்கமான ஓட்டல் சொந்தக்காரனுடைய மகன் ஒருவன், ''நான் என் அப்பாவிடம் சொல்லி அதற்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்ருன்.

சொர்க்கமே கைக்கு எட்டி விட்டது போல் இருந்தது கேதாரிக்கு. மறுநாள் ஓட்டல்காரன் மகன் அவனிடம் வந்து, ''கேதாரி! நம் காரியம் பழந்தான். அப்பாவிடம் சொல்லிவிட்டேன். நாளையிலிருந்து நம் நண்பர்களை ஈடன் தோட்டத்துக்கு வரச் சொல்லு. அவரவர்களுக்குரிய வேஷப் பொருத்தம்

பார்த்துச் சம்பாஷணைகளைக் கற்றுக் கொடுக்கலாம்'' என்றான்.

நாலு நாள் நண்பர்கள் ஈடன் தோட்டத்தில் தங்கள் தங்கள் பேச்சின் பகுதியை உருப் போட்டார்கள்; கையையும் காலையும், ஆட்டினார்கள். ஐந்தாம் நாள் ஓட்டல்காரன் மகன், ''உடைகளுக்கு முன்பணம் வேண்டியிருக்கிறது. ஒரு வாரத்துக்கு முன்னாலேயே கொடுத்து வைத்தால்தான் சமயத்தில் கிடைக்கும். இருபது ரூபாய் அவசியம் வேண்டும், கேதாரி! இல்லாவிட்டால் நாடகத் தேதியை ஒத்திப் போடவேண்டியதுதான்'' என்றான்.

டைப் அடிக்கக் கற்றுக்கொள்வதாகத் தாயாரிடமிருந்து சேர்த்த ரூபாயில் இருபது இன்னும் கேதாரியிடம் இருந்தது. அவன் முதலில் சற்றுத் தயங்கினான்; ஆனால், 'நாடகம் நடக்காமம் போய்விடுமோ' என்று எண்ணிக் கையில் இருந்த ரூபாயை ஓட்டல்காரன் மகனிடம் கொடுத்தான். மறுநாள் ஈடன் தோட்டத்தில் மற்ற எல்லாப் பையன்களும் வந்திருந்தார்கள்; ஓட்டல்காரன் மகனைமட்டும் காணவில்லை. ஓட்டலில் போய் விசாரித்ததில் ஓட்டல்காரப் பையன் தன் வீட்டிலிருந்தேகூட நூறு ரூபாய் எடுத்துக்கொண்டு எங்கோ ஓடிவிட்டான் என்று தெரிந்தது. அப்போதுதான், தான் ஏமாந்துவிட்டது கேதாரிக்குப் புரிந்தது.

அவன் முகம் தொங்கி நேரங் கழித்து வீடு திரும்பினான். தாயார் கவலையுடன் அவனுக்காகக் காத்திருந்தாள். பையன் சோர்வுற்றிருப்பதைப் பார்த்து, 'பாவம், வேலை ஆகவில்லை என்று இவனுக்குக் கவலைபோல் இருக்கிறது!' என்று எண்ணி அவனைக் கடிந்து கொள்ளாமல் இருந்துவிட்டாள்.

அன்று இரவு கேதாரி தன் அறையில் நுழையும்போது தன் மேஜையருகில் மருமான் ஏதோ செய்துகொண்டிருப்பதைப் பார்த்தான். ஓசைப்படாமல் அருகில் வந்து பார்த்தான். ஒரு தட்டில் கறுப்பு மை குழைத்து வைத்திருந்தது. நாலைந்து அச்சு எழுத்துக்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி அந்த மையில் ஒற்றிக்கொண்டு கேதாரியின் கவிதைக் கட்டிலிருந்து ஒவ்வொரு புஸ்தகமாக எடுத்தான் மருமான்; ஒவ்வொன்றிலும் கேதாரியின் பெயருக்குக் கீழ் அச்செழுத்துக்களை அழுத்தினான். முதலில் கேதாரி கோபத்தோடு மருமானுடைய முதுகில் அறையக் கையை ஓங்கினான். ஆனால் உடனே மருமான் பெயர் அச்செழுத்தில் இருப்பதைப் பார்த்தான். அப்படியே யோசனையில் ஆழ்ந்துவிட்டான். அவன் முகத்தில் ஓர் அசட்டுச் சிரிப்புத் தோன்றியது. 'நம் பெயரைப் போட்டுக்கொள்வதும் ஒன்றுதான்; இந்தக் குழந்தையின் பெயர் இதில் இருப்பதும் ஒன்றுதான். ஏனோ பொழுதையெல்லாம் இப்படி வீணாக்கினோம்' என்று அவனுக்கே பட்டது.

லேசாக மருமானைத் தட்டிக் கொடுத்தான். பையன் திடுக்கிட்டுத் திரும்பினான். மாமா சிரிக்கவே மருமானும் உற்சாகத்தோடு, ''மாமா! மாமா! பார்த்தாயா? நான்கூட உன்னோடு சேர்ந்து இந்தப் புஸ்தகத்தை எழுதியிருக்கிறேன், தெரிந்ததா! எனக்குத்தான் இதெல்லாம் சொந்தம்'' என்றான் பெருமையோடு.

கேதாரிக்குத் தன் மடமையை எண்ணி அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. அவன், ''சரி; சரி! நீயே எடுத்துக்கொள், இந்தப் புஸ்தகத்தையெல்லாம்!'' என்று முகத்தில் அசடு வழியச் சொல்லிப் பெருமூச்சு விட்டான். இதுவரை அம்மாவை ஏமாற்றி வந்தது அவன் மனசையே உறுத்தியது.

அதே சமயம் அவன் அத்திம்பேர், ''கேதாரி!'' என்று கூப்பிட்டுக்கொண்டு அங்கே வந்தார்; ''எங்கள் ஜவுளிக் கடையில் ஒரு குமாஸ்தா தேவை. இப்போது 30 ரூபாய்தான் கிடைக்கும். ஆறு மாசம் போனால் 50 ரூபாய் போடுவார்கள்!'' என்றார்.

''சரி'' என்று தலையாட்டினான் கேதாரி. கவிதை, கற்பனை, நாடகம் எல்லாவற்றையும் மூட்டை கட்டி வைத்துவிட்டான்.

பலே நடிகர்!

'புதன்கிழமை காலை பதினொரு மணிக்கு எமது காரியாலயத்தில் ஆஜராகி, டைரக்டர் ராமாநுஜத்தை நேரில் பேட்டி காண வேண்டியது. தேவையான நற்சாட்சிப் பத்திரங்கள், அத்தாட்சிகளுடன் வரவும். தகுதியான நபர், நடிகராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்' என்ற அறிக்கை தெரிய வந்தது.

அதன்படி நன்றாக 'டிரஸ்' செய்து கொண்டபின், சில குறிப்பிட்ட வாழ்த்துரைகள், மெடல்கள், நற்சாட்சிகள், புகைப்படங்கள் சகிதம் பேட்டிக்குப் புறப்பட்டார் நடிகர் சிங்காரவேலு.

* * *

அவர் போன சமயம் ஏற்கனவே ஏழெட்டுப் பேர்கள் வந்து டைரக்டரின் பேட்டிக்காகக் காத்திருந்தார்கள். அறையின் முன்னால் போடப்பட்டிருந்த நீண்ட பெஞ்சியில் அவரும் வரிசையில் அமர்ந்தார்.

* * *

"நீர் தேவையில்லை; போகலாம்!'' என்ற குரல் உள்ளேயிருந்து லேசாகக் கேட்டது. அடுத்த கணம் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு வெளியே வந்தார் ஒரு நடிகர்.

அப்போது நடிகர் சிங்காரவேலுவுக்கு அடுத்த இடத்தில் புதிதாக ஓர் ஆசாமி வந்து அமர்ந்தான். பார்த்தால் சாதாரணப் பேர்வழியாக இருந்தானே ஒழிய, ஜன்மத்திலும் நடிகனாக இருந்திருப்பதற்கு அறிகுறியே காணோம். கையிலே சுருட்டி வைத்திருந்த இரண்டு பழைய பத்திரிகைக் காகிதங்களைத் தவிர வேறொன்றும் அவன் வசம் இல்லை.

சிங்காரவேலு அவனை ஒரு முறை அலட்சியமாகப் பார்த்துவிட்டு மறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டார்!

* * *

ஆபீஸ் பையன் ஒவ்வொருவராகக் கூப்பிட்டு உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தான். ஆறேழு பேர்கள் பேட்டி முடிந்தது. என்ன ஏமாற்றம்! அதுவரை போன அத்தனை பேரும் தகுதியற்றவர் எனத் தீர்மானிக்கப்பட்டார்கள்.

இத்தனைக்கும் அவர்களில் வசீகரமான தோற்றமுடைய இளம் நடிகர்கள் சிலர் இருந்தார்கள். பட்டதாரிகளாகவும், செல்வந்தர்

குடும்பத்துப் பிள்ளைகளாகவும், ஷோக் பேர்வழிகளாகவும் காணப்பட்ட அமெச்சூர் நடிகர்களும் இருந்தார்கள். எத்தனை எத்தனையோ நாடகங்களில் பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுகளைப் பெற்ற நடிக மன்னர்கள்கூட இரண்டொருவர் தென்பட்டார்கள். சிலர் கொண்டுவந்திருந்த கணக்கு வழக்கில்லாத தங்கமெடல்கள், ஷீல்டுகள், மதிப்புரைகள் ஒன்றுமே அதுசமயம் உபயோகப்படவில்லை என்பது ஆச்சரியம்தான்! எல்லாரும் 'தேவையில்லை' என்ற ஒரே பல்லவியுடன் திருப்பி அனுப்பப் பட்டார்கள்.

நடிகர் சிங்காரவேலு போக வேண்டிய முறையும் வந்தது. 'தேர்ந்தெடுக்கப்படுவோம்' என்ற நம்பிக்கை குறைந்து இருந்தாலும் உள்ளே போனார்.

டைரக்டர் என்னவெல்லாமோ கேள்விகள் கேட்டார். ''உமது நடிப்புத் திறமையைச் சரியானபடி வெளிப்படுத்திய ஒரு சந்தர்ப்பத்தை விளக்கும்'' என்றார்.

''ஒரு சந்தர்ப்பந்தானா? எத்தனையோ சொல்லலாமே'' என்று நினைத்துக்கொண்ட சிங்காரவேலு, ஒரு சம்பவத்தை எடுத்துச்சொல்ல ஆரம்பித்தார். பாதி சொல்லிக்கொண்டிருக்கும்போதே டைரக்டர், ''சரி, போதும்; நீர் போகலாம்'' என்று வெளியே அனுப்பி விட்டார்.

கடைசியாக எஞ்சியிருந்த அந்த ஒரே ஒரு பேர்வழியும் அழைக்கப் பட்டான். மற்றவர்கள் கதியே அப்படியாகிவிட்டபோது, இவனைப் பற்றிக் கேட்கவேண்டுமா? டைரக்டர் பார்த்த மாத்திரத்தில் திருப்பிவிடுவார் என்பதில் சந்தேகம் என்ன?

இப்படி நினைத்தபோதிலும் நடிகர் சிங்காரவேலு மற்றவர்களைப் போல் உடனே வெளியே சென்று விடவில்லை. அவனுடைய முடிவும் என்ன ஆகிறது என்று தெரிந்து கொண்டு போகக் காத்திருந்தார்.

அவர் எண்ணியதற்கு மாறாக, சுமார் முப்பது நிமிஷங்களுக்குப்

''என்னடா கையிலே கட்டு!''

''கோவில்லே சுண்டல் கொடுத்தப்போ இரண்டாம் தரம் கையை நீட்டினேன், கரண்டியாலே ஒரு போடு போட்டுட்டாங்க!''

பிறகே அந்த மனிதன் வெளியே வந்தான். பிரகாசமான முகத்துடன் வெற்றி நடை நடந்து வந்தான்!

நடிகர் சிங்காரவேலுவுக்கு ஒன்றுமே புரியவில்லை. ''என்ன ஐயா விசேஷம்? என்ன ஆயிற்று?'' என்று அவனிடம் விசாரித்தார்.

''முதல் தேதியன்று வரச் சொல்லியிருக்கிறார். அன்றைக்கே ஒப்பந்தம் எழுதவேண்டுமாம்'' என்றான் அவன்.

சிங்காரவேலுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது!

''அப்படியா சமாசாரம்? எதைக் கொண்டு உன்னைத் தெரிந்தெடுத்தாராம்?'' சும்மா சாதாரணமாகத்தான் இதைக் கேட்டார் அந்த ஆளிடம்.

அவன் இதற்குப் பதிலே சொல்லாமல் தன் கையிலிருந்த பத்திரிகைச் சுருளை விரித்து, அதில் கீழ்க்கண்ட செய்தி இருந்த இடத்தைச் சுட்டிக் காட்டினான்:-

ஏஜண்டாக நடித்தவர்!

ரெயில் வாகன்களில் சரக்கு அனுப்பும் வியாபாரியின் பிரதிநிதி (ஏஜெண்டு) என்று தன்னைக் கூறிக்கொண்ட ஒரு பேர்வழி,

ஐந்து வர்த்தகர்களிடம் பேரம் பேசி, தலா ரூபாய் இருநூறு வீதம் ஆயிரம் ரூபாய்வரை அட்வான்ஸ் பெற்றுக்கொண்டு கம்பி நீட்டிய செய்தி கிடைத்திருக்கிறது. போலீஸார் புலன் விசாரணை செய்கிருர்கள். (ந. நி.)

* * *

இன்னென்றில் காணப்பட்ட செய்தி:-

ஸி. ஐ. டி. போல் நடிப்பு! ரூபாய் ஐந்நூறு அபேஸ்! ஆசாமி பிடிபட வில்லே!

இரகசியப் போலீஸ் அதிகாரியாகத் தன்னைக் கூறிக்கொண்ட ஒரு நபர், இன்று நகரில் ஒரு முதலாளியைப் பயமுறுத்தி ஐந்நூறு ரூபாய் வாங்கிக்கொண்டு மறைந்து விட்டதாகத் தெரிகிறது.

இதையெல்லாம் வாசித்துவிட்டு, அந்தப் பழைய பத்திரிகைத் தாள்களைத் திருப்பிக் கொடுத்த நடிகர் சிங்காரவேலு, ''ஆமாம்; இதெல்லாம் என்ன ஐயா?'' என்று கேட்டார் ஒன்றும் விளங்காதவராக.

அதற்கு அவன் சுருக்கமாக அளித்த பதில் இதுதான்: ''இவை தான் என்னுடைய அத்தாட்சிப்

சிங்காரவேலுக்கு ஒன்றும் புரியவில்லே.

ஊரெங்கும் இதே பேச்சாக இருக்கிறது. பேர்வழி பிடிபட வில்லே.

சில தினங்களுக்குமுன் போலி வியாபாரியாக வந்து ஏமாற்றியவனும் இப்பொழுது போலீஸ் அதிகாரியாக வந்தவனும் ஒரே நபர்தான் என்றும், அது—சென்ட்ரல் ஜெயிலிலிருந்து சென்ற மாதம் தப்பியோடிய பழைய கேடி கந்தப்பனக இருக்கலாமென்றும் கூறப்படுகிறது. போலீஸார் தீவிரமாகப் புலன் விசாரணை செய்கிருர்கள். (ந. நி.)

பத்திரங்கள்! அது நான்தான்!''

* * *

ஐந்தாவது நிமிஷம் பஸ் ஸ்டாப்பில் நின்றுகொண்டிருந்த நடிகர் சிங்காரவேலு ஜிப்பா பாக்கெட்டில் கைவிட்டுப் பார்த்தபோது 'பகீர்' என்றது அவருக்கு! காரணம்?

மணிபர்ஸைக் காணும்!

சினத்தால் சீறினர் சிங்காரவேலு. அவர் வாய் நடிகர் கந்தப்பனைக் கடும் சொற்களால் அர்ச்சனை செய்யத் தொடங்கியது!

புது வியாபாரம்

"நடஜி"

வகுப்பு அறை 'கலகல'வென்று இருந்தது. ஆங்கில ஆசிரியர் கையை அமர்த்திவிட்டு ஆரம்பித்தார் கதையை.

கிட்டத்தட்ட பத்து வருஷங்களுக்கு முன்னால் உல்லாசப் பிரயாணம் கிளம்பினோம். நான்தான் மாணவர்களை அழைத்துச் செல்வதென்று ஏற்பாடு. முதலில் பாண்டிச்சேரி போய்விட்டு அங்கிருந்து செஞ்சிக்கோட்டை; திருவண்ணாமலை முதலிய இடங்களுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தோம். இந்தியாவுக்குச் சுதந்தரம் வந்த புதிது. பாண்டிச்சேரியில் பிரஞ்சு ராஜ்யம் கெடுபிடியாக நடந்துகொண்டிருந்தது.

பாண்டியில் முன்பே ஏற்பாடு செய்திருந்தபடி ஒரு பள்ளியில் தங்கினோம். அன்று ஊரெல்லாம் சுற்றினோம். மறுநாள் மீதமுள்ள இடங்களைப் பார்த்துவிட்டுக் கிளம்புவது என்று ஏற்பாடு.

மறுநாள் காலை எல்லோரையும் அழைத்துக்கொண்டு 'சுக்கிர பவன்' ஹோட்டலுக்குச் சென்றேன். பையன்களை எல்லாம் சாப்பிடச் செய்து அவர்களை அனுப்பிய பின் நான் சாப்பிட உட்கார்ந்தேன்.

என் பக்கத்தில் ஒரு வாட்டசாட்டமான ஆள் உட்கார்ந்திருந்தான். அவன் மீசை அவன் பயங்கரத் தோற்றத்தை அதிகப்படுத்தியது. அவன் என்னையே உற்றுக் கவனிப்பதுபோல் எனக்குத் தோன்றியது.

நான் ஒன்றையும் கவனிக்காதவன் போல் சாப்பிட்டுவிட்டு எழுந்தபோது 'சடக்'கென்று எழுந்து என் பக்கத்தில் வந்து நின்றுகொண்டான் அவன். ஒரு கணம் திடுக்கிட்டுவிட்டேன். நான் சமாளித்துக்கொள்வதற்குள் என் அருகே முகத்தைக் குனிந்துகொண்டான். "786 டூப்ளே தெரு, இரவு 9 மணி....மறந்துவிடாதே; தவறாமல் வந்து சேர்" என்று கூறிவிட்டு மறுபடி போய் உட்கார்ந்துகொண்டான். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

"ஆளோ பயங்கரமாக இருக்கிறான். யாரென்றே புரியவில்லை. இவன் என்னடா என்றால் ஒரு விலாசத்தைச் சொல்லி, 'வா' என்கிறானே! இவன் யார்? எதற்காக நம்மை வரச் சொல்லவேண்டும்?" என்று குழம்பினேன்!

அங்கு போய் ஏதாவது ஆபத்தில் மாட்டிக்கொண்டால் என்னை நம்பி வந்திருக்கும் பையன்களின் கதி!

யோசித்துக்கொண்டே பத்தடி கூட நடந்திருக்கமாட்டேன். என் தோளின் மேல் யாரோ கையை வைத்தார்கள். யார் அது என்று

நின்று திரும்பிப் பார்த்தேன். வாட்ட சாட்டமான ஆள். அரும்பு மீசை வைத்துக்கொண்டிருந்தான். 'பாண்ட், கோட்' அணிந்து கொண்டு ஏதோ ஆபீசர் போல் இருந்தான்.

''ஹோட்டலில் யாரிடம் பேசிக் கொண்டிருந்தீர்?'' என்ருன் அவன்.

''யாரோ எனக்குத் தெரியாது. நீர் யார்....?'' என்றேன் நான்.

''நானு? ஸி. ஐ.டி. ஆபீஸர்..''

''ஓகோ..'' என்றேன் நான்.

''அவன் உம்மைத் தெரியாமலா உம்மிடம் பேசினுன்?''

''ஆமாம்...''

அந்தச் சமயம் பக்கத்தில் போன ஒரு சைக்கிள் ரிக்ஷாவைக் கூப்பிட்டான் அவன்.

''இதில் ஏறிக் கொள்ளும். ஸ்டேஷனுக்குப் போவோம். தகராறு செய்தால் கூட்டம் கூடிவிடும்....ம்...'' என்ருன்.

இனம் தெரியாமல் புது ஊரில் வந்து ஏதோ ஆபத்தில் சிக்கிக்

கொண்டு விட்டோமே என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியவாறு வண்டியில் ஏறினேன்.

''அந்த வெடிகுண்டு வேலப்பன் என்ன சொன்னான் உம்மிடம்?'' என்றான் அந்த ஸி.ஐ.டி. வண்டி போய்க்கொண்டே இருந்தது.

''அவன் என்னை வேறு யாரோ என்று தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறான். ஒரு விலாசத்தைச் சொல்லி 'அங்கே 9 மணிக்கு வா' என்று சொன்னான். அவனை யாரென்றே எனக்குத் தெரியாது. நான் ஊருக்கே புதிது.''

''என்னையா ஏமாற்றுகிறீர்?''

''இல்லை ஐயா, நிஜம்தான். நான் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர். பிள்ளைகளை 'எக்ஸ்கர்ஷ'னுக்கு அழைத்து வந்திருக்கிறேன். இதோ பாருங்கள்!'' என்று எங்கள் பர்மிட், பள்ளிக்கூடக் கடிதங்கள் எல்லாம் எடுத்துக் காட்டினேன்.

என் காகிதங்களை வெகு நேரம் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவன் போல், ''உம்மைப்பற்றித் தவறாக நினைத்ததற்கு மன்னிக்க வேண்டும். உமக்குத் தெரியாமலே இந்த விஷயத்தில் மாட்டிக் கொண்டு விட்டீர். ஆயினும் நீர் ஓர் உபகாரம் செய்யவேண்டும். தட்டக்கூடாது'' என்றான்.

''என்ன...நான் என்ன செய்ய முடியும்?'' என்று உளறினேன்.

''அந்த வெடிகுண்டு வேலப்பன் பெரிய திருடன். பல தேச ரகசிய ஏஜண்டுகள் தொடர்பு உள்ளவன். இதுவரை முயன்றும் அவன் தப்பிக் கொண்டே வருகிறான். இப்பொழுது தேசத் துரோகமான காரியம் ஒன்றில் ஈடுபட்டிருக்கிறான். அது சம்பந்தமாகத்தான் அவன் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். அந்த ஆள் நீர்தான் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறான். அதுவும் நல்லதுதான். நீர் மட்டும் உபகாரம் செய்தால் அவனை நிச்சயம் பிடித்துவிடலாம்.''

''நான் எப்படி....?''

''நீர் ஒன்றும் செய்யவேண்டாம். அவன் வரச் சொன்னபடி நீர் போகவேண்டும்.''

''ஐயையோ! அவன் என்னைக் கொன்றுவிட்டால்.''

''அதைப்பற்றி உமக்கு ஏன் கவலை? உடுப்பு இல்லாத போலீஸ்காரர்களைச் சுற்றியும் நிற்க வைக்கிறேன். ஏதாவது ஆபத்து என்று

ஒரு சிறு சப்தம் போட்டால் ஒத்தாசை செய்வார்கள். நீர் கவலையே படவேண்டாம்.''

எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

''சரி ஆகட்டும்; போகிறேன். ஆனல் அவன் என்ன கேட்பான், நான் என்ன பதில் சொல்வது என்பதெல்லாம் புரியவில்லையே'' என்றேன் பரிதாபகரமாக.

''அவன் எதிர்பார்த்த ஆள் நடித்துபோல், அதில் இன்னும் சம்பந்தம் உள்ளவர்கள் யார், யார் என்று தெரிந்து என்னிடம் வந்து சொல்லும்; நான் கவனித்துக் கொள்கிறேன்.''

நான் ஒரு மாதிரியாகத் தலையை ஆட்டினேன். 'போலீஸ் ஸ்டேஷன்' கட்டடத்திற்கு அருகே இறக்கி விட்டு என்னைப் போகச் சொன்னுன்.

என் மனத்திற்குள் ஒரு பெரும் போராட்டம். இரவு 8-30 மணிக்கே கிளம்பினேன். பையன்களிடம் ஏதாவது சொன்னல் பயப்படப் போகிருர்களே என்று ஒன்றும் கூறவில்லை. ஜாக்கிரதையாக இருக்கும்படியும் 10 மணிக்கெல்லாம் திரும்பி விடுவதாகவும் கூறிவிட்டு நகர்ந்தேன்.

தெருககளில் வெளிச்சமும் இருளும் கலந்திருந்ததுபோல் என் மனத்திலும் பயமும் தைரியமும் மாறி மாறி எழுந்தன. சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே மெல்ல நடந்து அந்த விலாசத்தைக் கண்டுபிடித்தேன். மணி ஒன்பது.

மெல்ல வீட்டை ஆராய்ந்தேன். ஒரே இருள். கீழ்ப் பாகம் ஏதோ கிடங்கு போல் இருந்தது. மாடியிலிருந்து ஜன்னல் வழியாக லேசாக வெளிச்சம் தெரிந்தது. யோசித்துக் கொண்டே மெல்லக் கதவைத் தட்டினேன். யாரோ கதவைத் திறப்பது தெரிந்தது.

''யார்?'' என்ருன் அவன்.

''நான்தான்..உம்..'' என்று குளறினேன். என்ன சொல்வது என்று யோசனை.

''சரி, சரி..மாடிக்குப் போம்..''

ஒவ்வொரு படியையும் அளப்பது போல் நிதானமாக ஏறினேன். விசாலமான அறை. மத்தியில் ஒரு மேஜை. அதைச் சுற்றிலும் நான்கு நாற்காலிகள். எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தான் வெடிகுண்டு வேலப்பன். என்னைக் கண்டதுமே எழுந்து வந்தான் புன்சிரிப்புடன். அவன் சாதாரணமாக இருந்ததைவிட, சிரிப்பு இன்னும் பயங்கரமாக இருந்தது.

''உம்மை எவ்வளவு நாட்களாக எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறேன், தெரியுமா?''

''உஹூம்..''

''எல்லாம் சௌகரியம்தானே? அந்தக் கோவா சம்பந்தப்பட்ட காகிதங்களைக் கொண்டு வந்திருக்கிறீர் அல்லவா!''

நான் பேசாமல் விழித்தேன்.

''என்ன யோசனை! பணம் போதாதா?''

''அதற்கில்லை..வந்து..''

அவன் கை, கால்சட்டைப் பைக்குள் நுழைந்தது. அந்தக் கை வெளியே வந்த பொழுது ஒரு துப்பாக்கி இருந்தது.

அதிர்வெடி, பட்டாசு வெடித்தாலே பயத்தினுல் காதைப் பொத்திக்கொள்ளும் எனக்கு, துப்பாக்கியைப் பார்த்தால் எப்படி யிருக்கும்! உயிரே போய்விட்டது போலிருந்தது. இனிப் பேசாமலிருந்தால் சுட்டுக் கொன்றுவிடுவான் என்று நடுக்கம் எடுத்தது.

அவன் எதிர்பார்த்த ஆள் நான் இல்லை என்பதையும், என் உண்மை விவரங்களையும் கூறி, விட்டுவிடும்படிக் கெஞ்சினேன்.

அப்படியே அசந்துவிட்டான் அவன். தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டான். குறி பார்த்த துப்பாக்கி அப்படியே இருந்தது.

''எங்கள் ரகசியத்தைத் தெரிந்து கொண்ட உன்னை உயிரோடு விடுவதே ஆபத்து....?''

''ஒரு குற்றமும் செய்யாத என்னைக் கொல்வதில் உனக்கு என்ன லாபம்? என்னை விட்டுவிடு. நான் யாரிடமும் உன்னைப் பற்றிச் சொல்லமாட்டேன்.''

''எனக்கும் உன்னைக் கொல்ல மனமில்லைதான். ஆனல்

என் கூட்டாளிகள் இனி இரண்டு மூன்று ஆயிரமாவது தந்தாலன்றி விடமாட்டார்களே!''

''ஐயோ, நான் பணத்துக்கு எங்கே போவது?..''

''எமலோகத்திற்குத்தான்..''

''பையன்கள் என்னிடம் கொடுத்திருக்கும் பணம் எல்லாம் சேர்த்தாலும் ஆயிரம் ரூபாய் தானே தேறும்? அதை எப்படி..''

''அந்தக் கஷ்டம் உனக்கு ஏன்? நானே எடுத்துக்கொள்கிறேன்!'' என்று மெல்ல என் பையில் கை விட்டு இழுத்தான். ஒரு கவர் வந்தது. அற்குள் நோட்டுக்கள் கத்தையாக இருந்தன. 'இந்தப் பணம் பூராவையும் இவனிடம் கொடுத்துவிட்டால் என் கதி என்ன? என்னை நம்பி என்னோடு வந்திருக்கும் பையன்களின் கதி என்னவது?' நினைக்கும்போதே எண்ணிக்கொண்டிருந்த நோட்டுக்களில் ஒன்று நழுவிக் கீழே விழுந்தது. அதை எடுப்பதுபோல அவன் காலடியில் குனிந்தேன். என் மனம் இரும்பாயிற்று. இரு கைகளாலும் அவன் இரு கால்களையும் பற்றி, முழுப் பலத்துடன் ஓர் உந்து உந்தித் தள்ளினேன்.

வெடிகுண்டு வேலப்பன், அடியற்ற மரம் போல் தடாலென்று கீழே விழுந்தான். அவன் மண்டை தரையில் பலமாக மோதியது. கையிலிருந்த துப்பாக்கி நழுவி, தூரத்தில் விழுந்தது.

துப்பாக்கியைத் தாவி எடுத்துக் கொண்டேன். உதவிக்குப் போலீஸ் காரர்களை நிறுத்தி வைப்பதாக அந்த ஸி. ஐ. டி. சொன்னது ஞாபகம் வந்தது. பணத்தைப் பத்திரப்படுத்திக் கொண்டே, ''போலீஸ், போலீஸ்!'' என்று கூவினேன். கீழே காவல் இருந்தவன் மாடிப்படி ஏறி வருவது தெரிந்தது.

அவன் உள்ளே வந்தால் உண்மை தெரிந்துவிடும். ''ஓடு, ஓடு, போலீஸைக் கூப்பிடு. அவசரமாக ஓடு'' என்று கத்தினேன்.

வெடிகுண்டு வேலப்பன் பேச்சு மூச்சற்றுக் கீழே விழுந்திருப்பதையும், மண்டையிலிருந்து லேசாக ரத்தம் வருவதையும், என் கையில் துப்பாக்கியையும் கண்ட அவன் மிரண்டு அங்கிருந்து போனான். எடுத்தான் ஓட்டம்!

பத்து நிமிஷத்திற்கெல்லாம், ஓர் இன்ஸ்பெக்டரும் ஐந்தாறு போலீஸ் வீரர்களும் வந்தார்கள். நான் அவர்களுடன் ஸ்டேஷனுக்குப் போய்விட்டு, என் ஜாகைக்குப் போவதற்குள் விடியற்காலமாகி விட்டது.

எனக்குத் தூக்கமே வரவில்லை. 'எவ்வளவு மகத்தான தீரச் செயல் செய்துவிட்டோம். ஒரு பெரிய தேசத் துரோகியைப் பிடித்துக் கொடுத்திருக்கிறோம். நம்மை உலகமே புகழப் போகிறது. நிறையக் கௌரவம் கிடைக்கும். பத்திரிகைகளில் எல்லாம் நம்மைப்பற்றிப் பிரமாதமாக எழுதுவார்கள்' என்றெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்தேன்.

மறுநாள் கோர்ட்டிலே ஒரே கூட்டம். வெடிகுண்டு வேலப்பனும், ஸி. ஐ. டி. என்று நடித்த ஆசாமியும் கூண்டுக்குள் நின்று கொண்டிருந்தனர்.

பணத்தோடு ஊருக்குப் புதிதாக வருபவர்களை உளவறிந்து கொண்டு, இம்மாதிரி ஏமாற்றிப் பணம் பிடுங்கி வந்த கொள்ளைக் காரர்கள் எனக் குற்றம் சாட்டப் பட்டனர் அவர்கள்.

எனக்குப் பெரிய ஏமாற்றம்! மிகப் பெரிய, உலகப் புகழ்பெறும் காரியத்தைச் செய்துவிட்டோம் என்று மகிழ்ந்திருந்த எனக்கு அவர்கள் வெறும் திருடர்கள்தான் என்பதைக் கேட்டதும் என் மகிழ்ச்சி மங்கிவிட்டது. என் சாட்சியத்தைக் கதை போல் ஒப்புவித்தேன்.

அன்றே என் வீரச்செயலைப் பாராட்டி, போலீஸாரின் ஆதரவில் ஒரு பதக்கமும், பாராட்டுப் பத்திரமும் கொடுத்தார்கள். பையன்கள் எல்லாம் மகிழ்ச்சியினால் குதித்தார்கள்.

ஆயினும் அதிலிருந்து உல்லாசப் பிரயாணம் என்றாலே எனக்கு யோசனைதான்.

ஆங்கில ஆசிரியர் கதையை முடித்தார். வகுப்பு அறை அமைதியாக இருந்தது.

புரட்சி ஓங்குக!

'சுறமீன்'

'உங்கள் நடவடிக்கைகளை நோக்கும் போது, மிகுந்த வருத்தத்துடன் இவ்வருட நன்னடத்தை மெடலை நிறுத்தி வைக்கிறோம்.'

நோட்டீஸ் போர்டில் இந்த அறிவிப்பைக் கண்டதும் சீறி எழுந்தார்கள் மாணவர்கள். என்ன இருந்தாலும் கல்லூரி மாணவர்களல்லவா? 'தன் மானம் சாகும் போது ஆளும் சாகிறான்' என்ற 'விட்டிய'ரின் வாக்குப்படி தன் மதிப்புத் தலை விரித்தாடுபவர்களல்லவா? ''உடைடா கண்ணாடியை! கிழித்தெறிடா சர்க்குலரை!'' என்று அவர்களில் ஒருவன் கத்த, குபீரென்று நோட்டீஸ் போர்டை நோக்கிப் பாய்ந்தனர் அந்த மாணவர்கள் அனைவரும். 'பட பட'வென்று 'போர்டி'ன் மேற்புறமிருக்கும் கண்ணாடி நொறுங்கும் சப்தம் கேட்டது. கல்லூரிப் பியூன் தனி ஆள். அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மாணவர்களைத் தடுத்தால் நிச்சயம் அவர்களால் தாக்கப்படுவான். 'நமக்கேன் இந்த வம்பு?' என்று பிரின்ஸிபால் அறைக்கு விரைந்து விட்டான், தகவலைத் தெரிவிக்க. எதிர்ப்புற மாடியிலிருந்து சில பேராசிரியர்களும், தூரத்தே யிருந்து மாணவிகளும் இந்த அமர்க்களத்தைப் பார்த்து நகைத்துக்கொண் டிருந்தனர்.

'மாணவர் குழாம்' புறப்பட்டது, கோஷங்களை எழுப்பியவாறே. ''கல்லூரி நிர்வாகம்-'' என்று ஒருவன் ஆரம்பித்தான்.

''ஒழிக'' என்ற பதில் கிடைத்தது.

''நன்னத்தை மெடலை..''

''இப்போதே தா.''

''மாணவர் நடத்தைக்கு..''

''மதிப்புக் கொடு.''

''ஐந்தாம் படை..''

''ஒழிக!''

அவர்கள் எழுப்பிய சுலோகங்களுக்கு அர்த்தம் அவர்களுக்குத்தான் தெரியும். மாணவர் வரிசை 'புதுக் கட்டட'த்தை அடைந்தது. பேராசிரியர்களால் இவர்களது கூச்சலில் பாடம்கூட நடத்த முடியவில்லை. சற்று நேரம் 'லெக்ச'ரை நிறுத்தி விட்டனர். அங்கிருந்து ஊர்வலம் கடைசியாக மகிழ மரத்தை அடைந்தது. மாணவர் தலைவன் மன்னார்சாமி

பேசினுன்; ''ஏ, மாணவ சமுதாயமே! உங்களுக்கு வெட்கமில்லையா? கல்லூரியின் பரந்த நம் மாணவக் கடலினிடையே நன்னடத்தை பெற்ற மாணவன் ஒருவன்கூட இல்லையென ஏகாதிபத்திய நிர்வாகம் தீர்மானித்து விட்டதே!

நிர்வாகம் நம்மிடத்தே கண்ட தவறென்ன? சரியான பதிலை மட்டும் அவர்கள் தரவில்லையேல் கிளர்ச்சி செய்யுங்கள். உங்களது தன்மானம் பறி போகாது காத்து நில்லுங்கள்.''

''செய்வோம்'' என்ற ஆரவாரக் கூச்சல் எழுந்தது அவர்களிடையே. உடனேயே கூட்டம் நாலாபுறமும் சிதறியது. கிளர்ச்சியும் ஆரம்பித்தது கனவேகத்துடன். கிளர்ச்சி ஆரம்பித்து விட்டது என்பதற்கு அறிகுறியாக மாணவர்களின் பிரதி நிதியாக 'ஆட்டம் பாம்' படார் என வெடித்து, கல்லூரிக் கட்டடத்தையே ஓர் ஆட்டம் ஆட்டி வைத்தது. உடன் வந்த மணிச் சப்தம் மாணவர்களை வீட்டுக்கு விரட்டியது. 'ஓய்ய்' என்று கூக்குரலிட்டுக் கொண்டு புறப்பட்ட மாணவர்கள் திரும்பவும் கோஷங்களைக் கிளப்பியவாறே சென்றனர்.

* * *

மன்னர்சாமி மனது பொங்குமாங்கடலாயிருந்தது. அவனுக்கு எப்படியாவது அந்த வருஷத்திய நன்னடத்தைப் பரிசைப் பெற்ருக வேண்டும். நடத்தையை யார் கேட்கிருர்கள் பரிசுக்கு? மாணவர்கள்வாக்குத்தானே? அத்தனை பேரது வாக்குச் சீட்டும் மன்னருக்கு நிச்சயம். ஆனுல் பிரின்ஸிபால் முகத்திலடித்தாற்போல் 'சர்க்குலர்' அனுப்பி விட்டாரே!

இந்த மாதிரி சிந்தனைக் கடலினின்று குளித்துக் குனிந்து எழும்போது 'எஸ். ஓ. எஸ்.' செய்தி கிடைத்ததும் அவனது தந்தை ஓடோடியும்வந்தார், மகனை நீர்க் கண்டத்தினின்று தப்புவிக்க. ''என்ன மன்னரு, ஊரெல்லாம் அமர்க்களமாயிருக்கிறதே, நீ காலேஜை இரண்டு பண்ணுகிற சமாசாரம்! வயதாகியும் பொறுப்புணர்ச்சி தோன்றவில்லையே உனக்கு?'' என்று கேட்டார். அதற்குமேல் அவரால் கடிந்து கொள்ள முடியவில்லை. அதுதான் பிள்ளைக்கு வயதாகி விட்டதே! ஆனுல் இந்த வார்த்தைகளிலேயே ரோசம் வந்துவிட்டது அவனுக்கு. ''ஊர் பல விதம் தான் சொல்லுமப்பா. அதற்கு நாவு ஒன்ரு, இரண்டா? பல்லாயிரமப்பா! நீங்கள் சரியாக ஆராய்ந்து கூறினீர்களா?'' என்று நாடக மேடை இலக்கியத்தை அநுபவத்

பையன்: பட்டாஸ் எல்லாம் தீந்துபோச்சு. கொஞ்ச நாழி இருட்டிலேயே உட்கார்ந்து மிருதங்கம் வாசி அப்பா!

அப்பா:....?

துக்குக் கொண்டு வந்தான் அவன். அவனுக்கு மனத்திற்குள் ஒரு நினைப்பு. கல்லூரி கோஷ்டிகளுக்கும், ஆர்ப்பாட்டத்திற்கும் இப்போது தலைவனாக இருந்தால் பிற்காலத்தில் ஏதாவது துறையில் 'ஷைன்' பண்ணலாம் என்று. அவனது தந்தையோ 'மஞ்சள் தண்ணீர் தெளித்து விட்ட ஆட்டை இனி என்ன செய்ய முடியும்?' என்று எண்ணியவாறே அகன்று விட்டார்.

* * *

பிரின்ஸிபால் பஞ்சாமிர்தம் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். பழனியிலிருந்து அவரது மைத்துனன் கொண்டு வந்த பிரசாதம் அது. அப்போதுதானா அவர் வெடி குண்டைத் தூக்கிப் போடவேண்டும்? "என்ன அத்திம்பேரே! ஊரெல்லாம் அமர்க்களப்படுகிறதே! உங்களை எதிர்த்து ஒரு மாணவன் கலாட்டா செய்கிறானாம். நீங்களும் என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கிறீர்களாமே!" என்றான். சமாளித்துக் கொண்டார் பஞ்சாமிர்தம். "என்னடா சீமாச்சு. இப்போது தான் வந்திருக்கிறாய், உனக்கு எப்படி சமாசாரம் தெரிந்தது அதற்குள்?" என்று கேட்டார். "அதுதான் வழியெல்லாம் வண்டிக்காரன் பேசிக்கொண்டே வந்தானே, அத்திம்பேரே!" என்று அவர் மேல் மற்றொரு குண்டை வீசினான் சீமாச்சு. பஞ்சாமிர்தம் சமாப்தி ஆகிவிட்டார்.

"டேய் சீமாச்சு! விஷயம் அவ்வளவு தூரத்துக்குப் போய் விட்டதா? என்னவோ பையன்களுக்கு நம் சொரூபத்தைக் காட்டுவானேன் என்று பொறுமையாக இருந்தேன். இனிமேல் அந்த மாதிரி செய்தி உன் காதில் படுகிறதா பார்!" கர்ஜனை செய்தது பிரின்ஸிபால் பஞ்சாமிர்தமல்ல. பழனிப் பஞ்சாமிர்தம் தான். அவரது மனத்திடையே உறுதி தாண்டவமாடியது தற்போது. தீர்மானம் செய்து விட்டார், சீடவர்க்கத்தினரின் திமிரைச் சீவி எறிந்திட.

மறுநாள் கல்லூரி நீச்சல் குளத்தருகே இருக்கும் மகிழ மரத்தடியில் மாணவர் தலைவர்களின் ரகசியக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. கரகோஷத்துக்கிடையே அவர்கள் தீர்மானங்கள் பலவற்றை நிறைவேற்றினார்கள். ஒரு வழியாகக் கூட்டமும் கலைந்தது. கோஷங்களை மறுமுறை ஆரம்பித்தனர். நடு நடுவே வெடிச் சத்தமும் எழுந்து மாணவர்களின் புரட்சி மனப்பான்மை இதுதான் அல்லது இப்படித்தான் என்று எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தது. மாணவிகளை நெருங்கிக் கேட்ட மன்னார்சாமி தங்களது கிளர்ச்சியில் அவர்கள் பிரதிநிதித்துவம் வகிக்க மறுத்து விட்டதைக் குறித்து உளம் நொந்தான். எரிச்சலாக வந்தது அந்தச் சிறுபான்மை வர்க்கத்தினரிடம். இருந்தாலும் என்ன? குறிப்பிட்ட சமயத்தில் கல்லூரியின் பல்வேறிடங்களில் வைத்திருக்கும் வெடிகளைக் கொளுத்தி, பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்பது

அவனது திட்டம். மாணவர்களிடையே மட்டும் ரகசியத் தகவல் பரவியிருந்ததால் அவர்கள் நிகழும் சம்பவத்தில் தாங்களும் அதிர்ச்சியடையாதிருக்கத் தயார் செய்து கொண்டனர். மாணவிகள் எக்கேடு கெட்டுப் போகட்டும். அவர்களின் மறுப்புக்கு இது ஒரு சவால்!

அநேகமாக எல்லா வகுப்புகளுக்கும் 'லீஷர்' இல்லாத பீரியட் காலை பதினொன்றிலிருந்து பன்னிரண்டு வரைதான். இவர்களது திட்டமும் அப்போதுதான். நேரம் நெருங்க நெருங்க மன்னுருக்கு ஒரு புறம் குதூகலமாயும் மற்றொரு புறம் திகிலாயுமிருந்தது. அதை அவன் லட்சியம் செய்யவில்லை. பிரின்ஸிபாலுக்கோ ஏதோ ஒரு விபரீதம் நடக்கப் போகிறதென்று உள்ளுணர்வு எச்சரிக்கை செய்தது. தன்னுடைய பியூனைக் கூட அதிகம் வெளியில் அனுப்பாமல் நிறுத்திக் கொண்டார் காவலாக.

முதல் பீரியட் ஒய்ந்து ஐந்து நிமிஷம் இடைவேளைக்குப் பின் இரண்டாம் பீரியடும் அமைதியாகத் தொடங்க ஆரம்பித்தது. அந்தப் பயங்கர அமைதி மாணவர்களின் உள்ளக் குமுறல் பொங்கும் முன்—எழும் முன்னோடியாக இருந்தது.

ஓர் உருவம். மெதுவாகப் பிரின்ஸிபாலின் அறைப் பக்கம் சென்றுகொண் டிருந்தது. அதன் கண்களின் கறுப்புக் கண்ணாடி, தலையில் சுற்றிக் கட்டப்பட்ட கர்ச்சிப், பெரிய கொள்ளையை நடத்தவிருக்கும் முகமுடித் திருடனை நினைப்பூட்டின. அதன் வலது கை, நிஜார்ப்பையில் சென்றதும் செல்லாததுமாக இருந்தது.

பிரின்ஸிபாலின் அறையோ ஒரு கட்டட வரிசையின் ஆரம்பத்தில் இருந்ததால் மூன்று பக்கங்கள் வெளிப்புறமாக அமைந்திருந்தன. வாயிற்புறத்துக்கு எதிர்ப்பக்கமாக நின்றது அந்த உருவம். டெலிபோன் இருந்த இடத்தின் வலது

நிற்பவர்: என்னடா வாண்டுப் பயலே, காலிலே என்னடா ஓடுகிறது? சீக்கிரம் பார்!

பையன்: (குனிந்து பார்த்து) ஒரு சின்ன எறும்புதான் மாமா!

புறமிருந்த பிரின்ஸிபால் மும்முரமாகக் கல்வியிலாகா அறிக்கையொன்றைப் படித்துக்கொண்டிருந்தார். உருவம் தனது வலது கையை அந்த அலங்கார அமைப்பு ஜன்னல் வழியாக உள்ளே நீட்டியது? அது பிடித்திருந்த வஸ்து.. ....?

கைத் துப்பாக்கிகள் கன்னங்கரேலென்று காட்சியளித்துக் காண்போரைக் கலக்கின.

மறுநொடி..பிரின்ஸிபாலின் முதுகுக்கு நேரே அதைக் குறி வைத்தது உருவம்.

மணி..பதினொன்று..பத்து.

டுமீல்!..

படார்...படார், பட்....பட்..எங்கிருந்தோ கோரக் குரலில் சப்தங்கள் எழுந்தன.

ஆனால்..கேப் துப்பாக்கிச் சப்தத்தாலும் உருவத்தின் தோற்றத்தாலும் பதறி, பிரின்ஸிபால் விருட்டென்று ஜன்னலை நோக்கி வந்தார், அவசரமாகக் கையை வெளியே எடுக்க..

ஆனால்..சதி செய்துவிட்டதே! அலங்கார ஜன்னலின் அமைப்பு, உருவத்தின் கை விடுபடுவதினின்றும் தடங்கல் செய்துவிட்டதே! பிரின்ஸிபால், ஜன்னலில் மாட்டிக்கொண்டு விழிக்கும் உருவத்தின் கையைப் பிடித்து விட்டார்.

"பியூன்!" கை, பியூனின் கைக்கு மாறியது. உருவம் துடித்தது. டெலிபோன் ரிஸீவர் பிரின்ஸிபால் கையில்.

"விடப்போகிறாயா இல்லையா! மாணவர்களின் சிறு கூட்டம், பியூனை நோக்கி உறுமியது. ஏன், பிரம்மாண்டமான மாணவர் தொகையில் மற்றவரெங்கே? சந்தர்ப்பம் சதியாளரின் நெஞ்சைப் பிடித்துவிட்டது.

தூரத்தே தெரிந்தது போலீஸ் சார்ஜெண்டின் தலை! பியூன்மேல் பாயவிருந்த கூட்டம் திகைத்தது!

மாணவர்களின் மற்ற பெரும் பகுதி அச்சமயம் வேறிடத்தில் வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. அதன் இடையே..?

உப தலைவன் உமாபதி ஸ்டெரச்சர்ஒன்றில் தூக்கிச் செல்லப்பட்டுக்கொண்டிருந்தான்.

பிரின்ஸிபால் அறையை நோக்கி ஓடி வந்தான் ஒருவன்.

"வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன், ஏகாதிபத்தியத்தை எதிர்த்துச் சொற்பொழிவாற்றத் தவறுதலாக பிளாட்பாரத்தில் ஏறிவிட்டான் உமாபதி. நாற்காலி, மேஜை காலினடியில் முன்பு பேசியபடியே வெடிகளை அவனே வைத்திருந்ததை அவசரத்தில் மறந்துவிட்டான். மேஜை மீது கை ஊன்றிப் பேசமுயன்றவன், திடீர் வெடியின் அதிர்ச்சியால் தாக்கப்பட்டு முன்புறம் விழுந்தான். இரண்டடி உயர மேடை..பலத்தஅடி.." கூட்டம் அநுதாபத்துடன் கலைந்தது.

"அப்பா.........!" குரல் கேட்டதும் திரும்பினேன்.

என் மகன் கையில் பத்திரமாய் ஏதோ காகிதத்தை நீட்டிய வண்ணம் நின்றுகொண்டிருந்தான்.

"என்ன....?" என்று சற்று அதட்டினாற்போல் கேட்டேன்.

"கையெழுத்துப் போட்டுத் தரணும். 'பிராக்ரஸ் ரிப்போர்ட்' அப்பா" என்று விநயமாகக் கேட்டான் விசுவம்.

நாற்காலியில் சாய்ந்து வீற்றிருந்தவன், கடிக்கக் கூடாத இடத்தில் பூச்சியொன்று கடித்துவிட்டது போல் திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தேன். கையிலிருந்த தினசரி மடியில் விழுந்தது.

"பிராக்ரஸ் ரிப்போர்ட்டா?"

எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. இதற்கு முன் நான் எவ்வளவோ முறை அவன் 'பிராக்ரஸ் ரிப்போர்ட்'டில் கையெழுத்திட் டிருக்கிறேன். ஆனால் ஒரு தடவையாவது அவன் நேரிடையாக வந்து

'ரிப்போர்ட்'டைக் காட்டியது கிடையாது. ஒன்று, அவன் தாய் அவனுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு வந்து, அவன் 'பிராக்ரஸ் ரிப்போர்ட்'டை நீட்டுவாள். இல்லையெனில் அது தானுகவே இறச்கை முளைத்து மேஜைமீது என் கையெழுத்துக்காகக் காத்துக் கிடக்கும். இந்தத் தடவை ஒருநாளு மில்லாத திருநாளாக விசுவமே 'ரிப்போர்ட்'டைக் கொண்டு வந்து நீட்டுகிருனே, 'என் பிள்ளையாண்டானுக்கு என்ன வந்து விட்டது திடீரென்று!' திகைத்துப்போய் அவன் நீட்டிய தாளை வாங்கினேன்.

''இங்கிலீஷிலே நாற்பது..கணக்கிலே எண்பத்தி மூன்று.. என்ன..? என் சாமியோவ்! டேய், இது யாருடைய ரிப்போர்ட்..?''

பிராக்ரஸ் ரிப்போர்ட்டில் பெயரைப் பார்த்தேன்.

''என்னுடையதுதான் அப்பா.''

''நீ படிக்க ஆரம்பித்ததிலிருந்து இதுவரை நடந்திருக்கும் கணக்குப் பரீட்சை பார்க்குகளையெல்லாம் சேர்த்தால்கூட எண்பத்திமூன்று வராதே! உன் கிளாஸிலே வேறு 'எஸ். விசுவநாதன்' கட்டாயம் இருந்தாக வேண்டுமே!''

''என் வகுப்பிலேயே நான் ஒருவன்தானப்பா அந்தப் பெயரில்.''

கையிலிருந்த ரிப்போர்ட்டைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நாற்காலியை விட்டு எழுந்தேன்.

''ஏய் லலிதா..இங்கே ஓடி வா, ஜல்தி. என் கையிலே எட்டாவது அதிசயம் இருக்கிறது'' என்று இரைந்தேன்.

லலிதா நாங்கள் இருந்த இடத்திற்கு வந்தாள்.

''இதைப் பார்த்தாயா..?''

''ஓ..பார்த்தேனே. குழந்தை சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடனேயே காண்பித்தானே! வழக்கம்போல், விழுந்து விழுந்து படித்தது வீணுகாமல் இந்த மட்டிலாவது கொடுத்திருக்கிருர்கள். அப்படியும் இரண்டொரு பாடங்களில் எதிர்பார்த்ததைவிடக் குறைவாம்!''

''இந்த ரிப்போர்ட்டில் இருப்பது உன் பிள்ளையின் பேர்தானு?''

''என்ன, அச்சான்யமாகப் பேசுகிறீர்கள்?''

''இவ்வளவு மார்க்குகள் வாங்குமளவுக்கு உன் பிள்ளை அந்தஸ்து உயர்ந்துவிட்டதா, இல்லை, மார்க்குதன் கௌரவத்தைக் குறைத்துக் கொண்டுவிட்டதா?''

''உங்கள் பேச்சு உங்களுக்காவது புரிகிறதோ?''

''உனக்கு இப்போது எது புரியும்? உன் பிள்ளை கணக்கில் நூற்றுக்கு எண்பத்தி மூன்று மார்க்குகள் வாங்கியிருக்கிருன். நாளைக்கே ஐ.ஏ.எ. எஸ் பரீட்சைக்குப் போவான்! என்று நினைப்பு!

''டேய் விசுவம், இந்த மார்க்கெல்லாம் உனக்கு எப்படியடா கிடைத்தது?'' என்று கேட்டேன்.

''குழந்தையை என்ன கேள்வி கேட்கிறீர்கள்? நன்ருகப் பரீட்சை எழுதினுன்'' என்று குறுக்கிட்டாள் என் மனைவி.

''உன் திருவாயைக் கொஞ்சம் மூடிக்கொள். போ..உன் காரியத்தைப் பார்..''

விசுவத்தின் அம்மா சமையலறைக்குச் சென்ருள். ''என்னடா..நான் கேட்டேனே! பதிலைக் காணுமே?''

''நான்தான் அப்பா, படித்துப் பரீட்சையில் நன்ருக எழுதினேன்.''

''நன்ருக எழுதிஞயா?..கணக்கில் எண்பத்தி மூன்று வாங்கியிருக்கிருயே, எப்படி?''

''நான் இரண்டு கணக்குகளைத் தவிர பாக்கி எட்டுக் கணக்குகளையும் ரைட்டாகப் போட்டேன். ஒரு கணக்கில் வழியெல்லாம்கூடச் சரியாகப் போட்டேன்.''

''கொடுத்த பத்து கணக்கில் எட்டா சரியாகப் போட்டாய்? டேய், உலகத்திலே ஏதோ பெரிய பிரளயம் வரப் போகிறதுடா! பொய் சொல்லாதேடா..''

''பொய் இல்லை அப்பா..''

''நிஜமாகவா..? சரி, உன் கணக்குக் கேள்வித்தாளை எடுத்துக் கொண்டு வா. அதே கணக்குகளை என் முன்னுல் உட்கார்ந்து தவறின்றி போட்டுக் காண்பி.''

''அந்தக் கேள்வித்தாள் இப்போது எங்கேயோ இருக்கு..''

''எனக்குத் தெரியுமே! சரி நான் உனக்கு எட்டு கணக்குகள் தருகிறேன். சரியாகப் போட்டுக் காண்பிக்கிருயா?''

''சரி.''

''எட்டு வேண்டாம். முதலில் ஒன்று போடு பார்க்கலாம். உன் கணக்கு நோட்டையும் பென்சிலேயும் எடுத்து வா.''

அதில் நான் ஒரு கணக்கைக் கொடுத்தேன்.

விசுவம் கணக்கைப் போட வாரம்பித்தான். ஆரம்பித்தவன் பத்து நிமிடங்கள் ஆகியும் தலையை நட்டுக்கொண்டு கணக்கைப் போட்டுக்கொண்டேயிருந்தான்.

''டேய், நீ கணக்கைப் போட்டது போதும். எங்கே, பதினுலாம் வாய்பாட்டைச் சொல்லு.''

விசுவம் ஆரம்பித்தான்.

''ஒரு பதினுலு, பதினுலு. இரு பதினுலு, இருபத்தெட்டு. மூன்று பதினுலு, முப்பத்தெட்டு..''

பளீர்!

அவ்வளவுதான். மேலே தொடர்ந்து வாய்பாட்டை அவனுல் கூற முடியவில்லே.

''எனக்கா காது குத்தறே? ஏய், நான் உன் தகப்பன்டா. உண்மையைச் சொல்லிவிடு. யாரைப் பார்த்துக் காப்பியடித்தாய்?''

''நான் காப்பியடிக்கவே இல்லேயப்பா..'' என்ருன் அவன் கேவிக்கொண்டே.

''நீயாகவே போட்டாயா..? சரி, உன் கிளாஸிலே கணக்கில் முதல் மார்க் வாங்கியிருக்கிறவன் யார்?''

''முதல் மார்க்கை நான்கு பேர் வாங்கியிருக்கிருர்கள். மூன்று பையன்களும் ஒரு பெண்ணும்.''

''இந்த நாலு பேரில் யாரைப் பார்த்து நீ காப்பியடித்தாய்?''

விசுவம் பதில் பேசாமல் தன் கன்னத்தைத் தடவிக்கொண்டு நின்ருன்.

''சரி; உன் பக்கத்தில் யார் உட்கார்ந்தது என்பதையாவது சொல்லு..''

''வஸந்தா என்கிற பெண்.''

''கணக்கிலே முதல் மார்க் வாங்கியிருக்கிற பெண்ணு அவள்?''

''ஆமாம்..''

''டேய், வெட்கமாயில்லே. ஒரு பெண் பேப்பரைப் பார்த்துக்



"ஜோஸியர் ஐயா! உங்க கண்ணாடியை ரிப்பேர் பண்ணிவிட்டேன். நீங்க துட்டுக் குடுக்க வேணும். அதுக்குப் பதிலா என் கையைக் கொஞ்சம் சரியாய் பார்த்துச் சொல்லுங்க போதும்!"

காப்பியடித்தா மார்க்கு வாங்கியிருக்கிறாய்..ஷேம்..!"

"இல்லையப்பா..நான்.."

"என்னடா இல்லை..?"

"நான் காப்பியடிக்கவில்லை அப்பா..அந்தப் பெண்ணே என்னைப் பார்த்து..

"தான் போட்ட கணக்குத்தாளை என் பக்கமாகத் தள்ளி வைத்தாள். நான் போட்டது சரியாயிருக்கிறதா என்று அவள் தாளைப் பார்த்து 'வெரிபை' பண்ணினேன்."

"அப்பவும் காப்பியடிச்சேன் என்று ஒப்புக்கொள்ள மாட்டேன் என்கிறாயே.."

"சரி..நீ போய்ப் படுத்துக் கொள். காலையில் நீ பள்ளிக்கூடம் போகும்போது நானும் உன்னோடு வருகிறேன். அந்தப் பெண் வசந்தாவை நானே கேட்கிறேன்.."

"அப்பா.."

"என்னடா, அப்பா? நீதான் காப்பியடிக்கவில்லையே. நான் உன் வாத்தியாரிடமும் கேட்கிறேன். கணக்கு, நாலாவது 'பிரீடு' தானே?"

"அப்படியெல்லாம் வந்து கேட்காதீர்கள் அப்பா."

"சரி, நான் கேட்கவில்லை. நீயே, 'நான் வசந்தாவின் பேப்பரைப் பார்த்துக் காப்பியடித்தேன். அதனால்தான் எனக்கு எண்பத்திமூன்று மார்க்குக் கிடைத்தது. இல்லையென்றால் 'சுட்டா' கூடக் கிடைத்திருக்காது' என்று நடு வகுப்பில் உன் உபாத்தியாயரிடம் ஒப்புக்கொள்கிறாயா?"

"அப்பா, அம்மாதிரி நடுக்கிளாஸில் சொல்லச் சொல்லாதீர்கள். வகுப்பில் பாதிக்கு மேலே 'கர்ல்ஸ்' அப்பா. அவர்கள் எல்லோரும் சிரிப்பார்கள். வேண்டாம் அப்பா." என்றான் கெஞ்சும் குரலில்.

"நீ காப்பியடித்தது கேவலமாகத் தோன்றவில்லை உனக்கு. அவர்கள் சிரித்தால் அது கௌரவக் குறைச்சலாகி விடுமோ? போ.. போ. போய்த் தூங்கு. காலையில் பார்த்துக்கொள்கிறேன்."

* * *

"விசுவம் எழுந்திருந்தானா இல்லையா....? எத்தனை நாழிகை தூங்குவான்....?"

"குழந்தை ராத்திரி வெகு நேரம், 'அம்மா, அப்பா என்னோடு நாளைக்காலையில் பள்ளிக்கூடத்திற்கு வரப்போகிறாராம். நான் நடுக்கிளாஸில் எல்லோருக்கும் முன்னால், வசந்தாவைப் பார்த்து காப்பியடித்தேன் என்று என் கணக்கு வாத்தியாரிடம் சொல்ல வேண்டுமாம். அப்பாவை என்னோடு பள்ளிக்கூடத்திற்கு வரச் சொல்லாதே, அம்மா. நான் இனிமேல் காப்பியடிக்கவில்லை....!' என்று சொன்னான். ஆமாம், உங்களுக்கு இருந்தாற்போலிருந்து என்ன ஆகிவிட்டது?"

"எனக்கா ஆயிற்று..? உன் பிள்ளைக்கல்லவா திடீரென்று ஏதோ ஆகிவிட்டது! நீயும்தான் 'பிராக்ரஸ் ரிப்போர்ட்'டைப் பார்த்தாயே! ஒரு வார்த்தை கேட்டியா? எப்படி அவனுக்கு ஒரு சில்லில் விழுந்த கொத்துப் புளியங்காய் மாதிரி, கணக்கில் எண்பத்தி மூன்று கிடைத்தது என்று யோசித்தாயோ?"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள், விசுவம் காப்பியடித்தான் என்று?"

"நான் மாத்திரம் சொல்கிறேனா? அந்தக் காரியத்தைச் செய்த உன் அருமந்தப் புதல்வனே சொன்னானே!"

"குழந்தை ஏதோ தவறு செய்து விட்டான். அதற்காக அவன் மானத்தை நடுக்கிளாஸில் வாங்க வேண்டுமா? விட்டுத் தள்ளுங்கள். இனிமேல் செய்யமாட்டான், பாவம்! இரவெல்லாம் தூங்காமல் அழுதுகொண்டிருந்தான்."

"ஆமாம்.. உன் பிள்ளை கவுரிமான்தான். எனக்குத் தெரியும் போ. என்னவோ சொல்வார்களே, அதுபோல் வழக்கை என்னிடமிருந்து நீயே பிடுங்கிக்கொண்டாய். உன்னை நீயே நீதிபதியாக நியமனம் செய்து கொண்டாய். குற்றவாளியைத் தீர விசாரித்து தண்டிக்காமல் விடுதலை செய்கிறாய். குற்றவாளிக்கு என்ன எண்ணம் தோன்றும் தெரியுமோ? 'குற்றம் செய்தால் எப்போதும் தீர்ப்பு இப்படித்தான் இருக்கும் போலிருக்கிறது. சரி, நடத்துவோம் நம் தொழிலை!' என்று பழையபடி குற்றங்கள் புரிந்துகொண்டே இருப்பான். ஆகையால், இந்த விஷயத்தில் நீ தலையிடாதே. இம்மாதிரி நடத்தைகளை முளையிலேயே கிள்ளி எறிந்தால்தான் வளராது. சரி.. சரி. விசுவத்தின் முகத்தில் ஜலத்தைத் தெளித்து அவனை எழுப்பு.."

"விசுவத்திற்கு தான் செய்தது தவறு என்று புரிந்துவிட்டது. இனி அதைச் செய்யக்கூடாது என்பதும் தெரிந்து விட்டிருக்கும். அதனால்.."

"லலிதா.. நான் இந்த விஷயத்தில் கறாராய் இருக்கப்போகிறேன். உன் பிள்ளையை நான் ஒன்றும் செய்துவிடப் போவதில்லை. தவிர, அவன்மீது நீ காட்டும் அக்கறையும் பரிவும் எனக்கும் உண்டு. நான் அவன் தகப்பன், அவன் தவறு செய்யும்போது அவனைத் தண்டித்தால் அவன்மீது எனக்கு அன்பில்லை என்று அர்த்தமில்லை. ஹூம்.. நீ போய்ச் சமையலைக் கவனி. நானும் விசுவமும் சீக்கிரம் கிளம்ப வேண்டும்."

* * *

"புத்தகங்களையெல்லாம் சரியாக எடுத்துக் கொண்டாயா? இந்தா, பிராக்ரஸ் ரிப்போர்ட். பத்திரமாய் ஒரு புத்தகத்திற்குள் வைத்துக்கொள்" என்று விசுவத்திடம் பிராக்ரஸ் ரிப்போர்ட்டைக் கொடுத்தேன்.

நானும் விசுவமும் வீட்டை விட்டுக் கிளம்ப ஆயத்தமானோம்.

"இருங்கள். எலுமிச்சம் பழச் சாதம் பிசைந்திருக்கிறேன். விசுவத்திற்கு டிபன் பாக்ஸில் போட்டுத் தருகிறேன்" என்று கூறிக் கொண்டே வந்தாள் என் மனைவி.

"காப்பியடிப்பவனுக்கு டிபன் ஒரு கேடா? ஒரு வேளை வயிற்றைக் காயப்போட்டால்தான் மூளை கூர்



கெட்டு வேலை செய்யாது..ஹூம் வாடா!''

''அப்பா..எப்படியப்பா கணக்கு வாத்தியாரிடம் நான் காப்பியடித்தேன் என்று சொல்வது? வேண்டாம்..அப்பா. இனிமேல் நான் செத்தாலும் காப்பியடிக்கவில்லை அப்பா! வகுப்பில் போய் நீங்கள் சொல்லச் சொன்னபடி சொல்ல வேண்டாமப்பா...''

நான் விசுவத்தின் கையைப் பிடித்தேன். அவ்வளவுதான், அவன் அழுதுவிட்டான்.

''அப்பா, இனிமேல் செய்ய மாட்டேன். ஒருபோதும் காப்பியடிக்க மாட்டேன். பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்ததும் சதா கணக்குகளைப் போட்டுப் போட்டு அப்பியாசம் செய்கிறேன். வாய்பாட்டைத் தங்குதடையின்றிப் பாராமல் நெட்டுருப் பண்ணுகிறேன்..அப்பா..'' என்று விக்கிக் கொண்டே கதறினான்.

அவன் தாயாருக்குத் தன் மகவு கண்ணீர் விட்டுக் கதறுவதைப் பார்த்துத் துக்கம் பீரிட்டது. அவள் கண்களிலிருந்து பொலபொலவென நீர் உதிர்ந்தது.

''நீ வாடா உள்ளே விசுவம்...'' என்று விசுவத்தின் கையைப் பிடித்தாள்.

''உள்ளே போகப் போகிறாயா, இல்லையா...?'' என்று அவளை நோக்கிக் கத்தினேன். உடனே அவள் தன் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு உள்ளே ஓடினாள்.

* * *

நானும் விசுவமும் அவன் பள்ளிக்கூடம் நோக்கி நடந்து கொண்டிருந்தோம்.

விசுவம், தனக்கு ஏதோ பெரிய மானபங்கம் ஏற்படப்போகிறது என்ற ஏக்கத்தோடு பலி ஆடுமாதிரி நடந்து வந்தான்.

''அப்பா..நான்..'' என்று ஆரம்பித்தான் விசுவம். நான் அவன் முகத்தைப் பார்க்காமல் நடந்து கொண்டிருந்தேன். சற்றுத் தூரம் நடந்ததும் என் வயிற்றில் என்னவோ புரண்டது. தொண்டையில் காறிற்று. உடனே பக்கத்தில் வந்துகொண்டிருந்த விசுவத்தைப் பார்த்தேன். அவசர அவசரமாய் அவன் கையைப் பிடித்துக் கொண்டேன். எதற்கு என்று எனக்குப் புரியவில்லை. என்னுள் என்ன நடந்தது என்று எனக்கே நிச்சயம் தெரியவில்லை.

விசுவத்தின் கன்னங்களில் உலர்ந்திருந்த கண்ணீரைக் கைக்குட்டையினால் துடைத்தேன். அவன் நெற்றியில் வழிந்த தலைமயிரைத் தூக்கித் தலையோடு ஒட்டித் தடவினேன்.

''விசுவம்...'' என்று ஆதுரத்துடன் கூப்பிட்டேன்.

''அப்பா......''

நான் என்ன பேச வாரம்பித்தேன் என்று தெரியாமல், சமாளித்துக் கொண்டு ''ஹூம்...அதோ அதுதானே உன் பள்ளிக்கூடம்?'' என்று கேட்டேன்.

''ஆமாம், அப்பா...''

''சரி...நீ பள்ளிக்கூடத்திற்கு மெதுவாகப் போ. நான் அந்த பஸ் ஸ்டாண்டிற்குப் போய், பஸ் ஏறி ஆபீஸுக்குப் போகிறேன். இனிமேல் காப்பியடிக்காதே. அது கெட்ட பழக்கம். உன் நன்மைக்காகத்தான் நான் சொல்கிறேன். காப்பியடித்தால் அப்புறம் உனக்குச் சுயமாகவே எதுவும் தெரியாமல் போய்விடும்..இந்தா எட்டணா. மத்தியான்னம் டிபனுக்கு வைத்துக்கொள். பள்ளிக்கூடம் விட்டதும் நேராக வீட்டுக்குப் போகவேண்டும். தெரிந்ததா, என்ன..?'' விசுவம் திகைத்துப் போய்விட்டான். ''சரி, அப்பா நான் இனிமேல் காப்பியடிக்கவே மாட்டேன்'' என்றான்.

பள்ளிக்கூட வாசலை அடைந்ததும் அவனிடமிருந்த பிராக்ரஸ் ரிப்போர்டை வாங்கிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தேன். விசுவம் அதை வாங்கிக்கொண்டு பள்ளிக்கூடக் காம்பவுண்டுக்குள் நுழைந்தான். நான் அவனை ஒரு முறை ஆசையோடு பார்த்துவிட்டுத் திரும்பினேன்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

தி நியூட்ரீன் கன்பெக்ஷன
கம்பெனி லிமிடெட்
சித்தூர் (ஆந்திரா)

எங்கள் சந்தோஷகரமான

தீபாவளி வாழ்த்துக்கள்

★

உயர்ந்த ஆப்டோன், லைன், மூவண்ணப்
பிளாக்குகளுக்கு எங்களைக் கேளுங்கள்

★

நியூடன் & கம்பெனி

8, வாலாஜா ரோட், மதராஸ் - 2.
டெலிபோன்: 86729

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542

Available in 5 colours in 1, 2, 4, 12 & 24 oz packings

RESEARCH CHEMICAL LABORATORIES

MADRAS-4 : BANGALORE-3 : NEW DELHI-1

ஜரிஸ் பவுண்டன் பேனு மைகள்

ராயல் ப்ளூ ப்ளாக், சிவப்பு, பச்சை, வயலெட்,
ரப்பர் ஸ்டாம்பு இங்குக[illegible], 1 அவு[illegible]ஸ், 2 அவு.,
4 அவு., 12 அவு., 24 அவு[illegible]டிகளில் கிடைக்கும்.

விவரங்களுக்கு எழுதுக:

ரிஸர்ச் கெமிகல் லாப[illegible]ரீஸ்,

மதராஸ்-4. :: பங்களூர்-3. :: புதுடில்லி-1.